# பார்வை



## ஆக்க இலக்கிய மலர் வெளியீடு – 2017

வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவை

மருதங்கேணி

# பார்வை

## (ஆக்க இலக்கிய மலர்)

*வெளியீடு*

*வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவை*

*பிரதேச செயலகம்,*

*மருதங்கேணி.*

# நூல் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "பார்வை" |
| நூலின் வகை | : | ஆக்க இலக்கிய மலர் |
| தொகுப்பாசிரியர் | : | செல்வி சே.செல்வசுகுணா<br>(கலாசார உத்தியோகத்தர்) |
| அட்டைப்படம் | : | திருமதி சிந்திஜா ஜெயசுலக்ஷன் |
| முதல் பதிப்பு | : | 08.12.2017 |
| தாளின் வகை | : | 70 g |
| பக்கங்கள் | : | 169 + xiv |
| புத்தகங்களின் எண்ணிக்கை | : | 300 |
| பதிப்புரிமை | : | வடமராட்சி கிழக்குப் பிரதேச<br>- கலாசாரப் பேரவை |
| அச்சகப் பதிப்பு | : | தமிழ்ப்பூங்கா, நெல்லியடி. |
| வெளியீடு | : | வடமராட்சி கிழக்குப் பிரதேச<br>- கலாசாரப் பேரவை |
| ஐ.எஸ்.பி.என் | : | 978-955-3681-010 |

| | | |
|---|---|---|
| *Title* | : | *"Paarvai"* |
| *Type* | : | *Creative Literature Volume* |
| *Compiled by* | : | *Miss. S. Selvasuhuna*<br>*(Cultural Officer)* |
| *Cover Design* | : | *Mrs Sinthiya Jeyasulakshan* |
| *First Edition* | : | *08.12.2017* |
| *Paper* | : | *70 g* |
| *Pages* | : | *169 + xiv* |
| *Number of Copies* | : | *300* |
| *Copyright* | : | *Vadamaradchy East, Divisional Cultural Forum* |
| *Printers* | : | *Tamil poonka, Nelliady. 0212264014* |
| *Published by* | : | *Vadamaradchy East, Divisional Cultural Forum* |
| *ISBN* | : | *978-955-3681-010* |

# வெளியீட்டுக் குழு

(வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேச
கலாசாரப் பேரவை)

01) தலைவர் :- திரு. க. கனகேஸ்வரன் (பிரதேச செயலாளர்)

02) உப தலைவர் :- திரு. வே. தவச்செல்வம்

03) செயலாளர் :- செல்வி சே. செல்வசுகுணா (கலாசார உத்தியோகத்தர்)

04) உபசெயலாளர் :- திரு. சி. முத்துராஜா

05) பொருளாளர் :- திரு. ந. நிர்மலன்

06) திரு. சி. பசுபதி

07) திரு. சி. பொன்னம்பலம்

08) திரு. க. கௌசிகராஜா

09) திரு. க. ஆனந்தமூர்த்தி

10) திரு. ஆ. இராமநாதன்

11) திரு. வீ. கணேஸ்வரன்

12) திரு. த. சிறீஸ்கந்தராஜா

13) திரு. வ. தவராஜா

14) திரு. சி. சிவாயநம

15) திரு. த. பாலசிங்கம்

## வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக
# கலாசார பேரவை கீதம்

ஆதவன் உதயம் அழ கெறி கிழக்கில்
அமை பணி செயல் பிரிவில்
அரும்பிடு கலையும் அறி கலாச்சாரமும்
அகிலமும் அறிய வைப்போம்.

நெய்தலும் முல்லையும் நிறை நில மருதமும்
நிறைந்த கான் பூமியிலே
நின்றிடு தொழில்களும் நெறி தமிழ்ச்சாரமும்
நிலை கொண்டு வாழச் செய்வோம்.

காணி நிலமுடன் கடல்வளம் கான் வளம்
காட்டிடும் வெண்மணலாய்
காவடி, கரகம், கவிநடம், கூத்துகள்
கடல் என விரிந்தெழுமே.

கலை கலாச்சாரம் காத்திடும் பேரவை
காலம் பல தொடர்ந்து
கண்ணியம் காத்து களிப்பினை ஊட்டியே
கன்னித் தமிழ் வளர்ப்போம்.

முத்தமிழ் வித்தராய் முறைபுரி மன்னராய்
மூழ்கியே முத்தெடுப்போம்
முன்னவர் கலாசார முறைமைகள் போற்றியே
முது மொழி உணர்வு கொள்வோம்.

கலாபூஷணம்
**திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி**
(குடா நீரூரான்)
குடாரப்பு,
நாகர்கோவில்.

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone 021-222 2235

පොදු දුරකථනය / பொது தொலைபேசி / General Telephone 021-222 2233, 021-222 2234

ෆැක්ස් / பக்ஸ் / Fax 021-222 2355

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

E-mail: gajaffna@sltnet.lk

මගේ අංකය / எனது எண் / My No.

ඔබේ අංකය / உமது எண் / Your No.

දිනය / திகதி / Date 17.11.2017

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



மருதங்கேணி பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியீடு செய்யப்படும் "பார்வை" என்னும் ஆக்க இலக்கிய மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மருதங்கேணி பிரதேச செயலகம் நெய்தல் நிலப் பிரதேசமாகிய கடல் வளத்தினோடு, மணல் வளம் நிறைந்த மருதஞ் சோலைகள், கேணிகள், மனதைக் கவரும் பறவைகள் நிறைந்த பகுதியாகும். இப்பிரதேசம் இயற்கை எழில் கொஞ்சும் பகுதியாக விளங்குவதனால் எழுத்தாளர்கள், கவிஞர்களின் கற்பனை வளத்திற்கு அரிய பிரதேசமாக அமைந்து விடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இலைமறை காயாக இருக்கும் கலை ஆர்வலர்கள், அறிஞர்களை வெளிக்கொணரும் அரிய முயற்சியாக அமைவதுடன் எதிர்கால சந்ததியினர் கலை இலக்கிய உலகில் உள் நுழைவதற்கு களமாகவும் இப் "பார்வை" என்னும் இலக்கிய மலர் களம் சமைத்திருக்கிறது எனலாம்.

இப் "பார்வை" என்னும் இலக்கியம், இப்பிரதேச கன்னி முயற்சியாக அமைவது பாராட்டத்தக்கது. இப்பணி தொடரவேண்டி இறைவனை

பிரார்த்திப்பதோடு மென்மேலும் இப்பணி சிறக்க உழைக்கும் பிரதேச கலாசாரப் பேரவையினர் மற்றும் பிரதேச செயலர், உத்தியோகத்தர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு "பார்வை" நன்கு கலையுலகில் புலப்பட வாழ்த்துகின்றேன்.

**நா. வேதநாயகன்**
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடமாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk
e-mail: [illegible]


எனது இல. / මගේ අංකය / My No.
உமது இல. / ඔබේ අංකය / Your No.
திகதி / දිනය / Date



நெய்தல் நிலத்தில் முகிழ்ந்தெழுந்த "பார்வை" சிறக்க நல்லாசிகள் உரித்தாகட்டும்!

வடமராட்சி கிழக்குப் பிரதேசமானது இயற்கைக் காடுகளையும், கடல் வளத்தினையும் கொண்டமைந்துள்ளது. பொருளாதார தன்னிறைவு காணும் வளம் நிறைந்த பூமியாக விளங்கும் நெய்தல் நிலத்திலிருந்து பிரவாகிக்கும் "பார்வை" என்னும் ஆக்க இலக்கிய புதிய வரவினை மெச்சி ஆசி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கலைஞர்கள், படைப்பாளிகள் ஆகியோரை ஊக்குவிக்கும் நோக்கத்திற்கமைவாகவும் பிரதேச கலாசார மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டும் இத்தகைய முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அனுசரணையையும், பங்களிப்பினையும் வழங்கி வருகின்றது.

இம் மலரானது தொடர் யுத்தத்தினாலும், இயற்கை அழிவு களினாலும் இடரினை அனுபவித்த மக்களது மன ஆதங்கங்களை பிரசவிக்கும் களமாக பிரதேச எழுத்தாளர்களது எழுத்தாற்றலை மேம்படுத்துவதற்காகவும் இலைமறைகாயாக மறைந்திருக்கும் படைப்பாளிகளை வெளிக்கொணர்வதற்கும் அவர்களை இலக்கிய உலகில் அறிமுகம் செய்யும் வகையிலும் வெறுமனே இலத்திரனியல் ஊடகங்களில் எழுதிவரும் தமது படைப்புக்களை நூலுருவாக்கம் செய்வதற்குத் தூண்டும் வகையிலும் எதிர்கால சந்ததியினரை இலக்கிய உலகிற்குள் நுழையத் தூண்டும் வகையிலும் கவிதைகள், சிறுகதைகள், நகைச்சுவை

நாடகத்தினை உள்ளடக்கியதாக பார்வை என்னும் ஆக்க இலக்கிய மலரினை வெளியிட முனைந்திருப்பது பாராட்டிற்குரியது.

இந்நூலில் இடம்பெறுகின்ற ஆக்கங்கள் இப்பிரதேசத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களால் வழங்கப்பட்டிருப்பதனால் இப்பிரதேசம் சார்ந்த சூழல், சமகால பிரச்சினைகள், நிகழ்வுகள் இவை தொடர்பான பல்வேறு அவதானிப்புக்கள் இப்பிரதேச ஆக்க இலக்கிய மலரான "பார்வை"யின் கனதியினை அதிகரித்து இலக்கிய உலகில் தடம் பதித்துச்செல்லும் என்பதில் ஐயமில்லை.

இம்மலர் சிறப்பான முறையில் வெளிவருவதற்காக அயராது செயற்பட்டுவரும் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் மலர்க்குழுவினர் அனைவரையும் பாராட்டி நிற்பதுடன் "பார்வை" என்னும் ஆக்க இலக்கிய மலர் வரலாற்றில் தடம்பதிப்பதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அபிராமி பாலமுரளி,
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

அபிராமி பாலமுரளி
உதவிப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

# அணிந்துரை



வடமராட்சி கிழக்குப் பிரதேசம் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய பிரதேசமாகும். இங்கு இயற்கைச் சூழலில் அமைந்துள்ள கோவில்கள், தேவாலயங்கள், வண்ண வண்ணப் பறவைகளின் சரணாலயம் என்பவற்றுடன் அடர்ந்த கண்டல் சவுக்கங்காடுகள், மணல் திட்டுக்கள், சுண்டிக்குளம் முதல் மணற்காடு வரையான ஆர்ப்பரிக்கும் கடலலைகள், செழித்த வயல் நிலங்கள், தாமரை அல்லி பூத்துக்குலுங்கும் குளங்கள், அழகிய நீரோடைகள், அழகாக நடமிடும் மயில்கள், கூ.., கூ.. என இசை எழுப்பும் குயில்கள், தாவித்திரியும் மான், மரை, மந்தியினங்கள், பனை, தென்னை மா, நாவல், கஜு, புன்னை என செழித்து நிற்கும் சோலைகள் கண்ணுக்கும், மனதுக்கும் விருந்தளிக்கும் வகையில் காட்சி தருகின்றது. இங்கு வாழும் மக்கள் தமக்கென தனித்துவமான பண்பாட்டம்சங்களைக் கொண்டவர்கள் என்பதுடன் கலைச் செயற்பாடுகளிலும் அதிக ஆர்வம் உள்ளவர்கள்.

ஆயினும் இவர்கள் தொடர் யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தத்தினாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களாகவும் தொடர் இழப்புக்களைச் சந்தித்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் வாழ்வாதாரங்களினை முற்றாக இழந்து மிக மோசமான வாழ்நிலைக்குட்பட்டிருந்து தற்போது மீண்டெழுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இவ்வாறு போர் அனர்த்தங்களிற்கும் இயற்கை அனர்த்தத்திற்கும் நேரடியாக முகம்கொடுத்த இம் மக்களுக்கு உடல், உளரீதியாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களினை நீக்கி அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மன நெருக்கடிகளிலிருந்து அவர்களை விடுவித்து ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளினையும் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இவ் ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே பிரதேச

மட்டத்தில் கலைப் படைப்புக்களை உருவாக்குவதற்கு ஆர்வம் உள்ளவர்களைத் தூண்டும் நடவடிக்கையாக இது அமைகின்றது.

அத்துடன் பிரதேசத்தில் உள்ள படைப்புத்திறன் வாய்ந்தவர்களை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கும் இளம் சந்ததியினரை இத்துறையின்பால் ஈர்க்கச் செய்வதற்கும், காத்திரமான விமர்சனங் களினூடாக தரமான படைப்பாளிகளினை உருவாக்குவதற்கும், முகநூல் வாயிலாக பிரசுரமாகும் இலக்கிய வடிவங்களை நூலுருவாக்க தூண்டவும் இந்தப் புத்தக வெளியீடு அவசியமாக அமைகின்றது. இந்த அடிப்படையில் மருதங்கேணிப் பிரதேச கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் இப் பிரதேச படைப்பாளிகளின் கலைப் படைப்புக்களைத் தாங்கி வெளிவரும் “பார்வை” என்னும் இலக்கிய மலர் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக அமைகின்றது.

இது போன்ற வெளியீடுகள் இத்துடன் நின்றுவிடாமல் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். “பார்வை” என்ற இலக்கிய மலர் வெளிவருவதற்கு எல்லாவகையிலும் பங்களிப்புச் செய்து ஆதரவு நல்கி ஒத்துழைத்த அனைவருக்கும் இத் தருணத்தில் நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக இந்நூல் வெளியீட்டிற்கு நிதியுதவியினை வழங்கிய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க. கனகேஸ்வரன்**
பிரதேச செயலாளர்/ தலைவர்,
பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
வடமராட்சி கிழக்கு.

# முன்னுரை



வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவை இன்று "பார்வை" என்னும் ஆக்க இலக்கிய மலர் ஒன்றினை வெளியீடு செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது. இந்நூல் 26 கவிதைகள், 08 சிறுகதைகள், நகைச்சுவை நாடகம் எனப் பல்வேறு ஆக்கங்களினைச் சுமந்து வெளிவருகின்றது. இந் நூலிற்குரிய ஆக்கங்களினை இப் பிரதேசத்தினைச் சேர்ந்த உள்நாட்டவரும் வெளிநாட்டவரும் வழங்கியிருக்கின்றார்கள். இது இப்பேரவையின் கன்னிப்படைப்பாகும். 2014 ஆம் ஆண்டு இக் கலாசாரப் பேரவையானது பிரதேச மலர் ஒன்றினை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் "பார்வை" என்னும் மலரூடாக இப் பிரதேசத்தவரது ஆக்க இலக்கியத்திறன் வெளிக்கொணரப்படுவதுடன் இவர்களை இத்துறை சார்ந்தவர்களாக உருவாக்குவதும், எதிர்காலச் சந்ததியினரை இத்துறையின்பால் ஈர்ப்பதுவும், தொடர் யுத்தத்தாலும் இயற்கை அழிவுகளாலும் மிகவும் பாதிக்கப்பட்ட இம் மக்களது மன அவலங்களை தீர்க்கும் களமாக ஆக்கி முட்டறுக்கச் செய்து ஆரோக்கியமான மக்கள் சமூகமாக இவர்களை உருவெடுக்கச் செய்வதுமாகும்.

ஆயினும் இம் மலரினில் முகிழ்ந்த கவிதைகள், சிறுகதைகளில் சில தரம் வாய்ந்த படைப்புக்களா என்பது கேள்விக்குறியே. இம் மலரானது மேற்குறிப்பிடப்பட்டுள்ள சமூகநலன் நோக்கங்களுக்காக பிரசுரமாகும் தொகுப்பு ஆகும். எனவே இப் படைப்பின் பிரசவம் இப் பிரதேசத்தில் பல தரமான படைப்புக்களினை வெளிவரத் தூண்டும் என்பதும் இது படைப்பாளிகள் பலரைத் தட்டியெழுப்பி அவரது ஆக்கங்கள் வெளிவரத் தூண்டும் நூலாக அமையும் என்பது திண்ணம்.

இலக்கியம் என்பது ஒரு காலத்தின் கண்ணாடி. இங்கு பிரசுரமாகும் ஆக்கங்கள் விரும்பியோ விரும்பாமலோ எமது சமகால வாழ்வியலை படம்பிடித்துக்காட்டும். எனவே குறிப்பிட்ட காலத்தின் பின் இப் "பார்வை" என்னும் இந்நூல் இக்கால வாழ்வியலை இம் மக்கள் எதிர்நோக்கிய துன்பங்கள் என்பவற்றினை எதிர்கால சந்ததியினர்க்கு சுட்டி நிற்கும் சான்றாக மிளிரும் என்பதில் ஐயம் இல்லை.

மேலும் இம் மலரில் இடம்பெறும் ஆக்கங்கள், அவை வெளிப்படுத்தும் கருத்துக்கள் என்பவற்றிற்கு அவ்வவ் எழுத்தாளர்களே பொறுப்பவர் என்பதுடன் இதன் பிரசவத்திற்கு உழைத்த அனைவருக்கும், இதற்கான நிதியுதவியினையும் வழிகாட்டலினையும் வழங்கிய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி !

**சே.செல்வசுகுணா**
கலாசார உத்தியோகத்தர்,/செயலாளர்,
பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
மருதங்கேணி.

# உள்ளே....


| | | |
|---|---|---|
| நாகதீபம் | | 1 |
| கிறிஸ்தவ கீதம் | | 12 |
| 1) | அப்பா எங்கே.... | 13 |
| 2) | அம்மா | 16 |
| 3) | அறைகூவல் | 18 |
| 4) | அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்த நிர்வாகப் பயணம் | 19 |
| 5) | ஆரோக்கிய வாழ்வு | 26 |
| 6) | ஆணிவேரான முதியோர்கள் | 28 |
| 7) | ஈர விழி | 30 |
| 8) | என் தாய்த்திருமேனியின் தழும்புகள் | 31 |
| 9) | கனவுகள் அல்ல நினைவுகள் | 33 |
| 10) | காட்சியும் கானமும் | 35 |
| 11) | காத்திருப்பு | 38 |
| 12) | சீதனம் | 40 |
| 13) | சொர்க்க பூமி | 42 |
| 14) | துடுப்பிழந்த ஓடங்கள் | 44 |
| 15) | பண்பாட்டுக் காவலன் | 47 |
| 16) | பாலையைப் பச்சைப்படுத்தி | 49 |
| 17) | புதுவாழ்வு | 51 |
| 18) | பெரிய மனிதரும் சிறிய உள்ளமும் | 53 |
| 19) | போதைக்கு விடைகொடுப்போம் | 55 |
| 20) | மருதங்கேணி | 59 |
| 21) | மறக்கமுடியவில்லை | 63 |
| 22) | மீனவர் வாழ்வியல் | 65 |
| 23) | முற்றத்து மாமரத்தில் | 70 |
| 24) | வாழ்வியல் | 72 |
| 25) | விலைமாது | 74 |
| 26) | மனிதத்தைத் தேடி | 78 |

**சிறுகதைகள்**


| | | |
|---|---|---|
| 1) | உணர்வு | 90 |
| 2) | உப்புக் காற்றும் உறங்காத நினைவுகளும்.... | 94 |
| 3) | உயிருள்ளவரை துளசி | 101 |
| 4) | என்னைப் பிரசவித்துக்கொண்டிருக்கும்... | 108 |
| 5) | பதுங்குகுழி | 117 |
| 6) | பாசதீபம் | 126 |
| 7) | வாசகன் | 134 |
| 8) | வேப்பமரம் | 139 |


**நகைச்சுவை நாடகம்**


| | | |
|---|---|---|
| 1) | ஒத்திகை | 150 |

கௌரவிக்கப்படும் கலைஞர்கள் 165

# நாகதீபம்

1. நாகர் கோவில் நாகதம்பிரான்
2. நாகர் கோவில் கண்ணகியம்மன்

**வெண்பா** **இராகம் - கல்யாணி**

நாகத்தில் உறைபவர்க்கும் நற்சிவையாம் நாயகிக்கும்
பாதத்தில் நான் அமர்ந்து பாட்டிசைக்க - வேழமுக
வித்தகனே வேத முதற் பொருளே நாயடியேன்
சித்தமதில் வந்து செறி.

## நாகர் கோவில் நாகதம்பிரான்

***கீர்த்தனை 01***

1. **பல்லவி**

நாகத்தின் தேவனே நலன்புரிவாயே - நீ
நாரணனோ சிவ நாயகமோ அறியேம் - நாகத்தின்

**அனுபல்லவி**

மோகத்தின் வினை முற்றும் நீ தடுப்பாய் - நமக்கு
மோட்சத்து வழிகாட்டி நீ வருவாய் - நாகத்தின்

**சரணம்**

பாகத்தின் உமை வைத்த பரம்பொருளாய் கண்டோம் - இன்னும்
மோகத்தின் நிற மொத்த மாலவனாய் சொன்னோம் - நீ
நாகத்தின் தலை ஐந்து நச்சரவோ அறியேம் - எங்கள்
சோகத்தை தடுத்தாண்ட சோதியே நாகையா - நாகத்தின்

நம்பினர்க் கருள் செய்யும் நாகத்தமர்ந்தவனே - உன்னை
அன்பினால் கவி செய்தேன் ஆகத்தமர்ந்துவிடு - எமக்கு

துன்பிலா நெறிகாட்டு துணையாக வந்துவிடு - எம்
இன்பமே நாகையா எழில் நாகர் நகரானே - நாகத்தின்

வயலொடு வளம் சார்ந்த வளர் மருத சோலையிலே - மிக
பயந்து கொண்டவர்க்கு பாம்பாய் முன்னிற்பவனே - உன்
தயவது வேண்டுமையா தந்துவிடு நின் அருளே - நல்
நயமொழி ஒன்றுரைத்து நலம் தந்து காருமையா - நாகத்தின்

**2. கீர்த்தனை 02**

**தொகையறா விருத்தம் (நாலடி) இராகம் - ஆனந்தபைரவி**

அத்தி விழுதாடி அலை நாவாய் மீதேறி
சுத்திப் படமாடி சூர்த்து பயந்தோட
வைத்து வட நாட்டான் வணங்கியிடச் செய்த
பத்தன் பணிக்கிறையின் பாதம் பணிவோமே

**பல்லவி**

நாக நகராளும் பெருமானே - உன்னை
நாடித் தினம் துதிக்க அருள்வாயே - நாகநகர்

**அனுபல்லவி**

மோகவினை முழுதும் தீர்ப்பாயே - எமக்கு
முத்தி நலம் சேர அருள்வாயே - நாகநகர்

**சரணம்**

சிவனணி பாம்பும் நீயே காண் - அம்மை
சேர்விரலாழியும் நீயே காண் - திரு
தவநெடு மாயவன் பாயல் காண் - புவி
தாங்கிடும் பாம்பும் நீயே காண் - நாகநகர்

தம்பிரான் உன் சரண் அடைந்தோர்கள் - அன்பர்
தாங்கிடும் விட நோயைத் தீர்ப்பவன் நீ - நாம்
நம்பிடும் சிவலிங்க நாயகம் நீ - எங்கும்
நன்மையாய் காத்திடும் நாரணன் நீ - நாகநகர்

கப்பலில் வந்தவர்கள் கதிகலங்க - பாம்பாய்
காட்டிய அதிசயம் கணக்கில்லையே - அதை
செப்பிடும் கதை விழா வானதுவே - எம்மை
சேவிக்க வைத்த உன்தன் திருவருளே - நாகநகர்.

3. **கீர்த்தனை 03** **இராகம் : மோகனம்**

**பல்லவி**

நாக நாதா நலம் தருவாயே - எம்
நாகர் பதியின் நாகையாவே - நாகநாதா

**அனுபல்லவி**

பாவம் தீர்க்கும் பணியரவே - உன்னை
பாடிப் பணிய பதம் அருளே - நாகநாதா

**சரணம்**

அத்திமர விழுதில் ஆடிய பரனே - தினம்
சுத்தும் சிவலிங்க சோதியின் உருவே - நாம்
நித்தம் உனைத் துதிக்க நீயருள்வாயே - கடல்
நத்தும் வயல் மருத நாகத்தின் தலையே - நாகநாதா

மூக்கினில் வாசம் முகரவிட்டு - பின்னை
சீற்றிடும் ஒலியை செவிக்கு வைத்து - கண்ணில்
காட்டிடும் படத்தில் காட்சி நல்கி - நம்மை
ஓட்டுவாய் தூர விலகு என்று - நாகநாதா

பஞ்சப் புலன்களில் மூன்று கெட்டோர் - இங்கு
கெஞ்சித்து வாழ்வது கேடு என்று - கண்டு
தஞ்சம் அடைந்து உன்னை சார்வதற்கு - நீயும்
நஞ்சினை ஊட்டி நலம் நல்கிடுவாயே - நாகநாதா

3. *கீர்த்தனை 04* இராகம் : ஆனந்தபைரவி

பல்லவி

நச்சரவை சடை வைத்த சிவநாதா - நீ
நாகர் கோவிலுறை நாகையா

பிச்சுமணி அம்மை அமர் இடப்பாகா - நீ
பேசுகின்ற பெருவரவின் வடிவானாய்

நந்தா மணி விளக்காய் நாயகமாய்
சிந்தாமணியாய் சிவக் கொழுந்தாய்
சந்தார் தரு சூழும் நாகர் பதி
வந்தாய் அமர்ந்தாய் மணி யரவாய்

விச்சை தரு வேழமுகன் விருப்பாகி
இச்சையுடன் சுற்றிவரக் கனியீந்து
முச்சகத்தில் முது குரவர் உல கெனவே
பச்சமுடன் காட்டியருள் பரம் பொருளே

ஆவேச உருக்கொண்டு ஆடியவன் - அன்று
வீசிய மாப்புள்ளி பட்ட வர்நாம்
பேசிய தெய்வம் பெரும் பணியாய் - நின்று
கூறிய நாகர் குலக் கொழுந்தே.

4. **கீர்த்தனை 05**

**தொகையறா** **இராகம் - சாமா**

அந்நாளில் அத்தி விழுதாடிய நம் பரம்பொருளை
கொன்னார் மேகாம் புரித்தட்டான் கொண்டிட்ட லிங்கத்தை
நம் மூரு திரு வதனை நாகத்தமர்ந்தவனை
பொன்னரும் மேனியனை போற்றிப் பணிவாமே.

**பல்லவி**

நாகைய திரு நாமம் நவில்வோமே - தினம்
நாடியே வீதி சுற்றி பணிவோமே - நாகைய

**அனுபல்லவி**

சோகத்தைத் தீர்க்கும் எங்கள் பெருமானை நாம்
சுற்றிப் பணிந்து துதி செய்வோமே - நாகைய

**சரணம்**

பாசத்து பற்றறுக்கும் பரம்பொருளே - எம்
நேசத்தில் பதிகாக்கும் நிர்மலனை
சேர் ஐந்து தலை கொண்ட சேவகனை - நான்
செந்தமிழ் பாடவைத்த சிந்தையனை - நாகைய

கப்பலில் விழா கண்ட காரணனை - கதை
செப்பிடக் கலை சொன்ன செந்திருவை - நாம்
பத்தியில் பாட்டிசைக்க பார்ப்பவனே - நாம்
நித்தம் பணிந்தெழுத நேர்ப்பவனே - நாகைய

சங்கரனாகியே நிற்பவனை - தமை
சார்ந்தவர்க் கருள்புரி சாமியனை
சிந்தூர நாயகி சேர்ப்பவனை - அருள்
தந்து பணிந்தோத வைத்தவனை - நாகைய

## நாகர்கோவில் கண்ணகியம்மன்

**6. கீர்த்தனை 06**

**இராகம் - மோகனம்**

**பல்லவி**

கருணை செய்குவாய் கண்ணகியே - எங்கள்
காரணியே நாகர் பூரணியே அம்மா - கருணை

**அனுபல்லவி**

நாரணன் சோதரி நற்தவ நாயகி
நலமெலாம் நல்கிடும் நானில மாதுநீ - கருணை

**சரணம்**

நாகரின் செல்வியே நல்மணற்றிடரிலே
தோகையாய் வழிபட தோற்றம் கொண்டாயே

பாகமாம் பரனுடன் பாம்புருப் படமதில்
மோகமாய் உறை சிவமோன மாதாவே

இளங்கோவன் தலைவியாய் ஏற்றிய இறைவியே
குலங்கோடு வெற்றியன் கூறிய செல்வியே
நலங்கொடு நாடுவோர் நாவினில் நாரணி
பலம் தரு நாகர் வாழ் பத்தினித் தெய்வமே

காத்தவன் கூத்திலே கவின் முத்துமாரியே
ஏற்றிடும் சிலம்பினில் இயம்பு கண்ணகியே
சாற்றிடும் கோவலன் காதையின் செல்வியே
போற்றிடும் சத்தியே புவியில் வந்தாயே.

**6. கீர்த்தனை 07** **இராகம் - மத்தியமாவதி**

**பல்லவி**

தாயே எமையாளும் தயாபரியே - எமை
தாங்கியே அருள்புரி கண்ணகையே அம்மா - தாயே

**அனுபல்லவி**

நீதியே எங்கள் நிறை தவமே - உயர்
நீர் நாகர் கோயிலுறை நிர்மலையே

**சரணம்**

பாண்டியன் மகளாகி வந்தவளே - பின்னர்
நீண்ட மாநகரின் சேயவளே - பணி
பூண்ட கோவலன் பொற்கொடியே - நாம்
வேண்டுதல் செய்தோம் வினையகற்றே - அம்மா

மாறனும் தேவியும் மாண்டு விழ - கண்ட
காரண தட்டான் கதை முடிய - உங்கள்
பாரகமான முலை திருகி - நீதி
கோரியே நெருப்பிட்ட கொற்றவையே - அம்மா

சித்தத்தில் உறைகின்ற சீர்மணியே - நல்ல
புத்தியைத் தருகின்ற பூமகளே - நாம்
நித்தமும் வழிபடும் நிலையருளே - கலை
கற்றிடும் நாகர் வாழ் கண்ணகியே - அம்மா தாயே எமை யாளும்

7. **கீர்த்தனை 08**

**தொகையறா** **இராகம் - சகானா**

கற்பினைக் கனலே ஆக்கி
கவினுறு மதுரை தீய
கொற்றவன் புரண்டு வீழ
குலமுறை அமைச்சர் சாய

செற்றமே வடிவமாகி
சிலம்பதை உடைத்து நீதி
சொற்றியே சோதியான
தூய கண்ணகையே போற்றி

**பல்லவி**

ஆயர் குலம் கண்ட தாயே
அகங்காரம் தணிந்துவிடு மாதே
சேயர் நாம் பணிகின்றோம் அம்மா
சேர் கோபம் மாற்றிவிடு தாயே

பாவை குளிர்ந்தருள்வாய் அம்மா
பத்தினியே சினமகற்று தாயே
ஏதும் அறியான் மாறன் செய்த
ஏற்ற பிழை பொறுத்தருள்வாய் அம்மா

பால் சொரிந்தோம் தேன் சொரிந்தோம் தாயே
பற்று கோபம் தணித்துவிடு அம்மா - உன்
கால் அடைந்தோம் கண்ணகையே தாயே
கண்ணில் அருள் காட்டிவிடு அம்மா

நல்ல சிவன் நாயகியே தாயே
நாம் வணங்க அருள்புரிவாய் மாதே
சொல்ல ஒரு சேதியுண்டு தாயே
சுந்தரியே குளிர்ந்தருள்வாய் அம்மா

வற்றாப் பளை வந்த தாயே - பின்
வணங்கு தலம் தோறும் வந்த மானே
கற்றார் உன் கதை படிக்கத் தாயே
கலை கொண்டு வந்தருள்வாய் அம்மா

வெற்றியன் விரித்துரைக்க ஏட்டில்
வித்தகியாய் முன் எழுந்த தாயே
நற்றமிழால் நான் பாடத் தாயே
நலம் காத்து குலம் காப்பாய் அம்மா

**8. கீர்த்தனை 09**

**தொகையறா** **இராகம் : இந்தோளம்**

சீரான கர நான்கும் சிறப்பான துதிக்கையும்
பேராரும் பெருவயிறும் பெருங்கோடும் புரிநூலும்
வாராரும் அரைமணியும் வாகான திருச் செவியும்
காராரும் கரிமுகத்து காரணனே காப்பாவாய்.

**சிந்துநடை (காத்தவராயன் கூத்து மெட்டு)**

பக்திக் கொரு தலைவி எங்கள் கண்ணகி தாயே
பாதாரம் மறவோம் எங்கள் கண்ணகி தாயே
சித்தம் நிறைபவளே எங்கள் கண்ணகி தாயே
சீர் பாதம் நாம் மறவோம் எங்கள் கண்ணகி தாயே

கத்தும் கடல் நாகை காக்கும் கண்ணகி தாயே
கதியடைய நீ அருள்வாய் காரும் கண்ணகி தாயே
சுத்திப் பணிந்து குடம் நீர் வளர்த்தோம் தாயே
சுந்தரியே குளிர்ந்தருளும் கோதை கண்ணகி தாயே

காத்தவனின் கூத்து நடை கண்டருளும் தாயே
கண்ணழகி யானவளே எங்கள் கண்ணகி தாயே
நேத்தி வைத்து நாம் பணிந்தோம் நேரிழையே தாயே
நீண்ட நோய்கள் நீக்கிவிடு நிர்மலையே தாயே

நாகத்தின் பாகம் கொண்ட நல்மணியே தாயே
நாகமணிச் சிரிப்புக் கொண்ட நாயகியே தாயே
பாகத்தமர்ந்து கதை பாடி விட தாயே
பார்த்து மனம் குளிரும் பாவை கண்ணகி தாயே

**9. தெம்மாங்கு / குறத்தி நடம் - 10**

**தொகையறா**

வடபாலில் நரசிங்கம் தென்பாலில் நாகையா
வலிமையாய் காத்து நிற்க
வரிமணல் திடரிலே மரநாவல் சூழலில்
மாதுநீ கோயில் கொண்டாய்
மணமான நிறைமாதர் குடமேந்தி நீர்கொண்டு
மகிழ்ந்துமே சுற்றி ஊற்ற
மகிழ்ந்துமே நாக நகர் உறையும் சிங்காரியே
மாது கண்ணகையம்மனே

நாகர் தம் கோயிலிலே - நயந்துறை
நாகத்து தம்பிரானே - உன்
பாகத்தமர்ந்தவளே - சேர்ந்து
பாடிப் பணிந்திடுவோம்

நாகத்துக் கேணியிலே - நிறைந்திடும்
நல் * சர்ப்ப சாந்தியினால் - நம்
தேக செறி விட நோய் - முற்றாய்
தீர்த்திடும் தெய்வம் நீயே

கோவில் குளம் முழுகி - குளிர்மரச்
சோலை குளவாளை

---

* சர்ப்ப சாந்தி - குளவாளை

காலில் உலவி வர - கடுவிடம்
கரைந்து மறைந்திடுமே

பாம்பு கடித்த தென்று உன்வாசல்
பக்தியுடனே வந்து உனை
தேம்பித் துதித்திடுகில் தீயவிடம்
தேய்ந்து மறைந்திடுமே

மூலவர் பாங்கினிலே முளைத்தெழும்
மூடு மண் பூசிக்கொண்டால் - கொட்டும்
தேளது பாம்பு பூரான் கடுவிடம்
தீய்ந்து மறைந்திடுமே

நாவில் தினம் உருகி நாகையா
நாமம் உரைப்பளவில் உடன்
தாவிக்குதித் தெழுந்து எம்மை
தாங்கிடும் தெய்வமல்லோ

பாடிப் பணிந்திடுவோம் உனை - நிதம்
பத்தி முறையையும் செய்தோம்
ஓடி எம் முன்னே வந்து உறும் துயர்
ஓட்டிடும் தெய்வமல்லோ

கண்ணகியம்மனையும்
வடபுலம் காவலில் வைத்தவரே
உம்மைப் பணிந் தெழுந்தோம் - உறுதுயர்
நோய் நொடி தீர்த்தருள்வீர்.

### 11. *கீர்த்தனை 11*

**வெண்பா** **இராகம் - சிந்துபைரவி**

தந்தைக்குத் தந்தையாய் தாயார்க்குத் தாயாகி
சிந்தைக்கும் எட்டாச் சிவ முதலே - உந்தன் மேல்
வந்தித்துப் பாட வதி இடப மீதேறி
புந்திக்கு வந்து புகு.

**பல்லவி**

உனையன்றி வேறொன்றும் நானறியேன் - நிதம்
உனைப்பாடிப் பணிவதன்றி வேறறியேன் - உனை

**அனுபல்லவி**

தலை நாக கீழ் அமைந்த தனிமுதலே - எனக்கு
மலைபோல வரு துயர்கள் தீர்த்தருளே - உனை

***சரணம்***

நிந்தை செய் தெறிந்திட்ட நினை மாலை - நான்
சிந்தித்து சீர் பாட சிதைவதுவோ
புந்திக்குள் புகுந்தாடு புற்றரவே - உனை
வந்தித்த பாடல் மிக வரமருளே - உனையன்றி

புகழ்மாலை கொண்டு நான் போற்றியதை - கண்டு
இகழாமல் எண்ணத்தில் புகுந்துவிடு - தரும்
சுக ஞான மான்மியத்தை தூக்கிவிடு - அது
தகவான பாடல் என்று சாற்றியிடு - உனை

நான்பாடும் பாடல் உந்தன் அருளல்லவோ - அதை
தேன் பாடலாக்கியிடல் திறனல்லவோ - உயர்
வான்பாயும் மருதவள சோலை அமர் - சிவ
மான்தோயும் மதிசடையே மனம் உருகே - உனை

முற்றும்

ஆக்கம்
கலாபூஷணம்
***சிதம்பரப்பிள்ளை பசுபதி***
குடாநீரூரான்

# கிறிஸ்தவ துதி

பூவிலங்கி தேனிலங்கி
வான் பொழிந்து
பொன் விளைய
தேன் மதுரத் தமிழ் உலவும்
கட்டையம் பதியினிலே
கருணை மழை பொழிந்து
காத்திடும் மாமரியே
கப்பலேந்தி தாய் மரியே.....

குண்டு மழை நனைந்து
குருதி மழை சிந்தி
கண்ணீரில் கரைந்து
கவலையால் மெலிந்து
காயங்கள் மிகுந்து
கலங்கி நாம் நிற்கையில்
காத்தவள் நீயம்மா....

மன்னவன் இயேசுவின்
மாபெரும் யாத்திரையில்
மாதாவாய் துணையிருந்து
மாவலி ஈந்து
வழிநடந்த மாதவளே!

சிலுவை அடியினிலே
திருமகன் இயேசுவினால்
உலகத்தின் தாயாய்
உயர்வு பெற்ற உத்தமியே
உன்துணை கொண்டு
இவ் உலகது உய்திட
உன் அருள் ஈவாயே
இன் அரும் பொக்கிஷமே
கப்பலேந்தி தாய் மரியே...

டிலோஜினி மோசஸ்
கட்டைக்காடு



## ரஜிதா இராசரத்தினம்

குடத்தனை மேற்கில் 1995 ஆம் ஆண்டு பிறந்த இவர் சிறுவயதிலிருந்து கவிதைத்துறையில் ஏற்பட்ட ஆர்வத்தின் காரணமாக பாடசாலைக்காலம் முதல் பல போட்டி களிலும் பங்குபற்றி முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார். பல நூல்களைத் தேடி வாசிக்கும் பழக்கம் உடைய இவர், தற்போது வானொலி அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் விளங்குகின்றார்.

# அப்பா எங்கே....

*எங்கே இருக்கிறீங்க அப்பா....*
*பத்திரமாய் இரு என்று*
*பங்கருக்குள் அம்மாவுடன்*
*எனை விட்டு*
*பால்மா வாங்க*
*வெளியே சென்றீர்களே!*
*இன்னுமா வாங்கவில்லை?*
*பார்த்திருக்கும் விழிகள்*
*ஈரமாகின்றதே அப்பா....*

*மூன்று வயதில் பார்த்தது*
*நிஜமுகம் இன்று நினைவில் கூட*
*இல்லையே?*
*தேடிக் கண்டுபிடிக்கக் கோரி*
*பல இடம் கொடுத்த நிழற்படங்கள்*
*ஏராளம்.*
*அதில் ஒன்றைப் பத்திரப்படுத்தி*
*அடிக்கடி பார்த்து*
*நினைவில் வைக்க*
*தினம் முயற்சிசெய்துகொள்கிறேன்.*

ஒவ்வொரு பிறந்தநாளுக்கும்
அம்மாவிடம் அடம்பிடிப்பேன்.
அப்பாவிடம் அழைத்து செல்லச்சொல்லி
ஆர்ப்பாட்டம் தாங்காமல்
அடிதந்தபின் தானும்
அணைத்து விம்மியழும்
நிலை இங்கே
யாரறியக் கூடும்....?

புத்தாடை அணிந்து
என் தோழிகள்
அப்பா கைபிடித்து கோயில் செல்ல....
நான் மட்டும்....
பக்கத்து வீட்டு அக்கா
பாவம் பார்த்துக் கொடுத்த
சட்டை போட்டு
பெருமிதம் மிகவாக
புதுத்துணி போட்டிருக்கேன்
தானே....
அப்பாதான் இன்னும்
வரவில்லை என்று
ஏக்கத்துடன்....

யார் தருவார் உங்களை
என்னிடம்....?
எல்லோருக்கும் காட்டி
இவர்தான் என் அப்பா
எனப் பெருமிதப்பட....

அம்மா முகம் சிரிச்சு
பார்த்துப் பல வருசமாச்சே
அப்பா....
ஆறுதல் சொல்லக் கூட

நீ அருகில்
இல்லையேப்பா....

நாலிரண்டு ஆண்டு
கடந்தும் இன்று - தெருவில்
நூறு நாள் தாண்ட
உங்களுக்காக
காத்திருக்கின்றோமே....

தோள்மீது தூக்கிச் செல்லும்
உங்கள் பாசம் வேண்டும்....
அப்பா என மார்தட்ட
உங்கள் அருகாமை
வேண்டும்....
அம்மாவின் வற்றிய கண்ணில்
ஆனந்தக் கண்ணீர்
காணவேண்டும்....
எங்கிருந்தாலும் ஓடிவா
அப்பா....
அதுவரை உன்
நிழற்படத்தைப் பார்த்து
எவ்வாறு எனினும்
ஆறுதல் அடைந்துகொண்டிருப்பேன்....

**சிறகு கிடைத்தால் பறப்பது**
**மட்டுமல்ல;**
**சிலுவை கிடைத்தால் சுமப்பதும்**
**வாழ்க்கை தான்.**



## பரமேஸ்வரன் அபிர்ணா

1999ஆம் ஆண்டு பிறந்த இவருக்கு சிறுவயது முதல் கவிதை எழுதும் பழக்கம் காணப்பட்டுள்ளது. இவர் ஒன்பதாம் ஆண்டு கல்வி கற்கும் பொழுது பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். இதுவே பல போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெறவும் இலக்கியத்துறையில் தொடர்ந்து ஈடுபடவும் வழிசமைத்துள்ளது.

## அம்மா

கண்மூடி, கால்மடக்கி, கவலை இன்றி
உன்னுள் நான் இருந்த
அந்த நாற்பது வாரங்களும்
மீண்டும் கிடைத்திடா
ஓர் அற்புத அரியாசனம் அம்மா....

என் உயிருக்கு உருவம் தந்தவள் நீ.
எனக்குப் பூமியில் கிடைத்த முதல்சொந்தம் நீ.
எனக்காய் உன்னைத் தொலைத்தவளும் நீ.
என் துயரங்களைப் பகிர்ந்தவளும் நீ.
எனக்காய் மறைந்தாய்
உன் ஆசைகள் உன் வலிகள் யாவற்றையும்
வாழ்க்கையில் நான் ஜெயித்திட.

இந்த ஓர் ஜென்மமே போதும் எனக்கு.
இருந்தாலும் கேட்கின்றேன் உன் மகளாக
அடுத்த ஜென்மத்திலும் உன் மடி மீது தவழ
ஓர் வரம் மட்டும் அம்மா! கொடுப்பாயா?

எனக்காய் நீ தொலைத்த உன் இரவுகளின் உறக்கத்தையும்
என்னால் நீ சிந்திய கண்ணீரின் வலிகளையும்
என்னால் மீட்டுத்தர முடியாது தான்
என்றாலும் கேட்கின்றேன் வரம் மட்டும்
உன் பாதங்களைப் பிடித்தவாறு....
நீ செய்த நன்றிக்கு ஈடேதம்மா?
நீ தந்த உயிரையே தரமுடியும்
நான் பிறந்த உன்மடியில்
நான் மடிவதற்கு உன்மடி வேண்டும்.

**யார் உங்களுக்கு உதவினார்களோ**
**அவர்களை என்றும் மறவாதீர்கள்.**
**யார் உங்களை நேசிக்கிறார்களோ**
**அவர்களை என்றும் வெறுக்காதீர்கள்.**
**யார் உங்கள்மீது நம்பிக்கை வைத்துள்ளார்களோ**
**அவர்களை ஏமாற்றாதீர்கள்.**

***(சுவாமி விவேகானந்தர்)***

## தம்பிராஜா சிறீஸ்கந்தராஜா



உடுத்துறையில் 1951 ஆம் ஆண்டு பிறந்த இவர் 1970 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை கலைத்துறையில் ஈடுபட்டு வருகின்றார். நாடகம் நடித்தல், எழுதுதல் நெறியாள்கை செய்தல் என இவர் பங்கு காணப்படுகின்றது. இவரது நடிப்புத்திறனுக்காக தங்கப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளதுடன் பல போட்டி நாடகங்களில் பங்குபற்றி முதலாம் பரிசினையும் பெற்றுள்ளார்.

## அறைகூவல்

*வளமிழந்த எம் மண்ணை வளப்படுத்த வா இளைஞனே எழுந்து நீ*
*என்ன வளம் இல்லையடா எம்மண்ணில் இதை எண்ணிப்பார்*
*கடல்வளம் வயல்வளம் காத்திரமானதோர் மண்வளம்*
*எல்லா வளமிருந்தும் ஏதிலி அகதி என ஏன் கை ஏந்துகிறாய்?*
*சொத்திழந்தோம் சுகமிழந்தோம் என சோம்பேறியாய் கிடவாதே நீ*
*நிவாரணமும் மானியமும் என்றும் நிலைப்பதில்லை*
*எடுத்துரைத்திடு நீ*
*காடழித்துக் களனி செய்து சேறடித்துச் சோறிடுவோம்*
*துணிந்துரைத்திடு நீ*
*அலை கடலடித்து வலைவீசி வறுமை வாழ்வகற்ற வலிந்தெழுந்திடு நீ*
*பனை வளத்தைப் பயன்படுத்தி தொழில் பெருக்கி*
*உன்குலத்தை உயர்த்திடு நீ*
*எல்லையில்லாக் கல்விதனை எம்மிடத்தே நிலைக்க*
*வல்ல புத்திஜீவி வழிதடத்தில் நடந்திடு நீ*
*கலைவளர சமூக விழிப்புணர்த்தி புதிய கலாசாரம் படைத்திடு நீ*
*சாதிமத பேதமற்ற சமூகமொன்றை உருவாக்கி சாதிக்க குரல்கொடு நீ*
*அடிமைத்தனம் நீக்கி அச்சமற்ற வாழ்வுகாண அத்திவாரமிடு நீ*
*சுத்தம் சுகம் சுகாதாரம் தூய்மை*
*அத்தியாவசியம் என அறைகூவலிடு நீ*
*சத்தியமாம் தியாகமதை சாதனையாய்*
*எல்லோரும் இணைந்து செய்தால்*
*நிச்சயம் விடியலும் புகழும் உங்களுக்கும் ஊருக்கும் உறுதி.*



## *வல்லிபுரம் தவராஜா*

உடுத்துறையில் 1962 இல் பிறந்த இவர் மேடை நாடகங்களினை எழுதியும் இயக்கியும் நடித்தும் வந்துள்ளதுடன் வானொலி நாடகம், கவிதை, சிறுகதை என்பவற்றினையும் எழுதியுள்ளார். இவரது "புழுதியில் விழுந்த புஸ்பம்", "தன்வினை" ஆகியவை புகழ்பெற்ற நாடகங்களாகும். இவர் சில நாடகங்களில் பெண் வேடம் ஏற்றும் நடித்துள்ளதுடன் "கலைச் சுடர்", "சமூக ஒளி" என்னும் விருதுகளினையும் பெற்றுள்ளார்.

# அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்த நிர்வாகப் பயணம்

*வடமராட்சி கிழக்கின் நிர்வாகப் பயணமது*
*அகவை இருபத்தெட்டில் கால் தடம் பதித்து*
*சோதனைகள், இடர்பாடுகள் பல கடந்து*
*சாதனைகள் பெறுகின்ற தருணத்தில் நிற்கின்றது.*

*பருத்தித்துறையுடனும், பச்சிலைப்பள்ளியுடனும்*
*இணைந்திருந்த இந்த மண்*
*எண்பத்தி ஒன்பதுதனில் தனி அலகாக மகுடம் ஏற்று*
*தன்னைத்தானே நிர்வகிக்கும் தகைமை பெற்றது.*

*மணற்காடு முதல் சுண்டிக்குளம் வரையிலான*
*நூற்றி ஐம்பத்தி மூன்று சதுர கிலோமீற்றருக்கும் உரிமை பெற்றதனால்*
*இந்து மகா சமுத்திரமும், தொண்டைமானாறு நீரேரியும் சூழ்ந்த*
*மருதமும், நெய்தலும் கொண்ட இப்பூமி நிமிர்ந்து கொண்டது.*

*நாலாயிரத்து எண்ணூறு குடும்பங்கள் இருக்கையில் தான்*
*அன்று இந்த மண்ணுக்கு முடி சூட்டுவிழா*
*இருப்பிடம் எங்கே என்பதில் இரண்டுபட்ட கருத்தின்றி*
*ஒரு முடிவாக வந்து தெறித்தன கருத்துக்கள்*

மத்தி என்றும் A-9 ஊடாக வேறிடம் செல்ல இலகு என்றும்
மருதங்கேணியினை இருப்பிடமாக்கினர் இணையிலாத் தகைமையினர்.

காரியம் நடத்துவதில் கைதேர்ந்த பெருந்தகை
சந்திரசேகரம் ஐயாவே இம்மண்ணின் கன்னிக்கால் அதிகாரி.
அவர்பின்னே பதினொருவர் கடமை நிறைவேறிட
பதின்மூன்றாமவரின் நல்லாட்சி இப்போ வலம் வருகின்றது.
ஐவருடன் சுழி போட்ட இப் பணி நிலையம்
ஐம்பது பேருடன் பக்குவம் அடைந்திருக்கின்றது.

இயற்கையும், செயற்கையும் காட்டிய காண்டங்களால்
மக்களின் இடர்கள் தொடர்ந்தன இம்மண்ணில்.
தொண்ணூற்றி ஒன்றிலிருந்து துயர் மேகங்கள் சூழ
அவல வாழ்வில் அந்தரித்தனர் இம்மண்ணின் மாந்தர்கள்.
உயிர், உடமை காத்திட இடம்விட்டு இடம் நகர்ந்த மக்களுடன்
தானும் நகர்ந்து பணி சுமந்தது இப் பணி நிலையம்.

வெற்றிலைக்கேணியில் நடந்த ஆகாயக் கடல்வெளி இடரில்
ஆகுதியானவர்கள் போக மிகுதியானவர்கள்
அகதியாயினர் அயல் இடம் தேடி
கட்டைக்காடு கேவில் வண்ணாங்குளம் குடிகள் எல்லாம்
கண்டாவளைப் பகுதியிலும் சுண்டிக்குளத்திலும் தஞ்சமடைய
வெற்றிலைக்கேணி தொடங்கி மருதங்கேணி வரையிலானோர்
செம்பியன்பற்று, நாகர்கோவில் பகுதிகளிலும் அரண் தேடினர்.

மருதங்கேணியிலிருந்து மணற்காடு வரையிலான
சுருங்கிய எல்லைக்குள்ளே
அல்லற்படுவோருக்கு அபயமளித்தது இந்த நிர்வாக நிலையம்.
இடர் தொடங்கிய காலத்திலே
ஞானநேசன் ஐயா மாற்றலாகிச் செல்ல
கேதீஸ்வரனைத் தொடர்ந்து கனகரத்தினம் ஐயாவும்
அனர்த்தத்திற்கு முகம் கொடுத்து மக்கள் பணி காத்து நின்றனர்.

சூரியக்கதிர் வீச்சு அனர்த்தம் தொடங்கிய பின்
பெரும் திரள் மக்கள் வன்னிக்குச் சரிந்தனர்.
மொத்தக் குடிகளின் தொகை அரைப்பகுதியிலும் சிறுத்ததனால்
அம்பன் பகுதியில் அலுவலகம் அமைத்து பணிகள் தொடர்ந்தன.
கமநல நிலையப் பணிமனைக் கட்டடத்தில் அமர்ந்து
அவதிப்படும் மக்களுக்கு அரியபல சேவைகள் வழங்கினர்.

புதிய இடம் நகர்ந்த வேளை பொறுப்பேற்ற சிவபுண்ணியம் ஐயா
சிலகாலம் இருந்து பெருஞ்சேவை வழங்கி மாற்றலடைய
பசுபதி என்ற மண்ணின் மைந்தர் பதவியை ஏற்றதனால்
தொடர்ந்தன நிர்வாகப் பணிகள் அனைத்தும்.

ஆகாயக் கடல் வெளிச்சமரில் ஊர் பிரிந்த மக்களது
இடர் தீர்க்கும் பணிகள் தீரமுடன் நடந்த வேளையில்
சர்வதேசமே திரும்பிப் பார்த்த சரித்திர சம்பவமாக
குடாரப்பு நிகழ்வு இரண்டாயிரத்தில் நடந்தேறியது.

நிலைகுலைந்த மக்களது அடுத்த நகர்வு வன்னியை நோக்க
ஒரு சிலர் வடமராட்சி நாடி தயவு தேடினர்.
தொண்ணூறு வீதத்திலும் கூடுதலானோர் இடம்பெயர்ந்ததனால்
பிரதேசமே சூனிய நிலையாய் மாறியிருந்தது.

நிர்வாக மையமும் தனது கடமையைக் காவிக் கொண்டு
வடமராட்சி நோக்கி தும்பளையில் வதிவைக் கொண்டது.
அனுபவ முதிர்வின் அடையாளம் வேலாயுதம்பிள்ளை ஐயா
எஞ்சியிருந்த பத்துவீதமானோரின் நலன் பேண வந்தார்.
வேற்று நிலத்தில் வதிவு கொண்ட நிர்வாக நிலையமது
மணற்காடு தொடங்கி அம்பன் மேற்கு மட்டுமே ஆட்சி கொண்டது.

இரண்டாயிரத்து இரண்டிலோர் கலங்கரை விளக்கம்
சுமாதானக் கதவுகள் திறந்து விடப்பட்டதனால்
வன்னியிலும், வடமராட்சியிலும் தஞ்சம் புகுந்தோர்

ஊர் தேடி வந்து, உறைவிடம் அமைத்து உண்டு மகிழ்ந்தனர்
நாகர்கோவிலுடன், அம்பன் கிழக்கு வாழ்வோருக்கு மட்டும்
அனுமதி இல்லை பாதுகாப்பு வலயம் எனப் பறைசாற்றி

வேலாயுதம்பிள்ளை ஐயாவுடன் பணி சுமக்கும் காவலர்களும்
மீண்டும் மருதங்கேணி வந்து அலுவலகம் நடாத்தினர்.
பத்து வருடங்களை அன்னிய ஊரில் தொலைத்த மக்கள்
சொந்த மண்ணினை முகர்ந்து பார்த்து நிறைவு பெற்றனர்.

திட்டங்கள் வந்தன திடமாய் வாழ்வதற்கு.
வீடுகள் அமைத்தல், வீதிகள், கல்விக் கூடங்களுடன்
மருத்துவ சாலைகள் புனரமைக்கத் திட்டமிடப்பட்டன.
அமைதிச் சூழலில் ஆனந்தமாய் வாழ்வோமென கற்பனை செய்ய
இரண்டாயிரத்து நாலில் மீண்டும் அனர்த்தம்...
கண்மூடி விழிப்பதற்குள் காலனின் கைவரிசை...

கடலினை நம்பி இருந்தோர்க்கு ஏமாற்றம்...
அக்கடலே வந்து ஆயிரத்தெட்டுப் பேரைக் கொண்டு சென்றதுடன்
சொத்து, சுகம் அனைத்தும் ஒரு நொடியில் அள்ளிச் சென்றது.

உறவுகள், உடமைகள் இழந்தவர்
நலன் பேண அணிவகுத்த தொண்டு நிறுவனங்களை
ஒழுங்கமைத்து சீர்செய்து நெறிப்படுத்தும் பொறுப்பினை
ஜெயசீலன் ஐயாவின் கன்னி நிர்வாகம் ஏற்றது.

சுனாமிச் செயலணி என்றும், மீள் கட்டுமானப் பணி என்றும்
உடைந்த மனங்களை எல்லாம் பொருத்த நினைக்கும் வேளையில்
மீண்டும் வந்ததோர் அடுத்த அனர்த்தம்
இரண்டாயிரத்து ஆறு ஆவணி பதினொன்றில் முகமாலை நிறுத்தம்

நாகர்கோவில் பாதை தடைப்பட்டபோது *A-9* பாதையினால்
இணைந்த இக் கிராமங்கள் பகிர்ந்தன தம் உறவுகளை.

முகமாலைத் தடையினால் பிரதேசம் இரண்டு துண்டானதுடன்
நிர்வாகப் பணிமனையும் இரண்டாகப் பிரிந்தன.

செம்பியன்பற்றின் கிழக்குத்திசைக் கிராமங்கள் வன்னிக்கு நகர
பிரதேச நிர்வாகப் பணியும் அங்கே நகர்ந்தது.
வீரபத்திரப்பிள்ளை ஐயாவுடன் பதின்மூன்று அலுவலர் மட்டுமே
நாலாயிரம் குடும்பங்களின் நலன்களை நிர்வகித்தனர்.
பரந்தனில் சில மாதங்கள் நிர்வாகப் பணிகள்; பின்னர்
தருமபுரத்திலும் கண்டாவளை வெளிக்கண்டல் சந்திக்கும் நகர்ந்தன.

மேற்குப் பகுதித்துண்டு ஐந்து கிராம மக்களின் நலன் காக்க
குடத்தனையில் அலுவலகம் அமைத்து
நிர்வாக அலுவலர் கணேசமூர்த்தி ஐயாவின்
பதிற்கடமையில் சில மாதங்கள் தொடர மீண்டும்
வீரபத்திரப்பிள்ளை ஐயா குடத்தனையில் பொறுப்பேற்பு.

வன்னிப்பகுதி நிர்வாகத்தினை சத்தியசீலன் ஐயா பொறுப்பேற்று
சீலமுடன் மக்கள் பணியினை முன் நகர்த்திச் சென்றார்.
குண்டு மழை, ஓயாத ஷெல்வீச்சு இத்தனை இடருக்கு மத்தியிலும்
நிலை தடுமாறாத நிர்வாகக் குழாமின் நிறைவான சேவை
இரண்டாயிரத்தெட்டு இறுதியுத்தம் வரை தொடர்ந்தது.

குடத்தனை அலுவலக அதிகாரி
வீரபத்திரப்பிள்ளை ஐயா ஓய்வு நிலையடைய
கடமை ஏற்ற சிறீஸ்கந்தகுமாரின் சிறப்பான சேவைக்காலத்திலே
முட்கம்பி வேலிக்குள்ளேயிருந்து விடுவிக்கப்பட்ட மக்களை
ஊருக்கு அனுப்பும் நடவடிக்கையும் நடந்தேறின.

இரண்டாயிரத்துப் பத்தில் மீள்குடியேற்றம் தொடங்கிய நாளன்றே
ஆரம்பமானது நம் ஊரவர்
திருலிங்கநாதன் ஐயாவின் கண்ணியச் செயற்பாடு.
யுத்தத்தின் எச்சமாய் மிஞ்சிய சமுர்த்தி வங்கிக் கட்டிடத்தில்தான்
நிர்வாக மையத்தின் மீள் ஆரம்பச் செயற்பாடுகள் தொடர்ந்தன.

இயற்கையின் சீற்றமும் கடும் யுத்த அனர்த்தமும் தந்த
உடைந்த மனங்கள் எல்லாம் ஒரு புறம் இருத்தி
சொந்த மண்ணிலே குடியமர்ந்தனர் இப்பகுதி மக்கள்.
உரு அழிந்த காணியின் எல்லை தேடி வேலி போட்டு
வெற்று நிலத்திலே குடிசையும் அமைத்தவர்க்கு
நிரந்தர வீட்டுடன் வாழ்வாதாரமும் வழங்கிட
நிர்வாகப் பணி நிலையம் விரைந்து செயற்பட்டது.

ஏ.ஆர்.சீ, எஸ்.ரீ.சீ, சோஆ என்றெல்லாம் நிறுவனங்களுடன்
இந்திய அரசின் உதவிகளும் முண்டியடித்து வந்தன.
பயனாளிகள் தெரிவில் பல்வேறு சிரமங்கள்
விமர்சனங்கள், வியாக்கியானங்கள் வரிசையாக வந்தபோதும்
பாதிக்கப்பட்ட நாதியற்ற நிலையிலுள்ளோர் நலன்பேண
நற்பணி நிலையம் என்றும் தயங்கியதில்லை.

இத்தனை காலமும் இருப்பிடமில்லா இப் பணிமனைக்கோர்
மாடிக்கட்டிடம் இப்போது நிமிர்ந்து வந்தது.
ஐந்து வருட நிறைவில் திருலிங்கநாதன் ஐயா மாற்றலாக
தொழில் திணைக்கள அதிகாரி
கனகேஸ்வரன் ஐயா பதவியேற்றார்.

விட்ட பணிகளும் தொட்ட பணிகளும் இவர் முன்னே விரிந்து கிடக்க
அத்தனையும் நிறைவு செய்து
நல்லாட்சி அதிகாரி எனும் நாமமும் பெற்றார்.
கனகேஸ்வரன் ஐயாவுடன் இணைந்த நல் அலுவலர் குழாம் இன்று
மக்கள் மனங்களை வென்று நிற்கின்றது.

இங்கே கல்வியுடன் சுகாதாரமும், போக்குவரத்தும் சிறப்படைய
மாவட்டச் செயலகத்தில் அடிபட்டுத் திட்டங்களை வாங்கி வருவார்
மக்கள் சேவையே மகேசன் சேவை என பணி மேற்கொண்டதனால்
விருதுகளும், சாதனைகளும் இன்று உடமையாகிக் கொண்டது.

உற்பத்தித்திறன் போட்டியில் மாவட்டத்தில் முதலாம் இடம், தேசியத்தில் மூன்றாம் இடம் என பெரு விருதுகள் பெற்றதுடன் போசாக்கும், போதைப்பொருள் தடுப்பிற்கும் விருதுகள் கிடைத்தன. கலை பண்பாட்டுடன் விளையாட்டிலும் சாதனை பெற்றதுடன் கிராம அலுவலர் முகாமைத்திறனிலும் வெற்றியடைந்தன.

அன்று ஐந்து பேருடன் பயணத்தைத் தொடர்ந்த இப் பணி நிலையம்
பாரிய அனர்த்தங்கள் மத்தியிலும் பாதை விலகாது
மக்கள் துரத்தப்பட்ட இடமெல்லாம் தானும் ஓடிச் சென்று
நல் அறிவுசால் அதிகாரிகளின் வழி நடத்தலில்
இன்று நூற்றி ஐம்பது பேருடன்
வினைத்திறனுடன் விளைதிறனைப் பெற்று
சாதனை படைத்து வீறுநடை போடுகிறது.

**கோபத்தினால் வென்று விட்டாய் என்றால்**
**உன் கோபம் பெரிது என்பதல்ல;**
**அதைத் தாங்கிக் கொண்டவர்களின் பொறுமை**
**பெரிது என்பதே அதன் அர்த்தம்.**



## வேலுப்பிள்ளை கார்த்திகேசு

பருத்தித்துறை தும்பளையில் பிறந்து குடத்தனையில் வசித்துவரும் இவர் ஓர் பயிற்றப்பட்ட ஆசிரியராவார். தமிழ்மொழிப் புலமையும் கலையிலக்கியப் பற்றும் உள்ள இவர் புராணபடனம் மேற்கொள்ளல், கல்வெட்டுக்கள் எழுதுதல் போன்ற பணிகளை இற்றைவரை ஆற்றிவருகின்றார். அத்துடன் அறநெறிப் பாடசாலையையும் நடத்தியுள்ளார்.

# ஆரோக்கிய வாழ்வு

நாம்

1. உண்ணும் உணவினால் உதிரம் உருவாகி உடலினை
வண்ணமும் வாளிப்பும் மிக வழிவகுக்குமே மேலும்
வெண்ணிற உடலிகள் வீரியமுற்று வினைத்திறனாற்றத்
துணைபுரியும் எனும்
எண்ணக்கருத்தினை எம்மவர் யாவரும் ஏற்றல் முறையாம்.

2. தீட்டாத அரிசியால் (தவிடு உள்ளது) தீன்பண்டம் சமைத்து
முட்டை, பால், இறைச்சி, மீன், முருங்கையாதியாம் இலைக்கறி
பட்டாணி, கடலை, பயறு, உழுந்து, பருப்பு காய்வகை உண்ண
ஊட்டச்சத்து (சீவசத்து) உளதாய் உடலை, உறுதியாக்கும்.

3. அருந்தும் உணவை, ஆற அமர இருந்து, அரைத் துண்பதால்
வரும் வாய் உமிழ்நீருடன் கலந்து வடிவமும் மாறி
வயிற்றை அடையும்
இரைப்பை தன்னில் சுரக்கும் சாற்றுடன் சிறுகுடல்
பெருங்குடல் சேரும்
நீரையும் பருகி நிறைவு செய்கின்றோம்.

4. நோய்க்காவிகளாம் ஈ, எறும்பு, எலி, கரப்பான் இவை
காய்ச்சிய உணவு கனி, கறிவகையை
தீண்டாவண்ணம், காத்தல் கடமை
நோய் தோன்றிய விடத்துநோய்த்திருக்கா
வைத்தியரை நாடி
வையகந்தனில் வாழ்வை வளமாக்கி நிற்போம்.

5. அளவுக்கு அதிகம் உண்ணல் (அருந்தல்)
அகாலவேளையில் உண்ணல்
அளவுக்கதிக நித்திரை கண் விழிப்பு
ஆறுதலின்மை ஆதியாவையும்
உளத்தாக்கத்தை அகற்ற மது கஞ்சா கிறோயின் அருந்தல்
குழப்பத்தைத் தந்து உடல் நலம் குறையும் (குறைக்கும்)

6. பாதசாரியாய் பயணிக்கும்போதும்
வாகனமதில் செல்லுங் காலையும்
காததூரமெனினும் கட்டைபல கி.மீ. கடக்கினும்
சற்றும் தாமதமின்றி அக்கம் பக்கம் அகலப்பார்த்து
முற்றுறக் கடக்க முயலுதல் வேண்டும்.

7. மேற்குறிப்பிட்ட செயல்முறைகளை நாம் கைக்கொள்ளின்
ஏற்புடைத்தல்லாத மரண பயமும் இடுக்கணும் நீங்கி
ஆரோக்கிய வாழ்வும் ஆயுள் நீட்சியும் பெற்று
நிரோகிகளாக நிலவுலகில் வாழ்தல் திண்ணம்.

8. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
"நோய்க்கிடங் கொடேல்"
எனும் பழமொழிகளுக்கு இணைவாக

9. வையகந்தனில் நாம் நோய் பிணி இன்றி வாழ
அறப்பணியாம் அரும்பணிபுரியும் வைத்தியர் குழாங்களை
வாழீ, வாழீ, வாழீ என வாழ்த்துகின்றோம்.



## தம்பிஜயா பாலசிங்கம்

வெற்றிலைக்கேணியில் 1968 ஆம் ஆண்டு பிறந்த இவர் கலை, இலக்கியத்துறையில் உள்ள ஆர்வம் காரணமாக "றம்போ" கலைமன்றத்தினை உருவாக்கி அதனை திறம்பட இயக்கிவந்துள்ளார். அத்துடன் சமூக நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்தும் சமூக நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், கூட்டுறவுத்துறைசார்ந்த நாடகங்களில் நடித்தும் உள்ளார்.

# ஆணிவேரான முதியோர்கள்

*அரண்மனை போன்று அழகிய வீடு*
*அதற்குள் கணவன் மனைவி பிள்ளை*
*அவர்களின் நாயும் படுத்துறங்க*
*அழகான கூடும் அங்குண்டு - ஆனால்*
*அவர்களின் பெற்றோர்கள் அங்கில்லை.*
*அனாதை மடந்தான் அவர் சொந்தம்*
*மனிதநேயத்தைக் கொன்றுவிட்டு*
*மாளிகை வீட்டினில் வாழ்கின்றார்.*

*சரிகை பட்டுக்கள் யன்னலெல்லாம்*
*தரமான கம்பளம் தரைவிரிப்பு*
*சரித்திரம் கூறும் மண்டப தூண்கள்*
*சாதனை புரிந்த சமூகத்தொண்டன்*
*வயது முதிர்ந்த பெற்றோர்கள்*
*வரவேற்பு அறையில் நடமாட*
*தடையை விதித்து பின்னறையில்*
*தங்க ஒழுங்கைச் செய்துள்ளார்.*

*பெற்று வளர்த்த பெற்றோரும்*
*பிரியமுடைய உறவினரும்*

சுற்றுச்சூழல் அயலவரும்
முதியோர் இல்லத்தில் தங்கிவிட
மிச்சமுள்ள முதியோர்கள்
வீதியோரம் மரநிழல்கள்
தெருவின் திண்ணை மடங்களிலும்
தேடுவாரற்று வாழ்கின்றனர்.

மனிதநேயம் உள்ளவர்கள்
சிறிதுநேரம் சிந்திப்போம்.
ஆணிவேரான முதியவரைப்
பேணி வளர்க்க வேண்டாமா?
அவர்களின் அறிவும் அனுபவமும்
அரிய பெரிய சொத்தல்லவா?
எங்களை வளர்த்து ஆளாக்க
எத்தனை தியாகங்கள் செய்திருப்பர்?

தேடுவாரற்ற முதியோர் நிலைமை
எமக்கு ஒரு நாள் உருவாகும்.
நாளைய முதியோர் பட்டியலில்
நாமும் ஒரு நாள் இடம்பிடிப்போம்.
முதியோர் தேவையை நாமுணர்ந்து
முழுதாய் அவற்றை நிறைவேற்றி
அன்பு காட்டி அரவணைத்து
அவர்களின் மகிழ்வில் பங்குகொள்வோம்.



## ஜெயவவா அன்பு

வத்திராயனில் 1980 இல் பிறந்து டென்மார்க்கில் வசித்துவரும் இவர், தென்இந்தியத் திரைப்படத்திற்கும், சில குறுந்திரைப்படங்களிற்கும் பாடல்கள் எழுதி யுள்ளார். "பேனாவின் இசை" இறுவட்டினை வெளியிட் டுள்ளதுடன் திரைப்படத்திற்கு பாடல் பாடியும் பாடலுக்கு இயக்கம் செய்தும் குறும்படங்களிற்கு கதை எழுதியும் குரல் கொடுத்தும் உள்ளார்.

# ஈர விழி

கொண்டவளின் அன்பு
கொடிநாட்டிச் செல்ல
சுமந்தவளின் அன்பு
தவிடாகிப் போச்சே....

வந்தவளின் வார்த்தை
வானத்தை பிளக்க
தாயவளின் காதும்
ஒலிவிட்டுப் போச்சே....

அரைவயிற்று உணவும்
அடியோடு இடிவிழுந்துபோக
ஓடிழந்த ஆமைபோல்
ஓரத்திலே நசுங்கிப் போனாளே.

பத்துத் திங்கள் சுமந்தவளின் பேச்சு - இப்போ
ஒவ்வாமை மருந்தாகிப் போச்சே.
மடி தந்த தாயை தயங்காமல்
படி தாண்டச் சொன்னானே....

அவள்....
ஈன்றவனின் இதயத்தில் ஈரம் உலர்ந்துபோக
ஈக்களுக்குத் துணையானாள்
ஈர விழியோடு தெருவிலே!!!



## *சங்கரப்பிள்ளை புஸ்பகுமார்*

உடுத்துறை தெற்கில் பிறந்த இவர் பாடசாலைக் காலங்களில் "முல்லை", "விழித்திரை" சஞ்சிகைகளின் இணையாசிரியராக விளங்கியுள்ளார். 1979ல் முதல் கவிதையினை பிரசுரித்த இவர் சிந்தாமணி, வீரகேசரி இதழ்களில் சிறுகதைகளினையும் புலம்பெயர்ந்தோர் இலக்கியத் தடங்களில் கவிதை, தொடர் நாவல், அரசியல் களம், ஆய்வுக் கட்டுரைகள் என்பவற்றினையும் எழுதியுள்ளார்.

# என் தாய்த் திருமேனியின் தழும்புகள்

*உயர்ந்த மணற்திட்டுக்கள்*
*ஒழிந்து மணற்கிடங்காகி....*
*என் தாய்த்திருமேனியெங்கும்....*
*புண்ணும் நிணநீருமாக இன்னும்*
*எத்தனை நாளைக்குத்தான்*
*இந்த சித்திரவதைகள்....*
*வடக்கே ஆழப்பெருங்கடல்*
*தெற்கிலே தொண்டமானாறு நீர் ஏரி*
*இடையிலோ கீலமாய்....*
*எங்கள் தாய்த்திருமண்....*
*இங்கே தான் எங்கள் திருவாழ்வு....*
*இத்தனை காலமும்*
*எங்கள் திருவாழ்விற்கு*
*என்ன வளம் தந்தீர்கள்....?*
*நாங்கள் மின்சாரம் கண்டதே*
*வடக்கின் வசந்தத்தில்தான்....!*
*உப்புக்காற்றிலும்....*
*உறைக்கும் வெய்யிலிலும்*
*வான் பார்த்த வயலிலும்....*

வளம் நிறைந்த கடலிலும்....
நாங்கள் உழைத்தோம்....
நாங்கள் படித்தோம்....
நாங்கள் எழுந்தோம்....
கிழக்கூர் என்று கீழ்ப்பார்வை
பார்த்ததன்றி
என்ன வளம் தந்தீர்கள்
எங்கள் திருமண்ணிற்கு....?
ஆழிப்பேரலை வந்து அள்ளியது போல
ஊழிப்பேரவலத்தில் உருட்டி விடுவதற்காகவா
"கன்ரர் கன்ரராய்" - எம் மண்ணை
காவித் தொலைக்கிறீர்கள்....?
குடாநாடெங்கும்
கோட்டை கோபுரம் எழுந்திட
நாங்கள் தானா
"பொது வழங்கியாகக்" கிடைத்தோம்?
நடந்து பாருங்கள் எங்கள் திருமண்ணில்....!
கொடுத்துக் கொடுத்து
கோரமாய்ப் போன எங்கள்
தாய்த் திருமேனியின் தழும்புகள் தெரியும்....?
ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளுங்கள்!!
உங்கள் "சவள்கள்"
எங்கள் மண்ணில் மட்டுமல்ல....
எங்கள் இதயங்களிலும்
எறிகணையாக வீழ்வதை....



## வேலுப்பிள்ளை தவச்செல்வம்

மாமுனையில் 1974 இல் பிறந்த இவரது கவிதைகள், கட்டுரைகள் 1994 முதல் "சாளரம்", "நங்கூரம்" போன்ற சஞ்சிகைகளில் வெளிவந்தன. அதனைத் தொடர்ந்து வீரகேசரி வாரமலர், வலம்புரி, தினக்குரல், ஈழநாதம் போன்ற பத்திரிகைகளில் எழுதிவந்துள்ளார். "வான்முழக்கம்" ,"யாழ்முழக்கம்" சஞ்சிகைகளின் பிரதம ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

# கனவுகள் அல்ல நினைவுகள்

உன் உடல் மட்டுமல்ல
நீ நடந்த பூமியும் சுடுகின்றது
இவை கனவுகள் அல்ல நினைவுகள்.

முற்றத்து மணலில் நள்ளிரவுவரை
பலகதைகள் பேசினோம் நித்தமும்.
இவை கனவுகள் அல்ல நினைவுகள்.

அன்பை ஆழமாய் பதித்து என்னை
உனக்குள் சேர்த்தேன்.
இவை கனவுகள் அல்ல நினைவுகள்.

வானக் கடலில் விண்மீன் பிடித்து
விளையாட முற்பட்டோம்.
இவை கனவுகள் அல்ல நினவுகள்.

பள்ளிப் பொழுதுகள் பல உணர்வுகள்
பல சவால்கள் எனக்கும் உனக்கும்
எந்தத் தடையும் இல்லை.
இவை கனவுகள் அல்ல நினைவுகள்.

இடம்பெயர்வுகள் இயற்கை அனர்த்தங்கள்
எனப் பல சவால்கள் எனக்கும் உனக்கும்.
இவை கனவுகள் அல்ல நினைவுகள்.

உயிர் இழப்புகள் சொத்தழிவுகள்
எனப் பல சவால்கள் எனக்கும் உனக்கும்.
இவை கனவுகள் அல்ல நினைவுகள்.

இறுதி வரை என்னோடு உறவாடினாய்.
உயிர் மூச்சாய் என்னோடு உலாவந்தாய்.
இவை கனவுகள் அல்ல நினைவுகள்.

இறுதியில் நெஞ்சிலே குண்டுபட்டு
என் மடியில் நீ சாய்ந்தபோது
உலகமே இருண்டது.
இவை கனவுகள் அல்ல நினைவுகள்.

நீ சத்தமில்லாமல் முத்தமிட்ட
என் தாய்மண் இப்போதும் சுடுகின்றது.
இவை கனவுகள் அல்ல நினைவுகள்.

**கடவுள் நூலைத்தான் கொடுப்பான்.**
**சேலையை நெய்து கொள்வது**
**மனிதனின் பொறுப்பு.**



## *கலாபூஷணம் சிதம்பரப்பிள்ளை பசுபதி*

குடாரப்பு, நாகர்கோவிலை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கவிஞர், நாடக நடிகர், வில்லிசை சமய பேச்சாளர், நூலாசிரியர் ஆகிய கலைச்சேவைக்காக இதுவரை கலைவாரிதி, கலைஞானவாரிதி, கலைசாகரம், புலவர், கந்தபுராணவித்தகர், கலாபூஷணம் ஆகிய விருதுகள் பெற்றவரும் ஆளுமை கொண்ட இளைப்பாறிய அரச உயர் அதிகாரியும் ஆவர்.

# காட்சியும் கானமும்

**காப்பு**

i. *வடகீழ் தனிச்சிறப்பு வகைதெரிந்து நான் பாட*
*கடமார் களிற்று கணபதையே - திடமாக*
*என் மனதில் உற்று இறையாய் எனை நடத்தி*
*மன்னு புகழ் தந்து மகிழ்.*

ii. *காட்டிடும் கிழக்கின் கீர்த்தி காட்சியும் கானமாக*
*நாட்டுயர் நமது வேழ நாயக நண்ணி எந்தன்*
*பாட்டினில் நீயே நின்று பணித்தருள் பரம நாத*
*ஊட்டிய தமிழை வைத்தேன் உலகுளோர் வாழ்த்த வேண்டி.*

*2.* வடபுலம் வங்க ஓதம் வளைந்திடு கிழக்குத்திக்கு
இடமதாம் முல்லைத்தீவு எல்லையாய் குளமுமாக
தடமுறு உப்பினாறு தங்கு தெற் கெல்லையாக
படமுறை மாயன் கோயில் படரு மேற் கெல்லையாமே.

*3.* குடத்தனை அம்பன் நாகர்கோயில் குடாரப்போடு
இடத்தினில் காணும் செம்பியன் பற்று மருதங்கேணி
உடுத்துறை வத்திராயன் உயர் ஆழி வளையாய் கண்டு
தொடுத்து வெற்றிக்கேணி தொடர் தண்டிக்குளமும் ஊரே.

*4.* வயல்வெளி வாய்க்கால் ஓடை வாவி சின் குளமுமாகி
புயல் தவழ் வங்க ஆழி புயங்கமாய் வடபால் சீறி

இயல் புரைகளிகொள் ஆறு கடலதாய் நீண்டு நீராய்
இயல்படு காடு கொண்ட எங்களூர் காணீர் பாரீர்.

5. படர் பனை தென்னை ஆலும் பாங்குடை வேம்பு அத்தி
திடமுறை மருது புன்னை சேர் நாவல் கண்டல் தாளை
உடனுறு பறுகு காடாய் உறைந்திடு நிலத்தினூடே
தடமுறை தங்கி வாழ்வோர் தாங்குமூர் எங்களூரே.

6. மடையுடை வயலில் வேளாண் புரிந்திடுவோரும் சுற்று
கடலிடை தொழில் செய்வோரும் கண்ணியம் கடமை கொண்ட
இடைநிலைப் பணியினாரும் இணையரும் கலை வல்லோரும்
நடமிகு அரசுசேவை நண்ணியோர் நண்ணும் நாடு.

7. தமிழுடன் சைவம் காப்போர் தங்கு கத்தோலிக்கத்துள்ளார்
அமிழ்தினும் இனிய சொல்லால் அரவணைத்திடுவோர் வந்தார்
கமழ்விருந்திடுவோர் கொண்ட கண்ணியம் கடமை மிக்கோர்
உமிழ் தரு கிராம உண்மை உணர்ந்திடில் இங்கு வாரீர்.

8. வடக்கிலும் காடு மற்றை வளத்திலும் காடு கொண்டு
கிடக்கிலும் வன்னி போல கிழக்கிலும் ஆங்காங்கம்மா
மடத்துறு கடலும் காடு மணலுமே காடதாக
தடத்தினில் காடு கொண்ட தனிப்பெரும் ஊரே நம்மூர்.

9. மணலினைக் கொள்ளு வாரும் மரம்தடி தறிப்போராலும்
இணையிலா செல்வம் எல்லாம் இழந்திடு சிறப்பினாலும்
குணமது கொண்டு வாழ்ந்தோர் குடி பெயர்ந்திடுதலாலும்
தனதுறு பெருமை கெட்டு தவிக்கும் ஊர் எமது ஊரே.

10. பாதைகள் இல்லை நல்ல பள்ளிகள் வசதி இல்லை
நோய் நொடி தீர்க்க நல்ல துண்ணியர் எவரும் இல்லை
தாதையில் தாதை காலம் தக்க முன்னேற்றம் இல்லை
வேதனை தீர்ப்பார் இன்றி விதி விளையாடும் ஊரே.

11. கடவுளும் பார்ப்பதில்லை அரசு காவலர் கணிப்பதில்லை
இடமுறு மாந்தர் மிக்க ஏழையர் ஏது செய்வார்
திடமுடன் உதவுவோரும் செய்வதும் பெரிதாய் இல்லை
மூடமென வாழுமூரே முன்வந்து ஒருகால் பாரீர்.

12. இம்முறை மாற வேண்டும் இளைஞர்கள் கூட வேண்டும்
நம்மை நாம் உணர வேண்டும் நல்லது செய்ய வேண்டும்
வெம்மை கொள் எமது ஊரை விண்ணகராக்க வேண்டும்
உண்மையாய் உழைக்க வேண்டும் உயர்த்துவோம் ஓடி வாரீர்.

13. கூட்டுறவு உயர வேண்டும் கூடியே வாழ வேண்டும்
மாட்டுறை பொருள் தோற்றோனும் மண்ணது காக்க வேண்டும்
வாட்டமும் அயர்வும் போக்கி மன மகிழ் சிறந்து வாழ
காட்டுவீர் உமது வீரம் காவியத் தலைவராவீர்.

14. வஞ்சகம் பொறாமை கொண்ட வாழ்வது எமக்கு வேண்டாம்
எஞ்சலில் எம்மூர் காக்க இளைஞரே எழுந்து வாரீர்
செஞ்சொலில் வேண்டாம் கூடி செயல்புரி திறமை கொண்டு
அஞ்சலில் அணியராக ஆதரித்தெழுவோம் வாரீர்.

15. பட்டது போதும் இன்னும் பார்த்துமே இருக்க வேண்டாம்
விட்டது போதும் நாங்கள் வீறு கொண்டெழுதல் வேண்டும்
துட்டர்கள் கேண்மை நீக்கி துணிவுடன் காக்க வேண்டும்
இட்டமாய் செய்வீர் என்றால் எமது ஊர் எழுமே பாரீர்.

16. கலையுண்டு காவலுண்டு காப்பு கண்ணியமும் உண்டு
விலையுண்டு போகா நின்று வீணரை இனமாய் கண்டு
நிலையுண்டு நிலைமை நாடி நீங்களே நீங்களாகி
தலையுண்டு உயர்த்தி எம்மூர் தரணியில் ஓங்கச் செய்வீர்.

17. பாட்டினில் பணிந்து சொன்ன பண்புசேர் கருத்தை ஆய்ந்து
ஏட்டினில் சுரைக்காய் என்று எண்ணியே இகழ்ந்திடாமல்
நாட்டுயர் நலமாய் கொண்டு நற்தமிழ் சைவம் காத்து
காட்டுவீர் திறனும் மேன்மை கவித்திறன் கண்டு வாழ்வீர்.

18. படித்தவர் வாழ்க பாடச் சொன்னவர் வாழ்க
நடத்தியே முடித்து வைக்கும் நல்ல உள்ளங்கள் வாழ்க
இடத்தமர் இளைஞரோடு எம்மவர் யாரும் வாழ்க
எடுத்திடும் முயற்சி வாழ்க இறையருள் என்றும் வாழ்க.



## ஜெயபாலா ஜெயசுலக்சன்

வத்திராயனில் 1987 இல் பிறந்த இவர் ஓவியம், சிற்பம், கணனிவரைகலை, சினிமா, மரச்செதுக்கு வேலை போன்ற துறைகளில் ஈடுபட்டு வருவதுடன் இவை சார்ந்த கண்காட்சிகளினை கொழும்பு, அனுராதபுரம் மட்டக்களப்பு போன்ற இடங்களில் நடத்தியும் உள்ளார். அத்துடன் "கலையாழி" கலாமன்றத்தினையும் ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்.

# காத்திருப்பு

*கைப்பிடிச்சுக் கனகாலம்
கர்ப்பப்பை நிரம்பக் காணோம்
மாதம் ஒன்றும் தள்ளிப்போக
மகவொன்று என் அதரம்
இனியும்தான் தங்காதோ
என்று மனம் ஏங்குதிங்கே!*

*கைப்பிடிச்சுக் கனகாலம்
கர்ப்பப்பை நிரம்பக் காணோம்!*

*ஊருசனம் தேடிவந்து
என் முகத்த பார்க்க முன்னம்
என் வயித்த பார்க்கயில
கொதிக்குதையோ என் வயிறு
எரிமலை குழம்பைப்போல.*

*தோசம் நீங்க பரிகாரம்
பரியாரி கை மருந்தும்
சாத்திரிமார் சத்தியமும்
பேதையிவள் விதி வழியை*

மாத்திவைக்க முடியுதில்லை
நாள் மூன்று விலகினப்போ
பாவாடை கயிறிழக்கி
அடிவயிறு வருடிவிட்டு
எடுத்து அடி வைக்காமல்
பார்த்துப் பார்த்துக் காத்திருக்கேன்
இந்தமுறை என் குழந்தை
ஜனித்திருப்பான் என்வயித்தில்
இப்படியே பல தடவை
ஏமாந்து போயிருக்கேன்!

கைப்பிடிச்சுக் கனகாலம்
கர்ப்பப்பை நிரம்பக் காணோம்!

ஊரு சனம் பேசுகிற
பரிகாசப் பேச்செல்லாம்
என் தலைமேல் விழுந்திடலாம்!
என் மாமி, என் புருசன்
தலைக்குனிவு பொறுக்குதில்லே!
பிள்ளை பெறாக் குற்றத்திற்கு
நான் மலடி ஆகிடலாம்!
பிள்ளை பெற்றும் மலடியாக
என் மாமி வருந்துவதோ?
என் பிள்ளை பிறந்துவந்து
மலடி என்ற பழிச்சொல்லை
மலையடியே புதைச்சிடுவான்!

காத்திருக்கேன் கனகாலம்
கர்ப்பப்பை நிரம்பக் காணோம்!



## சச்சிதானந்தம் கபில்ராஜ்

அம்பனில் 1990 இல் பிறந்த இவர் நாடகமும் அரங்கியலும் பட்டதாரி ஆவார். விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றும் இவர் கவிதை, நாடகம், கூத்து போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடுடையவர். ஆண்டுதோறும் கூத்துக்களிலும் நாடகங்களிலும் நடித்துவருவதுடன் "அம்பனில் ஒரு வம்பன்" என்னும் புனைபெயரில் கவிதைகளினையும் எழுதிவருகின்றார்.

# சீதனம்

*பல்லாண்டு தவம் இருந்து*
*பிறக்கின்றாள் பெண்ணொருத்தி*
*சீராட்டித் தாலாட்டி*
*சித்திரமாய் வளர்க்கின்றார் பெண்ணவளை.*
*வயது பத்தை அடைந்து*
*பதினாறை எய்தி*
*பருவம் அடைந்து விட்டாள் பெண்ணவளும்.*
*பெண்ணுக்கு வயதாச்சு*
*மாப்பிள்ளை பார்க்கவேண்டும்*
*பெண்வீட்டார் அலைகின்றார்*
*வரன் ஒன்று வருகிறதாம்.*
*வயசான ஆளாம்*
*பட்டதாரி மாப்பிளையாம்.*
*பறவாய் இல்லை என்று*
*பெண் வீட்டார் ஒத்துக்கொள்ள*
*பெண்ணுக்கு எவ்வளவு போடுவியள்?*
*சீதனப்பேய் சுவரில் ஏறுகிறது.*
*பத்துப்பவுண் நகையும்*
*கூடி வாழ வீடும் கொடுக்கின்றோம்.*

பெண் வீட்டார் பதில் உரைத்தார்.
பட்டதாரி மாப்பிள்ளைக்கு
பத்துப்பவுண் நகையா
பத்தாது பத்தாது
கத்தினார்கள் மாப்புவீட்டார்.
கரைந்தார்கள் பெண்வீட்டார்.
பாவம் அவள் என்ன செய்வாள்
கலியாணமும் வேண்டாம் - ஒரு
களிமண்ணும் வேண்டாம்
கணக்குப் போட்டுவிட்டாள்.
பாரதியின் புத்திரியாய்
மாறிவிட்டாள் பெண்ணவளும்.
காற்றும் ஓர் நாள் மாறும்
காலமும் அப்போது மாறும்
அப்போது பாருங்கள்.
பெண் இல்லையே என்று
ஆண்கள் எல்லாம் அலைக்கழிந்து
பெண்ணுக்குச் சீதனம் கொடுத்து
ஆணுக்குத் தாலி கட்டி
சாந்தி முகூர்த்தத்திற்கூட
தலைவி தாள் பற்றி
தலைவன் அவன் வணங்கி
இனிதே இல்லறம் நடாத்த
ஆண்களே காத்திருங்கள்
சீதனத்துடன்....



## குகதாஸ் ஜெயந்தன்

குடத்தனை கிழக்கில் 1981இல் பிறந்து அம்பனில் வசித்துவருகின்றார். பாடசாலைக்காலம் முதல் கவிதை, கட்டுரை எழுதுதல், கவியரங்கத்தில் பங்குபற்றுதல் எனத் திகழ்ந்த இவர் "அலை" சஞ்சிகையின் ஆசிரியராகவும், "கடுகு" சஞ்சிகையில் கவிதையும் எழுதி உள்ளார். இளங்கோ கழகத்துடன் இணைந்து பல கவியரங்குகளிலும் பங்குபற்றி வருகின்றார்.

# சொர்க்க பூமி

*மணற்காடு விளிக்க*
*சுண்டிக்குளம் களிக்க*
*மனம் நாடும் கிழக்கு*
*மகிழ்வோடு அழைக்கும்.*
*ஓங்கு பனை ஒலிக்கும் கடல்*
*தாங்கு தென்னை தாழும் செந்நெல்*
*தேங்கும்.... மணல் செறிந்த நாவல்*
*அள்ளி மனம் துள்ளிக் களித்தாடும்.*
*சீறாத சிறுகடல் மாறாது மனம் கொள்ளும்.*
*கண்டலோடு கண்ணாவும் எடுப்பான பொற்பத்தையும்*
*எண்ணில்லா தில்லையும் வண்ணப் பறவைகளும்*
*சின்னக் குழந்தையென சிரித்து மகிழ்வூட்டும்.*
*சங்கீதம் பாடும் சவுக்கும்*
*சந்தோஷம் கூட்டும் களப்பும்*
*மரந்தாவும் மந்திகளும்*
*இனம் புரியா இன்பம் இதுவன்றோ சொர்க்கம்.*
*ஊரெல்லாம் கோவில்களும் உயர்ந்த தேவாலயங்களும்*
*பெயர் சொல்லும் பள்ளிகளும் பெயர்ந்திடாக் கலைகளும்*
*இன்பத் தமிழ் பொங்குகின்ற மறத்தமிழர் வாசமும்*

வீசுகின்ற தென்றலும் பேசிடப் பொங்கிடும் உள்ளமே!
தேனோடு திரள் மீனும்
பாலோடு பசும் நெய்யும்
பகிர்ந்துண்ணும் பண்பாடும்
பார்த்திருக்க உள்ளம் பண் பாடும்.
கிரமமான வாழ்வு கிராமம் என்றாச்சு
உறவாடி நாளும் இதயம் பூவாச்சு
சிரமம் என்று சிந்தித்த சிலருண்டு
நகரம் தேடி நரகமான கதையுமுண்டு
கூட்டுக்குள் வாழ்வு நாகரீகம் என்றிட்டார்
கூடி வாழ்ந்தே கோடி நன்மை கண்டோம்
நாடி வந்தோரை நாளும் தொழுதேற்றும்
வளநாடும் இதுவன்றோ.

ஆழிப்பேரலை அள்ளிச் சென்றவை ஏராளம்
ஊழிப் போராலே இழந்தவையும் ஏராளம்
உயிர்க்கூடு குலைந்தும்
உடமைகள் தொலைந்தும்
தளராத உறுதி சரித்திரம் ஆனது.
கிளறப்பட்ட வேர்களிலிருந்து
கிளைவிட்டது பெருவிருட்சம்.
நேற்றைய சூரியனுக்காய்
நெஞ்சுருகி நினைத்ததில்லை
நாளைய விடியலுக்காய்
நம்பிக்கையாய் காத்திருப்போம்.



## பெஞ்சமின் ஜெபதாஸ்

தாளையடி வடக்கில் 1989 இல் பிறந்த இவர் தாளையடி புனித அந்தோனியார் ஆலய நாடகங்களிலும் பிற நாடகங்களிலும் நடித்துள்ளதுடன் பருத்தித்துறை மறைக்கோட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் "துறை" சஞ்சிகை ஆசிரியராகவும் சிறந்த மேடைப் பேச்சாளராகவும் கவிதை யாப்பவராகவும் விளங்குகின்றார்.

# துடுப்பிழந்த ஓடங்கள்

உப்புக் காற்றில் உரமேற்றி
தூய மண் வாரித் தின்று
பனங்கொட்டை பந்தியிருந்து
நாவல் மரமேறி சுட்ட பழம் பறித்து
கிளிக் கோடு மறிக்க கெந்திக் கோடும் பாய்ந்து
ஆழியில் சிறகடித்து கிளக்கன் குஞ்சுகள் பிடித்து
ஏலையேலோ எனப்பாடி கரைவலையும் கட்டி இழுத்து
கஷ்ரப்பட்டு கல்வி கற்று வாழ்கிறோம்
இளையோர் என்ற பட்டம் பெற்று.

பட்டங்கள் பெற்றும் இளமை வாழ்க்கை வீதியிலே
நிரந்தர வேலை வேண்டும் என்ற கோரிக்கையில்
சுயதொழில் செய்வதே விதியென்றால்
பட்டங்கள் பெறவும் தேவையில்லை
சட்டங்கள் நாடவும் தேவையில்லை என்ற
கேள்வி கொண்ட இளையோராக.

மேய்ப்பனில்லா ஆடுகள் போல்
தொடர்கிறது இளையோர் வாழ்க்கை.

அரசியலில் நாட்டமில்லை
பொதுநலனில் ஆர்வமில்லை
எழுத்துலகில் ஊக்கமில்லை
உதவிசெய்ய முன்வருவதுமில்லை
கலைகளில் பங்கில்லை
கற்றதை கற்பிக்க முடியவில்லை
தட்டிக் கொடுக்க எவருமில்லை
எட்டிப்பார்க்க முடியவில்லை
தோற்றுப்போன இளையோராக
ஆனாலும் நாம் இளையோர்.

விளையாட்டு வாழ்க்கையிலே
விளையாடி மகிழ்கின்றோம்.
மேல்படிப்பும் விருப்பமில்லை
பத்திரிகை பார்ப்பதில்லை
சமூக நலன் பேணுவதில்லை
உரிமைகளுக்காய் போராடுவதுமில்லை
குரல் கொடுப்பதுமில்லை
ஆவேசப் பேச்சு ஆனால் ஆடம்பர வாழ்வு
பொக்கற் மணி கிடைப்பது தெரிவதில்லை
மொபைலுக்கு றீச்சாச் போட மறப்பதில்லை
போலியான உலகமதில் நாகரிக இளையோராக.

நாவடக்கத் தெரியவில்லை
நாகரிக உலகமதில்
மதுவில் அடிமை
மாதுவில் மயக்கம்
பெண்ணியம் பேசிடுவோம்
ஆடைக் குறைப்பில் அவதானமாயிருப்போம்
பட்டங்கள் ஆள்வதும் நாமே
சட்டங்கள் செய்வதும் நாமே என
வாதங்கள் செய்திடுவோம்.

வீதிகள் முட்களாய் இருக்கட்டும்
வீடுகள் கட்டி முடியாதிருக்கட்டும்
அரசியல்வாதிகள் வரட்டும்.
ஆனந்தமாய் பேசிப் போகட்டும்
கேள்விகளோ எம்மிடமில்லை ஆனாலும்
நாம் இளையோராக.

ஆண் பிள்ளை பெண் பிள்ளை என்றில்லை
இளையோர்கள் என்பதுவே எம் சிறப்பு.
பாடசாலை எந்த நிலை
கல்வித்தரம் அறிய ஆசையில்லை
பரீட்சை முடிவையிட்டுப் பாராட்ட மனமுமில்லை
பக்குவமாய் விமர்சிப்போம்
பள்ளிக்கூடம் சரியில்லை எண்டு.
களவுகளும் கஞ்சா கடத்தல்களும்
இழுவைகளின் ஊடுருவல்களும்
கடலட்டைக்கான அனுமதி கோரல்களும்
அழுத்தங் கொண்ட அதிகாரிகள்
உழைக்கின்றனர் அனுதினமும்.
ஆனாலும் சாடிடுவோம் அவர்கள் தம் நற்பணியை
நன்றியில்லா நெஞ்சுடனே.

இளையோர் நலன் பேணிடுவோம்
அவர் கருத்தும் கேட்டிடுவோம்
அறவழியைச் சொல்லிக்கொடுத்திடுவோம்
ஆன்மீகத்தில் நாட்டங் கொள்ளச் செய்திடுவோம்
அன்பு வழி பெரிதே என்று
அன்புடன் வாழப் பழக்கிடுவோம்.
இளையோரே வாரீர் எனச் சொல்லியுமே
இழந்தவை மீட்க அழைத்திடுவோம்.
வடமராட்சி கிழக்கின் எதிர் காலமதை
இளையோர் துணையுடன் கட்டி எழுப்பிடுவோம்.



## சிவலிங்கம் சிவசேகரன்

நாகர்கோவில் கிழக்கில் 1992 ல் பிறந்து குடத்தனை வடக்கில் வசித்து வரும் இவர். சஞ்சிகைகளிலும், முகப்புத்தகங்களிலும் "சிவமயம்", "குடத்தனையூர் சிவா" என்னும் புனைபெயரில் கவிதைகள் எழுதிவருகின்றார். இவரது "மட்டைவேலிக்குத் தாவும் மனசு" என்னும் முதற் கவிதைத் தொகுதி மிக விரைவில் வெளிவரவுள்ளது.

# பண்பாட்டுக் காவலன்

*தமிழனின்*
*பழமையும் பண்பாடும்*
*மண்கொண்டு போனதாம்*
*மூத்தோர் பழக்கமெல்லாம்*
*புண்பட்டுப் போனதாம்.*

*மூக்குப் பேணியை*
*இப்போது காணவேயில்லையாம்.*
*என்பாட்டி இப்போதும்*
*மூக்குப்பேணியிலதான்*
*தண்ணீர் கேட்கிறாள்....*

*பனையோலைப்பாய்கள்*
*புழக்கத்தில் இல்லையாம்.*
*என் பாட்டன் இப்போதும்*
*பனையோலைப் பாயில்தான்*
*படுத்தெழும்புகிறார்....*

*முண்டாசு கட்டும் பழக்கம்*
*மண்ணுக்குள் போய்விட்டதாம்.*

அய்யா இப்போதும்
முண்டாசில்லாமல்
வெளியில போகமாட்டார்....

திருமணச்சடங்குகளும்
மாறிப்போய்விட்டதாம்.
அக்காவுக்கு
சோறூட்டும் சடங்கோடு
திருமணமே முடிந்துவிட்டது.

உணவுப் பழக்கமும்
மாறிப்போய் விட்டதாம்.
நேற்றும் அம்மா
அம்மியில் அரைத்துத்தான்
குழம்பு வைத்தாள்....

பழந்தமிழ் பாட்டு முறையெல்லாம்
எழுத்தில் மட்டும்தான் உள்ளதாம்.
கும்மியும் குலவியும்
ஏர்ப்பாவும் அம்பாவும்
தாலாட்டு, கோலாட்டம்
ஒப்பாரி எல்லாமும்
இன்றும் கேட்கிறது இசை வடிவில்....

தமிழ் அழிந்ததாய்
படித்துச் சொல்லும் பேதைகளுக்கு
அடித்துச் சொல்கிறான் பாமரன்
எம்தமிழ் அழியாது என்று....



## அருந்ததி வேலவகுமார்

உடுத்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பினை வசிப்பிடமாகவும் கொண்டுள்ள இவரது கவிதை விவசாய பீடத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் முதலாம் இடத்தினையும், பேராதனைப் பல்கலைக்கழக சங்கீத நாட்டிய சங்கம் நடாத்திய போட்டியில் சிறந்த கவிதை எனவும் உதயன் பத்திரிகையின் மௌனமொழியின் கீழ் தெரிவான கவிதையில் சிறந்த கவிதையாகவும் தேர்வு செய்யப்பட்டது.

# பாலையைப் பச்சைப்படுத்தி

*பனி நனைத்துக் கால் பதித்த*
*பச்சாடையிங்கு*
*கருகிக் கிடக்கிறதோ!*
*கந்தகப் பூக்களின்*
*பூபாளம் அங்கு*
*அவளுக்குப் புரிகிறது.*
*புயலாய் வந்து இரத்தம்*
*பூசிப் போனது யாரென்று.*

*கால அறுவடைக்காய்க்*
*காத்திருக்கும் அவளை*
*நேசிப்பவனும்*
*நிறையப் பேர் உண்டு.*
*நெஞ்சிலே உரமேற்றி,*
*விழியிலே நெருப்பேந்திக்*
*காத்துக் கிடக்கின்றான்*
*பாலையாய் நிற்கும் உன்னைப்*
*பச்சைப்படுத்தவென்று.*

உன்னை
உறுப்பறுப்புச் செய்தார்கள்.
எச்சமென்று இருந்தவற்றை
எரிதழலில் இட்டார்கள்.
காந்தழ் இற்றொழிய,
கந்தகம் பூத்தெழ
பாலையான தேவதையாய்
துயிலற்றுக் கிடக்கும் உனை
தூய்மைப் படுத்தவென்று
கையிலே வாளேந்திக்
காத்துக் கிடக்கின்றான்.

பலகூட்டைத் தாங்கிப்
பரந்திருந்த உன்னை
வேருடன் சாய்த்து
வீழ்த்தவா முடிந்தது?
கூட்டில் இருந்து
புறப்பட்ட பறவையது
விதை கொண்டு போனது
எவருக்கும் தெரியாதே
மீண்டும் விருட்சமாய்
உனை வளர்க்க....

நீ....
பொறுமையின் சிகரமம்மா.
காத்திருக்கும் அவனுக்கு
காலம் கொடுத்திடு....
கந்தகப் பூக்களை அறுத்தெறிந்து
வாகைச் சரமொன்றை
தொடுத்து வைக்க
வெற்றிப் பரணி பாட,
பாலையாய் நிற்கும் உன்னைப்
பச்சைப்படுத்த.



## அருணாசலம் விஜயரட்ணம்

பருத்தித்துறையில் 1948 இல் பிறந்து ஆழியவளையில் வசித்துவருகின்றார். இவர் நாடகங்களினை நடித்தும் எழுதியும் இயக்கியும் வருவதுடன் வர்ணம் பூசுதல், கரகம் காவடி கட்டுதல், பழக்குதல், கடதாசிக்கூழ் கொண்டு பொம்மை செய்தல், நாடகசீன் தயாரித்தல், மேக்கப் செய்தல் என பல்துறைசார்ந்த திறமையுள்ளவர்.

# புதுவாழ்வு

*சேலை கட்டிச் சீரழிந்தோம்*
*சினந்திங்கே புறப்பட்டோம்*
*சின்ன உலை வைத்து*
*சீராகச் சோறாக்கி*

*வண்ணக்கறி வைத்து*
*வடிவாகப் பரிமாற*
*சின்ன மீன் பொரியலுடன்*
*சிறப்பாக நான் கொடுத்தேன்.*

*நாக்கில் சுவை இல்லை*
*நல்ல வெறி*
*என் நாதர்க்கு*
*நடக்கவோ தென்பில்லை*

*மது தந்த மயக்கத்தில்*
*மனைவி தலை நோக்கி*
*தட்டியே விட்டார்*
*வட்டில் அதனை*

ஏன்றி உப்பில்லை
என்று எட்டியே உதைத்தார்
உதடோ கிழிந்தது
என் உறவோ முறிந்தது.

பெண் பார்த்த போதுதான்
மண் பார்த்து நின்றேன்.
பொன் கேட்டார் போதுமளவு
பணமும் கேட்டார்.

மண்ணும் கேட்டார்
மனையும் கேட்டார்
அத்தனையும் கொடுத்தார்
என் தந்தை.

அழித்தே ஒழித்தார் என் கணவர்
உண்ண உணவும் உடுக்க உடையுமில்லை
படுக்கவோ பாயுமில்லை
பாசம் இல்லை பத்தாவிடம்.

யாசகம் கேட்க யோசனை கொண்டேன்.
வந்ததைய்யா வாழ்வாதாரம்
தந்ததையா தையல்
இயந்திரம்.

பாரினில் நானும்
நல்ல நிலையில்
வாழும் மங்கை என
போற்றப்படுவேன்.

தம்பிஐயா பாலசிங்கம்

# பெரிய மனிதரும் சிறிய உள்ளமும்

துடிக்குதே வயிறு துன்பமோ பெரிது
அடிக்கடி கையினை நீட்டியே பிச்சை
எடுக்கிறாள் ஒருத்தி - ஏனெனில் வறுமை
இடுப்பிலோ குழந்தை இதயமோ வெறுமை.

எவருந்தான் அவளின் ஏழ்மையைக் கண்டிலர்
கவரும் நல் அழகினை கண்களால் பார்க்கிறார்
பெரியவர், பணக்காரர், இளைஞர்கள் நிற்கின்றார்
வரிசையில் நிற்போர் அனைவரும் "மனிதர்கள்"

பிஞ்சுபோல் குழந்தையை பின்னரும் காட்டியே
கெஞ்சியே பலரையும் கேட்கிறாள் பிச்சை.
நஞ்சுபோல் வெறுத்தனர் நாவினால் திட்டினர்
கஞ்சிதான் குடித்திட கழிவிரக்கம் காட்டிலர்.

தலைகளைக் குனிந்தாலும் தங்களை மறைத்தாலும்
சிலையெனச் சிரித்தது சிறியதோர் குழந்தை
தாயவள் குனிந்தாலும் தலையதை மறைத்தாலும்
சேயது சிரித்தது சிறுகரம் நீட்டி.

வரிசையில் நின்றவோர் வனிதையின் இடுப்பில்
சிறியதோர் குழந்தை கரம் நீட்டிச் சிரித்ததை
வறியவள் கண்டாள் சிந்தித்துப் பார்த்தாள்
உரியதன் கடமையை உணர்த்திட நினைத்தாள்.

குழந்தையின் நிலையினை வறியவள் உணர்ந்ததும்
இழந்தவை பலதையும் பெற்றவள் ஆனாள் - ஓர்
பத்து ரூபாவைப் பாசமாய்க் கொடுத்து
முத்துக் குழந்தைக்கு முத்தமும் கொடுத்தாள்.

அவளுக்கு யாரேனும் அன்னமுண்ணக் கொடுக்காமல்
அவள்தான் கொடுத்தாள் அச்சிறு பிள்ளைக்கு.
பெரிய மனிதராம் வரிசையில் நிற்போர்
"சிறிய உள்ளங்கள்" சிந்தித்தால் கேவலம்.

ஞாபகம் வைத்துக் கொள்வது
மூளை உள்ளவர்களுக்குச் சுலபம்
மறப்பது என்பது இதயம்
இல்லாதவர்களுக்குச் சுலபம்.



## செல்வி அன்னலட்சுமி கந்தசாமி

நாகர்கோவில் மேற்கில் 1946 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஓய்வு பெற்ற ஆசிரியராவார். இவர் பயிற்சி ஆசிரியராக இருக்கும் காலங்களில் கதை சொல்லல் போட்டியிலும் கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக் கிடையே நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியிலும் முதலாம் இடங்களினைப் பெற்றுள்ளதுடன், யாழ் மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கிடையே நடாத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டியிலும் முறையே 2ஆம், 3ஆம் இடங் களினைப் பெற்றுள்ளார்.

# போதைக்கு விடை கொடுப்போம்

பொல்லாத நான்முகனே பூவுலகை நீ படைத்தாய்
பூவுலகைப் படைத்துவிட்டுப் போதையையும் ஏன் படைத்தாய்?
போதையினால் நாடெல்லாம் பொல்லாங்கு நேர்கிறது
வேதனைகள் பட்டு மக்கள் வீணில் அலைகின்றார்.

கள் என்னும் போதையினால் கவலை பெரிதாச்சு
கள்ளை அருந்திவிட்டுக் கதைகள் பல தாமளப்பார்
மனைவி மக்கள் பட்டினியில் வாடி வதங்குகிறார்
மானமின்றி வாழ்கின்றார் மதியார் பிறர் அவரை.

அடிப்படை வசதியில்லை அடுப்பிலே நெருப்புமில்லை
பள்ளி செல்லும் பிள்ளைகளும் படும்பாடு கொஞ்சமல்ல.
உழைக்கும் உழைப்பெல்லாம் உறிஞ்சும் பெருங்குடியால்
உருக்குலையும் குடும்பங்கள் எம்மூரில் உண்மையிது.

அறிவுரைகள் சொன்னாலும் அவர்க்கு அது வேம்பாகும்
நெறி தவறி வாழ்ந்திடுவார் நிலைதடு மாறிநிற்பார்
சமூகத்தைச் சீரழிக்கும் சின்னமாய் மாறிடுவார்
சண்டித்தனங்காட்டித் தான் வீரன் என்றிடுவார்.

எண்ணிரண்டு வயது வந்தால் இளவயதுக் காரரெல்லாம்
கண்மண் தெரியாமல் குடித்துவிட்டு ஆடுகிறார்
சந்திவழி நின்று சரசம் பொழிந்து நிற்பர்
சண்டைகள் போட்டு நிதம் சங்கடத்தில் மாட்டிடுவார்.

சட்ட விரோதமாய் சாராய விற்பனைகள்
காசில்லா விட்டாலும் கடனங்கு பெற்றிடலாம்
கண்ணீர் விட்டழுகின்றார் கட்டிய மனைவியர்கள்
பெண்கள் படும்பாடு பெரும்பாடு ஆனதிங்கே.

கசிப்பு என்னும் போதையினால் ஈரல் கருகும் என்று
கதைகள் சிலர் சொல்லுகிறார் ஆனாலும் நம்நாட்டில்
கசிப்பைக் குடித்துவிட்டுக் கண்டபடி ஆடுகிறார்
மதிப்பு மரியாதை மானமின்றி வாழுகின்றார்.

மனைவி மக்கள் பயந்தோடி மறைவிலே நின்றிடுவர்
கறிசோறு பாத்திரங்கள் கலகலக்கும் அடுப்படியில்
திறமான பேச்செல்லாம் அவர் வாயில் உதிரவிட்டு
உரமாகக் கத்தி விட்டு உறக்கமதில் ஆழ்ந்திடுவார்.

வெற்றிலையும் புகையிலையும் மென்று மென்று துப்புகிறார்
புற்றுநோய் தாக்கும் என்று சொன்னாலும் விடமாட்டார்
போகுமிடமெல்லாம் கூச்சமின்றித் துப்புகிறார்
பொறுப்பற்று வாழ்ந்து கொண்டு வெறுப்பதனைத் தேடுகிறார்.

கஞ்சாக் குடித்துவிட்டுக் களவெடுக்கச் செல்லுகிறார்
அஞ்சாமல் கொலை செய்வார் அசுரத்தனம் கொள்வர்
கொஞ்சமும் இரக்கமில்லை கொடூர மனங்கொண்டு
நஞ்சாகிச் சீரழிந்து நாட்டைக் கெடுத்திடுவார்.

பெண்ணாகப் பிறந்தவர்கள் பெருந்துயருக்காளானார்
வல்லுறவுக் கொடுமை யெல்லாம் வகைதொகையாய் நடக்கிறது
எத்தனை இளம் பெண்கள் இன்னுயிர்கள் வீணாச்சு
அத்தனையும் போதையினால் வந்த வினைதானே.

போக்குவரத்தில் இன்று போதையின் ஆதிக்கம்
ஆக்கி நிற்கும் நாட்டில் என்றும் அகால மரணங்கள்
நாளிதழில் செய்திவர நடுங்குகிற துள்ளமெல்லாம்
ஏனிந்த வேதனைகள் எல்லோர்க்கும் சோதனைகள்.

போதை ஒழிப்பு என்று பெரிய சுவரொட்டிகள்
ஏது செய்தும் பயனில்லை ஏட்டளவில் தானெல்லாம்
மேலிடத்தில் உள்ளோரும் மேலோர் போல் வாழ்பவரும்
போதை வஸ்துக் கடத்தலிலே பெரும்பங்கு ஆற்றுகிறார்.

இன்னும் ஒரு போதை இப்போது நாட்டிலுண்டு
ஆச்சிமார் அப்புமார் அதற்கடிமை ஆகிவிட்டார்
பேரமக்கள் தம்முடனே பொழுதைக் கழிக்காமல்
தொலைக்காட்சி நாடகத்தில் மூழ்கித் தவிக்கின்றார்.

மனக்கவலை தீர்த்துவிடும் மருந்திதுதான் என்றிடுவார்
தொலைக்காட்சி நாடகங்கள் அத்தனையும் பார்த்திடுவர்
மின்சாரம் தடைப்பட்டால் மிக்க கவலை கொண்டு
என் செய்வோம் என்று சொல்லி ஏங்கித் தவித்திடுவர்.

பாட்டி அன்று சொன்ன கதை பசுமையாய் இருக்கிறது
கேட்டுவிட்டு இன்னும் சொல் இன்னும் சொல் எனக் கேட்போம்
அந்த ஒரு பொற்காலம் இனிக் காண்பதெப்போது
இந்த நிலைமை எல்லாம் இடையில் வந்து சேர்ந்தவினை.

விளையாட்டு வீரருக்கும் விளையாட்டுக் காட்டுமிது
ஊக்க மருந்தென்று போதைதனை உட்கொண்டு
சங்கடத்தில் மாட்டிவிட்ட சங்கதிகள் பலவுண்டு
அங்கவர்க்கும் போதையினால் அநியாயம் நேர்ந்ததுண்டு.

பல்கலைக்கழகமும் பழுதாகும் செய்தியினைப்
படித்தவர்கள் சொல்லி இன்று பரிதாபப் படுகின்றார்
எங்கும் பரவுகின்ற இரக்கமற்ற போதையினால்
கலாசாரம் சீரழியும் காலம் வந்து சேர்ந்தது காண்.

போதை வியாபாரம் பெருகிவிட்ட செய்தியினை
நாளாந்தம் ஊடகங்கள் நன்கு தெரிவிக்கும்
இந்தநிலை பெருகிவிட்டால் எங்கள் கதி என்னாகும்
நல்லவர்க்கும் நாட்டினிலே தொல்லை வரும் என்ன செய்ய?

பொன்னான குறள் தந்த வள்ளுவரும் சொல்லுகிறார்
உன்னாலே கேடு வரும் உண்ணற்க அதை என்றார்
மன்னாதி மன்னர்களும் மதிப்பிழப்பர் உன்னாலே
எந்நாளும் நீ வாழ்ந்தால் இவ்வுலகம் என்னாகும்.

பஞ்சமா பாதகஞ் செய் படுபாவி நீயன்றோ
வஞ்சனைகள் செய்யாதே வாழ்வைக் கெடுக்காதே
கெஞ்சுகிறேன் நானுன்னைக் கேடொன்றும் செய்யாதே
இந்த மண்ணை நீ விட்டு எங்கேனும் ஓடிவிடு.

பொன் பொருளை அழிக்கின்றாய் பூவுலகை வாட்டுகிறாய்
நல்லவர்கள் உன் செயலால் நாளுந் துயரடைவர்
மெல்ல மெல்ல நீயிந்த மேதினியை விட்டகன்று
எங்கேனும் சென்று விடு தரணியை வாழவிடு.

நற்பெயரைக் கெடுக்கின்றாய் நாட்டைச் சீரழிக்கின்றாய்
கற்ற நல்ல மனிதருக்கும் கவலையை ஊட்டுகிறாய்
பெற்றவர்க்கும் உற்றவர்க்கும் பெருநெருப்பை மூட்டுகிறாய்
இத்தரையை நீ மறந்து எங்கேனும் ஓடிவிடு.

இங்கு நீ நில்லாது எங்கேனும் சென்றுவிட்டால்
எங்கள் குலம் வாழும் ஏற்றம் மிகுந்து வரும்
இல்லம் எங்கும் மகிழ்ச்சி பொங்கும் ஏதும் கவலையில்லை
இறைவா உன் அருளாலே இதுவொழிய வழிசமைப்பாய்.



## அருந்தவச்செல்வம் விநோத்

மருதங்கேணியில் 1987 இல் பிறந்த இவர் பாடசாலைக் காலங்களில் கவிதை எழுதி வாசித்தும் நாடகங்கள் எழுதிக் கொடுத்தும் வந்துள்ளார். இவ் ஈடுபாடு தொடர்ந்து இற்றைவரை வழிநடத்த பல நிகழ்வுகளில் கவிதை எழுதி வாசித்து பலரது பாராட்டினைப் பெற வைத்துள்ளது. அத்துடன் மரபுக் கவிதை எழுதும் ஆற்றலும் இவருக்கு உண்டு.

# மருதங்கேணி

*இன்னல் பட்டு*
*இறுதி யுத்தம் கண்டு*
*சன்னம் பட்டு(ம்)*
*சரிந்தெழுந்தாயடா!*
*ஆழி முட்டி*
*அலைய விட்டு(ம்)*
*அனல் குடுத்து(ம்)*
*அகன்றாயடா!*

*ஆதி தொட்டு*
*சாதி விட்டு*
*வீடு கட்டி*
*வாழ்ந்தோமடா!*

*மண் வீடாய் மருதங்கேணி*
*மலை போன்ற சிகரமடா! (உயரமடா)*
*வடமராட்சி கிழக்கினொரு*
*தலை நகரமடா!*
*நான் பாடும் கவிதைப் பொருள்*
*தலைவனடா!*

நீ வடிக்கும் சித்திரத்தின்
சிலை உருவமடா!

படகோடி வாழும் - சின்ன
பூமியடா
தேரிழுத்து நாம் செல்லும் - சின்ன
சாமியடா
ஏருழுது வயல் விதைக்கும் - நல்ல
காணியடா
மரமேறி நாம் பருகும் - தெருக்
கேணியடா

எல்லைகள் கூற
வல்லவன் கோவிலடா!
தொல்லைகள் தீர்க்க
கடற்கரைப் பிள்ளையார்
நம்மையே காக்க
வயிரவ கோவிலடா!
தீவினை போக்கும்
விறுமரே தெய்வமடா!

முத்துமாரித் தாயுடனே
ஞான வைரவரும்
வடலியடிப் பிள்ளையாரும்
மடத்தடி நாயகனும்
புளியடி தேவகனும் தெற்கு மாரியுமாய்
தெய்வங்கள் சூழவரும்
உருண்டைத் தீவடா! நமக்கு
உவந்த தாயடா!

இடியாகி மின்னலாகி
இமயம் தொட்ட

இளம் வீரர் கழகமடா

இது கணேசானந்தா உதயமடா!

நடுங்க வைக்கும் ஆட்டமடா!

நம்பிக்கை நட்சத்திரமடா!

நரம்பெல்லாம் உறையுமடா! - உள் (எதிரி)

உடம்பிங்கு ஆடுமடா!

(இது) மருதங்கேணியடா - பகை

முண்டியிடும் நாளையடா!

தோள் சுற்ற மாலையுண்டு

வாள் சுற்ற வீரனுண்டு

கல்வி கற்ற தேவனுக்கும்

கலை பயிற்ற ஆசானுண்டு.

அதிபராய் ஆசானாய்

தாதியாய் மருத்துவராய்

மேசனாய் தச்சனாய்

மேதாவிகள் பலருண்டு

சோதியாய் மின்னுமோர்

பூமிதானடா! இது

மருதங்கேணி என்னுமோர்

வாணி தானடா!

சங்கங்கள் பலவுண்டு

பங்கங்கள் ஏதுமில்லை

சாதிக்க நேரமுண்டு

பந்தங்கள் விடுவதில்லை

வீதியில் இறங்கினால்

வீண் வம்பு நேருமென்று

வீட்டுக்குள்ளே முடங்கினால்

வீழ்வது யாரடா?

எட்டிப் பார்க்கையில்

எம்மவன் வீழ்ந்திருப்பான்.

உரிமை உண்டு
உனக்கும் சில
கடமை(கள்) உண்டு
வலிமை உண்டு
பகை முடிக்கும்
கரங்கள் உண்டு
எல்லைகள் தொட்டுச் செல்லும்
தொல்லைகள் விரட்ட
வடிவங்கள் மாறியும்
வழியினைக் காட்டு.

மண் வாழ
மருதங்கேணி வாழ
விண் ஏறியும்
விளக்கினை ஏற்று
விடி வெள்ளியாய்
ஒளியினைக் காட்டு.

**தோல்வியின் போது தேற்றுவதற்கு ஆள் இல்லையே**
**என்பதை விட**
**வெற்றியைப் பகிர்ந்து கொண்டாட ஆள் இல்லை**
**என்பதே பெரிய தோல்வி.**



## திருமதி மகேஸ்வரி பரமேஸ்வரன்

செம்பியன்பற்றில் 1969 ஆம் ஆண்டு பிறந்த இவர் பாடசாலைக்காலங்களிலேயே கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார். 90 களில் பத்திரிகையில் "தடம் மாறும் தண்டவாளங்கள்" என்ற சிறுகதை யினையும் 2008ல் க.பொ.த உயர்தரம் பாடத்திட்டத்திற்கமைவாக கைகேயி சூழ்வினைப்படலம், இலக்கண வினாவிடை போன்றவற்றினையும் எழுதியுள்ளார்.

# மறக்கமுடியவில்லை

*காய்கதிர்ச் செல்வன் கதிரைப்பரப்பி*
*காலைப்பொழுதாய் காட்சி தருகின்றான்*
*திரைகள் ஆர்ப்பரிக்கும் ஓசை*
*திக்கு எட்டும் ஒலி எழுப்ப - அந்த*
*இனிய காலைப்பொழுதினின் காட்சியை*
*இன்று வரை என்மனம் மறக்கவில்லை.*

*கடற்கரையில் கால் பதித்த தடயமாக*
*கணப்பொழுதில் அழிக்கின்றது*
*அலைக்கரம் தொட்டு*
*தந்தையின் கரம்பிடித்து நடந்த பாதையிலே*
*தனிமையில் நடக்கும்போது தவிக்கின்றேன்*
*தந்தை தாயை இழந்து.*
*இன்று தந்தையில்லை அவர் ஊர் இல்லை*
*இன்னும் ஆறவில்லை துயரத்தின் வடுக்கள்.*

*அன்னை மடியில் அரவணைப்பில்*
*என்னை மறந்திருந்த அந்த நாள்*
*என் அடிமனத்தில் என்றும் பசுமையாய்*
*அன்னையின் வருடல் பசுமரத்தாணிபோல்*
*பதிந்துள்ள நினைவுகளை பறைசாற்றி நிற்கின்றது.*

பனைமரத்தைப் பார்த்தவுடன்
பழைய நினைவுகள் பாய்ந்தோடி வருகின்றன
வீட்டு முற்றத்தில் இருந்து தம்பி தங்கையுடன்
விளையாட்டுக்கள் விளையாடிய போது
அம்மாவிடம் அடிவாங்கி அழுததும்
அப்பா வந்து ஆதரவு கூறி ஆசையாய் முத்தமிட்டதும்
அவர்களின் அன்பை நினைத்து ஆசுவாசப்பட்டு
அன்பில் கட்டுண்டு வாழ்ந்த அந்த நாட்கள்...
நினைத்துப் பார்க்கும்போது கண்ணீர்முட்டுகிறது.
நினைவு தெரிந்த நாள் முதல் நான் பார்த்தவீடு - இன்று
கம்பக் கூடுகளான எனது வீடு
கல்லும் மண்ணும் நிறைந்து காணப்படுகின்றது

அம்மா அப்பா அக்கா தம்பி தங்கை
அம்மம்மா தாத்தா என உறவுகள்
அன்று ஒன்றாக ஒரு குழுவாக
இன்று சிதறல்களாக திக்குகளில் அவலமுடன்
இன்னல் பல அடைந்து வாழ்வதும்
இன்னமும் மறையவில்லை மனதைவிட்டு.

பாசப் பறவைகளாய் பிறந்து திரிந்த - அந்தப்
பாதையெல்லாம் என்னைப் பார்த்து
பரிகாசம் செய்கிறது நீ மட்டும் ஏன்
பரிதவித்து நிற்கின்றாய் எங்கே உறவுகள் என்று.
பாதியிலே தொலைத்துவிட்ட
பலகதைகள் தெரியாது போலும் பாதைக்கு.

தன் இரவுகளின் தூக்கத்தையும், ஆசைகளையும்
என் தாய் எனக்காய் தொலைத்தாள்
இன்று யாரும் அற்ற ஏதிலியாய்
இன்னமும் வாழ்வை எண்ணி மீண்டும்
இனிய முகங்காட்டவருவா என
இறுகிய முகத்துடன் இருக்கின்றேன் - ஆனாலும்
இனிய நினைவுகளை மறக்க முடியவில்லை.



## வேலாயுதம்பிள்ளை அகிலேஸ்வரன்

மருதங்கேணியில் 1990 இல் பிறந்த இவர் பாடசாலைக்காலம் முதல் கலை இலக்கியத்துறையில் ஈடுபாடுடையவர். இவரது கவிதைகள் பல நாளிதழ் களிலும், வாரமலர்களிலும் பிரசுரமாகி வருகின்றன. அத்துடன் பத்திரிகைகளில் விவாத மேடை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம் என இவரது பயணம் நீண்டு செல்கின்றது. அண்மையில் முகப்புத்தகம் வாயிலாக அதிகமாக எழுதி வருகின்றார்.

# மீனவர் வாழ்வியல்

*உப்புக் கடலெங்கும் மீன்வளம்*
*மீனவன் வாழ்வியலில்*
*மீன்படும்.*
*மீனில்லாக் காலமெல்லாம்*
*இவன் குடிசை வீடும்*
*கண்ணீரோடு பலகதை*
*பேசும்.*

*உயர்தரம் தாண்டிய*
*ஆண் மகனும்*
*ஒரு அடி தாண்ட*
*முடிவதில்லை.*
*பொருளாதாரம் வந்து*
*காலை வார*
*கடலிலே குளித்து*
*உழைப்பாளியாவான்.*

*கடற்கரையோரமெங்கும்*
*தென்னை வளம்*
*காகங்கள் குடும்பமாக*

வாழும் இல்லம்.
கூடு கட்டும்
காலமெல்லாம்
குட்டுக்கள்
வாங்காத
மனிதரில்லை.

மீனவன் நினைப்பு
கடல் பற்றித்தான்
மீன் பிடித்தால்
சொதி குழம்புதான்
மணக்கும் பொரியலும்
கலந்திருக்கும்
மனைவியின் காதலும்
மனம் கவரும்.

சூடை வலை
அறக்கொட்டியான்
கரையோர மீன்பிடிக்கு
அதிகம் உதவிடும்.

சம்மாட்டி மார்களின்
கரைவலையுண்டு
சாமங்கள் தாண்டியும்
வளைப்பதுண்டு.

வளிச்சல் வலை
திருக்கைவலை
ஆழ்கடல் மீன்பிடியில்
அதிகமிருக்கும்.

மிதப்பு வலையில்
முரல் மீன் சிக்கும்

தாண்ட வலையில்
சங்குகள் அகப்படும்.

அம்மா பாட்டிற்கு குறைவில்லை
உடல் சுமை குறைவாக
மனதில் இன்பம் மேலோங்க
பெரிய மீன்கள் அகப்படும்.

கடலெங்கும் அணிவகுக்கும்
அழகு படகுகள்
இரவெல்லாம் கடலில்
படகுகளின் விளக்குகளால்
திருவிழாக் கோலங்கள்.

தூண்டிலில் கணவாய்
பிடிபடும் காலமெல்லாம்
மீன் கூலர்களின் அணிவகுப்பு
படையணியைப் போல
காட்சி தரும்.

மீன்களின் விலையை
கூறி விற்பர்.
கையிலே பணத்தை
அள்ளிக்கொள்வர்.

கரையோரமெங்கும்
மட்டிகள் நிறைந்திருக்கும்
சிங்குறால் வளர்ப்பிற்கு
ஏரலே உணவாகும்.

வயோதிபம் கண்ட
அப்புவும்

கட்டுமரமேறிக் கூடுவிட்டு
ஒட்டி, ஓரா கணவாயுடன்
வீடு திரும்புவார்.

அமெரிக்கன்மா பிட்டென்றால்
அதனுடன் மீன் பொரியல்
ஒட்டியிருக்கும்.
நெல்லரிசிச் சோறென்றால்
சொதியோடு மீன் குழம்பு
குடியிருக்கும்.

பதினாறு முடிய முன்பே
படகேறிக் குதிக்கும்
மீனவன் பிள்ளை
இருபது வயதினிலே
இவனுக்கொரு குழந்தை
பிறக்கும்.

பருவமெய்தியவுடன்
பெரிய மனுசியாகிவிட்டேன்
என்ற நினைப்போடு
பல்காட்டி சிரிக்குது மங்கை.
பெட்டையின் பார்வை பட்டு
பெடியன் பல்சர் வாங்கி முறுக்கி
வண்ணத்துப்பூச்சியை
வட்டமிட்டுத் திரிவான்.

மாரி பிறந்தால்
உழவன் வாழ்வியலில் மகிழ்ச்சி
கரையான் வாழ்வியலில்
கண்ணில் நீர்வீழ்ச்சி.

நெய்தல் நிலத்தவர்
தொழில் செய்யாதுவிடின்
நாட்டின் பொருளாதாரம்
கவிழ்ந்திருக்கும்.

கடவுள் தந்த
தொழில் வளம்
கடலில் நிறைந்த
பொருள் வளம்
வளமாய் கிடைத்த வாழ்வோடு
மீனவன் என்று புகழ்பாடு.

சினங்கொண்டு
நிம்மதியை இழப்பதா?
மௌனமாக இருந்து
நிம்மதி பெறுவதா?
எது உனக்குத் தேவையோ
அதன்படியே செய்.



## சாமித்தம்பி இராஜரட்ணம்

நாகர்கோவிலில் 1951 ஆம் ஆண்டு பிறந்த இவர் அம்பனில் வசித்துவருகின்றார். நாடகம், வில்லுப்பாட்டு போன்ற துறைகளில் ஈடுபாடுள்ள இவர், நாடகங் களினை நடித்தும் பழக்கியும் வருகின்றார். புராணபடனம் செய்வதில் விற்பன்னரான இவர் நாகர்கோவில் நாகதம்பிரான் கப்பல் பாட்டினையும் பாடிவருகின்றார். பல பாடசாலைகளில் தமிழ்த்தினப் போட்டிகளுக்கு வில்லுப்பாட்டினையும் எழுதியுள்ளார்.

# முற்றத்து மாமரத்தில்....

மூன்றாண்டு கால முகாம் வாழ்க்கை முடிந்தபின்
மீண்டு திரும்பி வந்தோம் வேறிடம் போல் தோன்றிற்று.
ஈண்டு எமதிடம் ஏதெனவே தேடியபோது
நீண்டு உயர்சூதம் எம்மிடத்தைக் காட்டியதே.

கெட்டு மடிந்தாலும் கேடு துயர் வந்தாலும்
நட்டார் போல் நின்று நமதிடத்தை காட்டியதே
தொட்டோ மரத்தடியை சூழ்ந்தோ அதனருகே
எட்டி நின்று பார்த்தோம் எங்குமொரே பற்றையதே.

வெட்டியகற்றி விரைவாகச் செப்பனிட்டு
கொட்டிலமைத்துக் குடியிருந்தோம் எம்வளவில்.
எட்ட இருந்தவர்கள் எல்லோரும் எம்போல
கட்டிக் குடிசையிலே கண்ணயர்ந்தோம் என்போமே.

செல்லடி பட்டு சிதைந்த உருவோடு எங்கும்
புல்லும் புதரும் சருகும் நிறைந்திடவே
மெல்லத் தளிர்த்து வேறாய்க் கிளைவிட்டு
நல்லார் போல் எம்மை நனி குளிர வைத்ததுவே.

கெட்டுக் கிழிந்து கிளையும் ஒடிந்தங்கு
பட்டமரம் போலப் பார்ப்பதற்கு நின்றமரம்
எட்டத்துச் சொந்தம் கண்டு இன்புற்றார் போலங்கு
கட்டிக் கிளைவிட்டு காய்த்தங்கு பூத்ததுவே.

முற்றத்து மாமரத்து முன்னிருந்த சருகொதுக்கி
பற்றையகற்றிக் காணி பதப்படுத்தும் வேளையிலே
சற்றுக் களைத்துச் சரிந்தேன் மரநிழலில்
உற்ற பல நினைவலைகள் ஓடிற்று என்மனத்தே.

ஓடோடென்று ஓடி உள்ளதெலாம் விட்டோடி
வாடி வதங்கி வயிற்றுக்கு உணவின்றி
தேடித் தேடி எதுவும் தெரியாமலே தேடி
கூடிக் கூடி இங்கு கூட்டமாய் வந்ததுவும்

உற்றார் மடிந்ததும் உறவைத் தொலைத்ததும்
பெற்றாரை விட்டுப் பிரிந்து தனி இருந்ததுவும்
கற்றாவை விட்டகன்ற கன்றைப் போல் கதறியதும்
தெற்றெனவே என்மனத்தில் திரைப்படமாய் ஓடிடவே

எண்ணாத எண்ணமெலாம் எண்ணிஎண்ணி ஏங்கையிலே
அண்ணாந்து பார்த்தேன் மரத்தில் அழகான கிள்ளைஒன்று
பண்ணாக நோக்கி பழங்கோதி எனை இகழ்ந்து
கண்ணாலே பார்த்துக் கதைப்பது போல் கத்தியது.

கேடுகெட்ட மானிடனே கேள் எடா ஒரு சேதி
மாடு சுற்றம் மக்கள் மனையும் மடிந்ததென்றோ
பாடுபட்டுத் தேடி பணத்தைத் தொலைத்தனென்றோ
வாடி இரங்காய் உலகில் வந்தவைகள் போவது மெய்.

பற்றற்றார் போலப் பரந்த மனத்தோடிங்கே
பற்றிப்படர்ந்து பழந்தந்து காயுதவி
மற்றதற் கேதேனும் மாறுதவி பாராது
உற்றதொரு சேகரத்தின் உண்மை அறியாதோ.



## திருமதி கீர்த்தனா சிவதாசன்

அம்பனில் பிறந்துள்ள இவர் நாடகமும் அரங்கியலும் ஆசிரியராவார். அத்துடன் கட்டுரைகள், கவிதைகளினை "நான்" உளவியல் சஞ்சிகை, "கடுகு" சஞ்சிகை, "உதயதாரகை", "புதுவிதி" போன்ற பத்திரிகைகளிலும் எழுதிவரும் இவர், "கடுகு" சஞ்சிகையின் இணையாசிரியராகவும்,"செந்தமிழ்" பத்திராதிபராகவும், நாடக நெறியாளராகவும் விளங்குகின்றார்.

# வாழ்வியல்

இணையற்ற சுதந்திரம்
எனச் செப்பப்படும்
சுற்றியிருக்கும் பண்பாடுகள்
சிதறுண்ட பூடகமொழி,
கூர்மையான உரைநடை,
அபரிமிதமான இலாபச் சுரண்டல்,
உழைப்பின் அர்த்தமிழப்பு
என்பன தொடர்ந்து கொண்டிருக்க

மன அடுக்குகளின் பிரதிநிதியாக
பண்பாட்டு ஒழுக்க விதிகளுக்கு
புறம்பாகக் காரியமாற்றி
அறிவைத் துரத்தும் தருணமாக
புதிய பகுப்பாய்வுகள் நீண்டு கொண்டிருக்க

நம் புறவயமான அர்ப்பணிப்பே
கலாசார மதிப்பீடுகளின் பிரகடனமாக
அறிவியல் கதைகளாகிய
விஞ்ஞான நம்பிக்கைகளை
மெய்ஞானம் பொய்யாக்கி

உண்மை என்று
புதிய சாளரங்கள் வழியே அர்த்தப்படுத்துகின்றது.

அராஜகங்களின் பிரவாகம் பெருக்கெடுக்க
நுகர்வு, சுயநீக்கம் பெற்று,
பன்னாட்டு நிறுவன
பூகோளமயமாக்கல் வெற்றிக்கு
உள்நாட்டு யுத்தங்கள் தீர்வு காண

பன்னாட்டு சந்தை சக்திகளுக்கு
ஒரு தேசத்தின் போர் அழிவு
இன்னொரு தேசத்தின்
ஆக்கபூர்வ பிரகடனமாகின்றது.

நம்மவர் ஊடகங்களில் உதயமாக்கும்
கலாசார பண்பாட்டு உற்பத்திகள்,
தனிநபர் அரசியல்
உள்ளடக்க உருவாக்கங்களே,
வெகுசன கலையக உறுப்பினர்கள்
முன்மொழியும் அர்த்தங்களே,
இன்று நம் வாழ்வியல் சார் கூறுகளின்
மாற்றப் போக்குகளாகின்றது.

அவசரப்பட்டுவிட்டோமென்பது
நிதானமாக இருக்கும்போதுதான் புரிகிறது.



## டிலோஜினி மோசஸ்

கட்டைக்காட்டினைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பாடசாலைக் காலத்தில் இலக்கியம், நடிப்பு, விளையாட்டுத் துறைகளில் தேசிய ரீதியில் வெற்றி பெற்றுள்ளதுடன் "அகரம்" என்னும் கவிதைத் தொகுப்பினையும் வெளியீடு செய்துள்ளார். தற்போது பத்திரிகைகளில் கவிதை, சிறுகதை, கட்டுரைகளினை எழுதிவருகின்றார்.

## விலை மாது

ஏதோ ஓர் ஏக்கம்
விழிகளில் வழிந்தாலும்
உதடுகளில் ஒட்டிய
ஒய்யாரப் புன்னகை
"தொழில் உத்தி"

அழகான சேலையதை
அரைகுறையாய் அணிந்ததால்
அங்கத்தில் பாதி
அந்தரங்கம் பேண
அம்பலமாய் மீதி....
அவளுக்கு அவளே
விளம்பரம் செய்கிறாள்....

சாதாரண பேச்சிடையில்
சங்கடப் பட்டவளாய்
செப்பத் தொடங்கினாள்
சோக வரலாறு....

உழைத்துப் பிழைத்திட
இத்தனை வழியிருக்க
உடம்பினை விற்றல்
உகந்ததோ என்றேன்....

உடம்பினை விற்காமல்
உறவுகளைக் காத்திட
உரியவழி உரைப்பின்
உதறுகிறேன் என்றாள்....

எத்தனை பேருக்கு
விருந்தாய் இட்டாய் - உன்
கட்டான தேகத்தை
விட்டுக் கொடுத்து?

விருந்து என்பது
விருப்போடு தருவது
வெறுப்போடு அல்லவா
வெற்றுடம்பு தந்தேன்....

நிறைவேறா விருப்பேதும்
நெஞ்சறையில் உண்டோ
என்றால்,
நிறைவேறியதென்று
ஒன்றுமே இல்லை என்றாள்...

பாழ்நிலைக்கு ஆளாக
பாவம் யார்
செய்தார் என்றேன்....

பரம்பரைத் தொழிலென்று
படிப்பித்த பிறகு

பாழும் நோயில்
படுத்த தாயையா?

தாய் வயிற்றில் தரித்த பின்னே
தலைப்பெயர் சொல்லவும்
தகுதி தரா அப்பனையா?

தரமே இல்லாத
கருத்தடை மாத்திரையை மீறி
தரம் கெட்ட வயிற்றில்
உருவான பிள்ளைகளையா?

பகலெல்லாம் வெள்ளையோடு
சக்கர நாற்காலிகளில்
ஒற்றைக் கையெழுத்துக்கு
ஒரு நாள் காக்க வைத்தும்
இராத்திரி ஆனதும்
ஒட்டைக் குடிசை வந்து
ஒட்டல் அறை கூட்டிப் போகும்
அதிகார வர்க்கத்தையா?

உணர்ச்சிகளைத் தீர்க்க
உராய்ந்து முடித்துவிட்டு,
உத்தம வேடம் போட்டு
உதவாதவள் பட்டம் தந்த
வாடிக்கையாளரையா?

என்னிடம் பதிலில்லை
ஆனால் கேள்வி இருந்தது....
தயக்கத்தோடு கேட்டேன்
ஏதாவது செய்யவோ?

ஏக்கம் நீங்கிய
ஏளனச் சிரிப்போடு
எதுவும் வேண்டாம்
என்னை விட்டு
விலகி அமர்ந்து விடு....
வெறிக்கும் விழிகள்
உன்னையும் மேயலாம்
உதடுகள் மட்டுமே
உதாசீனம் செய்யும்
கண்களைப் பார்
கள்ளமாய் மேயும் என்றாள்....

காணவில்லை எனக்கு
உள்ளிருந்த கசப்பை
கண்களில் உவர்ப்பு....
ஆம் கண்ணீர் இருந்தது....

**உன் வேதனை பலரைச்**
**சிரிக்க வைக்கலாம். ஆனால்**
**உன் சிரிப்பு ஒருவரைக் கூட**
**வேதனைப்படுத்தக் கூடாது.**



## *சிதம்பரப்பிள்ளை சிவகுமார்*

உடுத்துறையில் 1964 இல் பிறந்த இவர் 1993ல் இலங்கை வானொலியில் அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் இருந்துள்ளார். அக்காலத்தில் இளையதம்பி தயானந்தாவுடன் இணைந்து நடத்திய "கவிதைக்கலசம்" புதிய கவிஞர்கள் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. அத்துடன் பல கவியரங்க நிகழ்வுகளினையும் தலைமைதாங்கி நடத்தியுள்ளார்.

# மனிதத்தைத் தேடி

*நல்ல கவிதையைத் தெரிந்து*
*வைத்திருப்பவர்களிடமெல்லாம்*
*முதலில் மன்னிப்பைக்*
*கேட்டுவிடுதல் நலம்.*

*நம் தகுதியைப்*
*பிறர் அறிந்து கொள்ளாதது*
*ஒரு பெருந் துயரமல்ல.*

*தகுமானதெல்லாம் பிழைத்துக் கொள்ளும்*
*என்பது பரிணாம விதி!*

*நமக்குத் தகாத ஒரு அந்தஸ்தை*
*நாம் அடைந்து விடுவதுதான்*
*தாங்க முடியாத சுமை.*

*நான் கவிஞன் எனவானதும் அதே!*

*என் கவிதை*
*கவிதை போலவும் சிலசமயம்*
*இருக்கலாம். அவ்வளவே!*

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்க் கடந்துவந்த காலமெல்லாம்
சொல்லாக மட்டுமே நமக்குள் எஞ்சுவதாம்!
சொல்லாகப் பதியாத
நினைவெதுவும் நமக்கில்லை!

சொல்லில் பதிந்ததுவும் படைத்ததுவும்
தான் நமது வாழ்க்கை!

காட்டைக் கருவிலேந்தி
நிற்கும் ஒரு சிறுமலர் போல்
வழிவழியாய் நம் வாழ்வை
ஏந்துவன கவிதைகளும்!

சென்றது கருத மாட்டேன்
நாளைச் சேர்வது நினைக்க மாட்டேன்
என்றவன் எனது குரு.

மாமன்னர் கொடைகள் எல்லாம்
ஊரறியாச் சிறுமி தந்த
நீலச் சிற்றாடைக்கு நேர் என்று
பறைந்தவள் என் பாட்டி.

"காற்றில் விநோத நடனம்
புரியும் இலைகளை
என் கைவிரல்களால் பற்றுகிறேன்.
ஒவ்வொரு முறையும்
இலைதான் சிக்குகிறது
நடனம் மட்டும் எங்கோ
மறைந்து விடுகிறது"
என்றவன் எனக்குத் தோழன்!

இந்த மண்ணில் எந்தன்
பாட்டன் பெற்ற தமிழ் வாழ்வு
தந்தை பெற்ற தமிழ் வாழ்வு
சுற்றம் பெற்ற தமிழ் வாழ்வு
எல்லாமும் ஆகத்தான்
நானென்று ஆனேன் நான்!

நான் இந்தப் பூமியின் மனிதன்தான்;
பிரபஞ்சத்தின் ஒரு துகள்தான்;
ஆனாலும்,
என் வீடு, எனது நிலம்,
என் ஒழுங்கை, என் சுற்றம்
என்றே நான் வாழ வேண்டும்.
என் மொழியில் கதைபேசி
நான் அளைந்த புழுதியிலே
நானிருந்து மாள வேண்டும்.

என்னதான் ஊத்தை பிரட்டிக்
குளித்தாலும் என்னை
ஆத்தை போட்ட நிலத்தில்
அப்பிய புழுதி போவதில்லை.

ஆனால்
இந்த வாழ்க்கை ஏன்
இப்படி இருக்கிறது?
இதை என்ன செய்யக்கூடும் நம்மால்?

இடம்விட்டு இடம்பெயர்த்துப் போடுகிறது;
உறவுகளிலிருந்து பிரித்து வைக்கிறது;
வேண்டியவர்களிலிருந்து ஒதுக்கி வைக்கிறது;
உயிரைக் கையில் பிடித்தபடி
ஓட வைக்கிறது....

எதிர்ப்படும் ஒவ்வொரு முகமும்
எதிரியின் முகமென்றாகி
மனதின் எல்லா மூலைகளும்
மற்றவர் தாக்குதலின்
இலக்குகள் ஆயின!

இந்த வாழ்க்கை எத்தனை
குரூரமானது என
மறுபடி மறுபடி நிரூபணமாகிறது.

இருந்த போதும் வாழ்கிறோம்;
இழக்கிறோம்; பெறுகிறோம்;
தொலையாக் காலத்தைத்
தொடர்ந்து தள்ளுகிறோம்.

யாருமற்றுப் போவதே
தனிமை அல்ல;
வாழ்ந்த நிலம் வெறித்துப்
போவதும் தனிமைதான்.

ஆகாயமெங்கும் அலைந்து திரிந்தாலும்
கூடு கட்டவும் குஞ்சு பொரிக்கவும்
என் மரக்கொப்பு வேண்டும் எனக்கு!

வாழ நினைத்தபடி வாழும்படியாகவா
இருக்கிறது இந்த வாழ்க்கை?

தவணை முறையில் கிடைக்கும் இறைச்சிக்காகத்
தன் வேட்டைக் காட்டை இழந்த
மிருகக் காட்சிச் சாலைச் சிங்கம் போல
மனதுக்குப் பிடித்த வாழ்க்கையை
மாதச் சம்பளத்திற்கு இழப்பவரானோம்!

பஸ்ஸில், நடைபாதைச் சந்திகளில்
மாணவர்கள் பேசுவதைக் கேட்டாலே
கூசுகிறது காதும் நெஞ்சும்.
செல்போனுடன் திரியும் சிறுவர்களைக் கண்டால்....
சீறும் மோட்டார் சைக்கிள்களைப் பார்த்தால்....
நாலு பெடியளைச் சேர்ந்தொன்றாய்ப் பார்த்தாலே
நடுங்குகிறது உடலும் மனமும்!

எங்கள் பல்லாயிரமாண்டுக் கலாசாரப் பரம்பலினுள்
பதுங்கிக் கிடந்து முளைத்தவையா இவை?

காலங் காலமாய்க் கையளித்துக் கையளித்துக்
கடைசியில் எங்கள் முறை....

அடுத்த தலைமுறைக்கு நாங்கள்
கடத்தியது இதைத் தானா?

இந்த அரசியல் என்பதென்ன?
பிறர் அவதியை வைத்திங்கு
ஆடுமொரு விளையாட்டா?

அறம் குலைந்து எங்கள்
மனம் திறக்க மறுத்து வெறும்
வயிறு திறந்து முளைவிட்ட
கருவின் பழி அதுவே இன்றும்
நம் பின்னால் தொடரும்
இருளின் விழி!

நம் துன்பங்களுக் கெல்லாம்
மற்றவரே காரணம்
என்பதில் எமக்குச்
சந்தேகம் ஏதும் உண்டா?

எங்களிடம் உள்ள
எந்தெந்தத் தன்மைகள்
தொடர்ச்சியாய் இந்தத் துன்பங்களை
எமக்கு வர வைக்கின்றன
என்றெப்போதேனும்
யோசித்ததுண்டா நாம்?

மோட்டுச் சீனா, கள்ள வடக்கத்தியான்,
தொப்பி பிரட்டிச் சோனி, பாம்பு தின்னிச் சீனன்,
காப்பிலிக் கறுவல், கிழக்கூர்க் கிழங்குகள்....
மற்றவர் மேல் பொச்சடித்துத்
துப்புகின்ற வெறுப்பை
பள்ளிக்கூடக் காலம் முதல்
பழகி வருபவர் நாம்!

மற்றவர்கள் யாரையும் நாம்
மனதால் நெருங்குவதில்லை.

எம்மைத் தவிர எல்லோரும் இழிந்தவரே!
இழிந்தோர் நியாயங்கள்
எமக்கொரு பொருட்டில்லை.

நமது பத்தினித் தங்கங்கள்
பாதை மாறிப் போவதெல்லாம்
பக்கத்துவீட்டுக் காரனால்தான்
எனுமாப் போல் -
அடுத்தவன் மேல் பழி போட்டே
அழிந்து போகச் சம்மதிப்போர் நாம்!

பொய்யில் குளித்து விஷப்
புகை மண்டும் பிணி வாழ்வு.
யாதும் துணையற்றோம்

*யாவரும் பகை என்றோம்.*
*தீதும் நன்றும்*
*பிறர் தந்து வருவதில்லை*
*மறந்தனம் ஆதலின் -*
*சூதும் வாதுமாய்ச்*
*சுத்துவோர்க்குத் தொண்டரானோம்!*

*கானல் நீரில் நீந்தி*
*காற்றில் கோட்டை அமைத்து*
*கற்பனைப் படிகளின் மீதேறி எங்கள்*
*வெற்றிக் கொடியை நாட்டிவிட*
*விடாமல் முயற்சி செய்யும்*
*விசித்திரர்களா நாங்கள்?*

*அறிவை விலக்கிவிட்டு*
*ஆவேசத்தால் ஆகும்*
*என்றிராதீர்....*
*காற்றில் வாள் வீசிக்*
*கைசலித்தலாகும் அது!*

*மருந்துக்குள் என்ன*
*இருந்தால் என்ன?*
*குணமாவது தானே முக்கியம்?*

*குணமாவது பற்றிக்*
*குறியே கொள்ளாமல்*
*மருந்துகளோடு தான் நாம்*
*மல்லுக் கட்டுகிறோம்!*

*நம் சரித்திரத்தில் மாறுதலைச்*
*சர்வதேசத்தார் செய்வர்*
*என்றிருக்கும் என் சனமே!*

அந்த நாடுகள்
உருட்டுவதும் மிரட்டுவதும்
தாயங்கள் தமக்கு விழவே!

சர்வதேச அரசியலில்
சாமான்யர் புலம்பலுக்கும்
நீதிக்கும் பொருளில்லை.

யானைகள்
சண்டையிடும்போது மட்டுமல்ல;
காதல் செய்யும்போது கூட
கீழே நசுங்கி அழிவது புற்கள்தான்!

இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு
ஈராக்கில் போய்ச் செய்த
யுத்தத்தின் போது
இழப்புக்களின் தொகை பற்றி
நிருபர்கள் கேட்டார்கள்.
அன்றைய அமெரிக்கத் தளபதி
*Tommy Franks* சொன்னார்
"செத்தவர்களை நாங்கள் எண்ணுவதில்லை"

நம் இழப்புகளின் நீதி
அங்கிருந்து வரும் என்று
எதிர்பார்த்தபடி இன்னும் நாங்கள்!
பொய்களையே நம்பி
பொய்களையே விரும்பி
பொய்களிலே மகிழ்ந்து
பொய்யாக வாழப்
பழகி விட்டோம்.

தேனே திரவியமே
தேரழகே பேரழகே

ஆராரோ ஆரிவரோ
அம்புலிக்கு நேரிவரோ....
கொட்டிப் புளுகிக்
குளிர வைக்கும் பொய்களெல்லாம்
தொட்டிலிலே துவங்கியது!

வழக்கறிஞன் பொய் சொன்னால்
வாதத் திறமை யென்போம்.

அரசியலில் பொய் ராஜ
தந்திரம் என்றாகும்.

கவிஞன் பொய் சொன்னால்
கற்பனை வள மென்பீர்.

மேடையில் பொய் சொல்வோர்
நாளை மேதகு உறுப்பினராம்.

பத்திரிகைப் பொய்களையே
செய்திகளாய்ச் சேமித்தோம்

அறிஞர்தம் பொய்களெல்லாம்
ஆய்வுகளாய் கட்டுரையாய்....
ஆடு மேய்ப்போன் தான் பார்த்த
அயலானை அடையாளம்
சொல்வதற்கும் எங்களது
அரசியல் ஆய்வுகட்கும்
ஏதேனும் வித்தியாசம்
இருந்த துண்டோ?

பொய் கேட்டுப் பொய் கேட்டுப்
போட்டுடைத்த வாழ்க்கை இது?

பிடித்ததையே கேட்டிருந்து
பிடித்ததையே சொல்லவைத்த
பிடித்த சனி தொலையவில்லை.

பின்னுக்கே பார்த்துப்
பிலாக்கணம் வைக்கிறோமே
முன்னுக்கு வருவதை
உணர்ந்து தப்புகின்ற
மூளையைத் தமிழரேன்
காட்டுவதில்லை என்று
நண்பர் ஒருவரிடம்
கேட்டதற்கவர் யோசியாமல்
"நாங்களெல்லாம் முழங்கால் மாதிரி
முன்புறமாய் மடக்கேலா" என்றார்.

வாழ்க்கையைக் கொண்டாட
வழியறிய மாட்டாத வெறும்
வாய்ச் சவடால் சமூகம்தானா இது?

குறைவிலா துயிர்கள் வாழக்
கொலைகளே கருணை செய்யும்
முறைமையை நம்பி மூன்று
தசாப்தத்தைக் கடந்தவர் நாங்கள்!

இன்னமும் கடக்க மனம் ஒப்பாமல்
இருப்போரும் உண்டிங்கு!

நெருப்பாற்றை நீந்தி வந்தவர்கள்
நிதானிக்க வேண்டாமா இனி?
மீண்டும் உயிர்த்தெழ முடியாதவர்கள்
சிலுவையில் ஏறக் கூடாது!

ஓவியத்தில் காண்கின்ற
முடிவில்லாச் சாலையெனச்
சீவியம் தொடர்கிறது மெய்யாய்த்
தீர்வு வரும் தேதியின்றி!

வேண்டாததைச் செதுக்கி
விலக்கிவிடத் தெரிந்து விட்டால்
கல்லும் கூட மெல்லக்
கடவுளாய் மாறிடுமே!

விலக்குதற்கு நம்மிடம் வெறுப்புளது

வெறுப்பை விலக்கிக் கொள்ளும்
விருப்பம் முன்னால் வந்தால்
விருப்பம் போல் வாழ்வு
தன்னால் வந்து சேராதோ!

தணலைக் கொட்டியோர் மீதும்
தண்ணீரைத் தெளித்துவிட்டுத்
தமிழ் வாழ்வைச் சரிசெய்யும்
விவேகம் இங்கு வாய்க்காதோ?

நாம் மனிதர்கள் என்பதன்
ஞாயந்தான் என்ன?
இனத்தை - தேசத்தை -
காலத்தை மீறித் தன்னையே
பிறனிலும் காண்கின்ற தார்மீகம்!

மலை கண்டு நிமிர்ந்து
கடலோடு விரிந்து மண்ணில்
புழுவோடு சேர்ந்து மனம் துடித்து
வாழ்ந்து களிக்க வேண்டும்
வந்துதித்த மனித வாழ்வை!

என்னிடமா உன்னிடமா பிழை அதிகம்?
இதை நிரூபித்த பிறகுதான் உடன்படுவம்
என்று நாண்டபடி நிண்டு கொண்டால்
இன்னுந்தான் உதைபடுவம்.

அவரவர் சரிகளைச் சொல்வதால்
வருவதல்ல அமைதி
தத்தம் பிழைகளை
உணர்வதால் வருவது!

ஏதிலார் குற்றம் போல்
தங் குற்றம் காண்கிற் பின்
தீதுண்டோ தமிழர் நமக்கும்?

எப்பிடிப் பார்த்தாலும்
கடைசியில் இந்தக் கேள்விதான்
'மனிதர்கள் இணைந்து ஏன்
மகிழ்ச்சியாய் வாழமுடியவில்லை?'

எல்லா அடையாளங்களும் மீறி
எல்லாரும் நாம் மனிதர்கள்
என்பது பொய்யாவதோ?

பிறரின் பாரங்களைத் தாங்கக் கைகொடுத்தால்
எமது பாரங்கள் தாமாகவே கனம் குறையும்.



## *பரமேஸ்வரன் விபுஷா*

2003 ஆம் ஆண்டு பிறந்த இவரிற்கு சிறுவயது முதல் சிறுகதை வாசிக்கும் பழக்கம் காணப்படுகின்றது. இவர் சாண்டில்யனின் மிகப்பெரிய ரசிகையாவார்.

# உணர்வு

நமது அன்றாட வாழ்க்கை தொடங்கும் நேரம்; பறவைகளின் ஒலியும் கோயிலின் மணி ஓசையும் கேட்கத் தொடங்கின. காலைக் கதிரவனின் ஒளி யன்னலின் ஊடாக பாயில் படுத்திருந்த விஷ்வாவின் முகத்தில் பட, அவன் லேசாகக் கண்களைத் திறந்தான். திறந்தால் வீடே அமைதியாக இருந்தது. வீட்டைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். வீட்டில் யாருமே இல்லை. அப்பொழுதுதான் புரிந்தது - அன்று வெள்ளிக்கிழமை என்பதால் அவனது அண்ணாவாகிய ஜெகதீஸ் கோவிலுக்கு சென்று விட்டான் என்பது.

காலைக் கடன்களை முடித்துவிட்டு மணிக்கூட்டை பார்க்கின்றான். அப்பொழுது நேரம் 9.00 மணி. "அட நான் இவ்வளவு நேரம் தூங்கிவிட்டேனே" என்று தனக்குள்ளே கூறினான். பின்பு, தான் நாளை கண்டியில் உள்ள பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கு தனது ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினான்.

ஆம் அவன் ஒரு முதலாம் வருட மருத்துவ பீட மாணவன். அவன் அவ்வாறு ஆயத்தங்கள் செய்யும்போது ஜெகதீஸ் உள்ளே நுழைகின்றான். அவனது கையில் இருந்த திருநீற்றை எடுத்து விஷ்வாவின் நெற்றியில் பூசுகின்றான். "எட விஷ்வா சாறிடா பூசை முடிய லேட் ஆயிட்டுது. குறை நினைக்காத. இதோ ஐஞ்சு நிமிசத்தில உனக்கு பிடிச்ச நெய் தோசை சுட்டுத்தாரன் என்று கூறிய ஜெகதீசை, விஷ்வா இடைமறித்து "நான்தான் சமைப்பன் நீங்க பேசாம

இருங்கோ. சின்ன வயசுலேருந்து நீங்க தான் சமைக்கிறியள். இன்றைக்கு நான் சமைக்கிறன்" என்றபடி சமயலறையினுள் நுழைந்தான். ஜெகதீஸ் கூறினான். "இல்லடா தம்பி, நீ ஒரு மாசத்துக்கு பிறகு இப்பதான் வீட்டுக்கு வந்தனி. அங்க சாப்பாடு எப்படியோ தெரியாது பிறகு நீ சமைக்கிறியோ? நான் தான் சமைப்பன் என்ட தம்பிக்கு" என்று கூறினான்.

இதையெல்லாம் காதில வாங்காத விஷ்வா தோசை சுட ஆரம்பித்தான். தோசையைப் பிரட்டும்போது சூடேறிய கரண்டி அவனது கையில் சுட்டுவிட்டது. வலியைப் பொறுத்துக் கொள்ள முடியாத விஷ்வா "ஆ" என்று கத்தினான். இதைப் பார்த்த ஜெகதீசுக்கு உலகமே இருண்டது போன்று இருந்தது. "டேய் நான் முதலே சொன்னனான் தானே நான் சுடுறன் எண்டு. இப்ப பார் உண்ட கைய" என்று ஓடிச் சென்று பற்பசையை எடுத்து கையில் பூசினான். பின்பு அவன் தோசையை சுட்டு தம்பிக்கு ஊட்டியும் விட்டான். பின்பு "சரி விஷ்வா நான் வேலைக்குப் போறன் கவனமா இரு" என்று கூறிவிட்டு சென்றான். விஷ்வாவும் தனது ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினான்.

அப்பொழுது அவனது தலையை யாரோ தடவுவது போன்ற உணர்வு. ஆனால் அந்த உணர்வு அவனுக்கு இதமாகவே இருந்தது. திரும்பிப் பார்த்தான், யாரும் இல்லை. ஆனால் ஒரு புகைப்படம் கண்ணிற்குத் தெரிந்தது. ஆம் அது அவனது அம்மா, அப்பா, அக்காவினுடைய புகைப்படம். திடீரென்று மெல்லிய காற்று வீசியது. அவனை யாரோ அழைப்பது போன்ற உணர்வு. அவனது நினைவு ஆறு வருடம் முன்னோக்கிச் செல்கின்றது.

அப்பொழுது அவனுக்கு பதினைந்து வயது. அவனது கண்ணிற்கு முன்பாக அவனது அம்மா நின்றுகொண்டிருந்து கையில் உணவை ஏந்திய வண்ணம் அவனை நோக்கி "விஷ்வா குட்டி இண்டைக்கு உனக்குப் பிடிச்ச இறைச்சிக் கறியும் சோறும் ஆ காட்டு" என்று கூறியபடி அவனுக்கு ஊட்டிவிட்டார். "டேய் குழப்படி எதுவும் செய்யாம நல்ல பிள்ளையாய் இருக்கணும்" என்று கூறி

இன்னொரு வாய் ஊட்டி விட்டார். இப்படி ஊட்டி விடும்போது யாரோ அவனது கண்ணைப் பொத்தினர். இடையே அம்மாவின் குரல். "எடியேய் நிஷா! விடு பிள்ளை அவன் பாவம், இப்பத்தான் பள்ளிக்கூடத்தால வந்து சாப்பிடுகிறான்" அவளது தாய் பேசுவதற்கும் அவளது கையிலிருந்து தன்னை விடுவிப்பதற்கும் நேரம் சரியாக இருந்தது.

திரும்பிப் பார்த்தால் அவனது அக்கா நிஷா தனது கார்மேகக் கண்களால் அவனைப் பார்த்துச் சிரித்தாள். சிரிப்பினூடாக "*Hello Brother* எப்படி சுகம்" என்று கேட்டபடி அவனை அணைத்து நெற்றியில் தனது ரோஜாப்பூ போன்ற இதழால் முத்தமிட்டாள். அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டு விஷ்வா மெல்லக் கூறினான் "என்ன *Sister* இண்டைக்கு ரொம்ப அழகாய் இருக்கீங்க ஏதாவது ஸ்பெஷல்". நிஷா கூறினாள் "இல்லடா தம்பி அடுத்த வருஷம் *Doctor* ஆகப் போறன். அது மட்டுமா விஷ்வான்ட அக்கான்னா சும்மாவா ஊருக்கு கெத்தா இருக்க வேணாம்" என்று சிரித்தாள் பலமாக. "இல்ல *Sister* விளங்கேல என்ன சொன்னீங்க" என்றான். இப்படி இவர்கள் செல்லச் சண்டை போடுவதை அவனின் அம்மா புன்முறுவலுடன் மெய்சிலிர்க்கப் பார்த்துக் கொண்டு நின்றார்.

இப்படி இவர்கள் செல்லச் சண்டை போடும்போது காரின் சப்தமும் சைக்கிளின் பெல்லின் சப்தமும் கேட்டது. சண்டை போட்டுக் கொண்டிருந்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு நான் முந்தி நீ முந்தியென ஓடினர். சென்று பார்த்தால் அவர்களின் தந்தையும் அண்ணனும். விஷ்வா ஓடிச் சென்று இருவரையும் அணைத்தான். இப்படி வாழ்வு சந்தோஷமாக ஓடிக்கொண் டிருக்கையில்...

ஒரு நாள் வழமைபோல விஷ்வாவும் ஜெகதீசும் பாடசாலைக்குச் சென்றனர். நிஷாவும் அப்பாவும் அம்மாவும் கோவிலுக்குச் சென்றனர். அவர்கள் திரும்பி வரும் பொழுது அவர்களின் கார், லொறி ஒன்றுடன் மோதி அனைவரும்

விபத்துக்குள்ளாகினர். இப்படித் தன் நினைவை பின் நோக்கி ஓடவிட்ட விஷ்வா *Viber* அழைப்பினால் கைபேசியைப் பார்த்தால் அவனது அண்ணன் கைபேசியை எடுக்கிறான். "ஹலோ" என்றான். ஜெகதீஸ் "என்னடா விஷ்வா குரலில் சந்தோஷம் இல்ல என்ன ஆச்சு" என்றான். விஷ்வா கூறினான் "இல்ல அண்ணா லேசா தலையிடி" என்று தன் கண்ணீரைத் துடைத்தவாறு. "இல்ல உனக்கு பஸ்சுக்கு நேரம் ஆச்சு நீ பஸ் ஸ்டான்டுக்கு வா. நான் அங்கு வாறன்" என்று கூறி அழைப்பைத் துண்டித்தான்.

விஷ்வாவும் குளித்து வெளிக்கிட்டுத் தனது பையுடன் பஸ் ஸ்டான்டிற்குச் சென்றான். அங்கே கண்டி பஸ்ஸில் ஏறி அமர்ந்தான். "விஷ்வா" என்ற குரல். திரும்பிப் பார்த்தான். அவனது அண்ணா ஜெகதீஸ். பிஸ்கட், சோடா என்பவற்றை அவனுக்கு கொடுத்துவிட்டு "டே தம்பி! கவனமாப் போயிட்டு வா" என்று கூறி பஸ்ஸில் இருந்து இறங்கியவுடன் பஸ் புறப்பட்டது. ஜெகதீஸ் "*Bye*" என்றான். விஷ்வாவும் கை அசைத்தான். சிறிது தூரம் சென்றபின் மறுபடியும் யாரோ அழைப்பது போன்ற உணர்வு....

அறியாமையை விட ஆபத்தானது
அதனை அறியாமையே.

*சங்கரப்பிள்ளை புஸ்பகுமார்*

# உப்புக் காற்றும் உறங்காத நினைவுகளும்

'சின்னமேளம் தொடங்கப் போகுது எழும்பணை'

மண்ணில் கால்புதைத்து ஆச்சியின் மடியில் முகம், உடல் புதைத்து உறங்கிப் போயிருந்த நான் மெல்லக் கண் விழிக்கிறேன்.

கணபதிப்பிள்ளை வாத்தியார் ஒழுங்குசெய்த "சுழல்மேடை" மெல்லமெல்லச் சுழன்று கொண்டிருந்தது.

வீரியத்துடனும், அபிநயத்துடனும் அற்புதமாய் நடந்த பெண்களின் தவில் கச்சேரி முடிந்து அவர்கள் வெளியேற ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர்.

ஆலய முகப்பில் பிரமாண்டமாய் கட்டப்பட்டிருந்த கரவெட்டிச் சிகரத்தில் பொருத்தப்பட்டிருந்த நெடியகாட்டு ஒளி அமைப்பாளர்களின் அலங்கார மின்குமிழ்கள் மாயாஜாலம் காட்டிக் கொண்டிருந்தன.

கிழக்கே ஆலமரத்தடியில் சரிவாக ஒரு சிகரம்.... அது "மாசார் கந்தசாமி" அண்ணையின் சிகரமாயிருக்க வேண்டும்.

எனக்கு "சீச்சா" அடிக்கவேண்டும் போல் இருந்தது. அருகில் இருந்த அத்தைக்கு மெல்லச் சொன்னேன்.

கன்னக்கதுப்பெல்லாம் "றோஸ்" பவுடர் பூசி நெற்றியில் சாந்துப் பொட்டுடன் சருகைச் சட்டை போட்டு அழகுக் கோலம் காட்டிக் கொண்டிருந்த அத்தைக்கும் அன்ரிக்கும் என் வேண்டுகோள் இடைஞ்சலாக இருந்திருக்க வேண்டும்.

அத்தையின் அழகான படபடக்கும் விழிகளில் சங்கடம் தெளிவாகவே தெரிந்தது. பெம்பிளையள் எல்லாரும் நல்லாய் அடக்குவினம் போல இருக்கு.... ஆனால் எனக்கெண்டால் உடனே பெய்யவேணும் போல அந்தரமாய் இருந்தது.

“வா ராசா.... நான் கூட்டிக்கொண்டு போறன்....!”

அடுக்கடுக்காய் விரிக்கப்பட்டிருந்த பாய்களில் நெரிசலாய் இருந்த சனங்களை விலக்கிக்கொண்டு ஒருகையில் என்னைப் பத்திரமாகப் பற்றிக் கொண்டு ஆச்சி வெளிப்புறமாக நடந்தா....

அலங்கார விளக்குகளிலும், சனவெள்ளத்திலும் வடலியடிப் பிள்ளையார் அழகாக மின்னிக் கொண்டிருந்தார்.

ஆற்றங்கரையில் இருந்த பனை வடலியின் கீழ் ஆசுவாசமாய் “சீச்சா” விட்டதன் பின்தான் எனக்கு உயிரே வந்தது போலிருந்தது.

“ராசா சுடச்சுட தேத்தண்ணி குடியப்பு” ஆச்சியின் குரல் என்னைக் கெஞ்சியது.

ஆச்சி பத்துப் பிள்ளை பெத்தவவாம். ஒன்பது பேரும் செத்துப் போட்டினமாம். எங்களது அப்பம்மா மட்டும் தப்பினவராம். ஆச்சியின் ஒரே பூட்டன் நான்தான். ஆச்சிக்கு நானென்றால் உயிர். எனக்கும் அப்பிடித்தான். வயது போன சனமெல்லாம் என்னை நாச்சன்ரை பூட்டன் என்று தான் சொல்லுவினம்.

“மடப்பள்ளியில்” உடுப்புக்கள் மாற்றிக் கொண்டிருந்த சின்னமேளக்காரிகள் சலங்கைகள் கிலுகிலுக்க மேடையை நோக்கி அன்னநடை போட்டு நடந்து வந்தனர்.

கச்சாய் கண்ணகை சின்னமேளக் குழு என்றால் எங்கள் எல்லோருக்கும் நல்ல விருப்பம். நெஞ்சைப் பட்டுத்துணியால் கட்டிக் கொண்டு அவர்கள் வளைந்து நெளிந்து இறுதி நேரத்தில் பாம்பாட்டம் ஆடுவார்கள். எனக்கெண்டால் பயமாய் இருக்கும். “நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு உவங்கள் பாக்கிறதைப் பாரடி” என்று இளந்தாரிப் பொடியங்களை சாடைகாட்டி அத்தையும், அன்ரியும் தங்களுக்குள் சிரித்து மெல்லக்கிள்ளி கிசுகிசுப்பதை வேறு திருவிழாக்களில் நான் பார்த்திருக்கின்றேன்.

விநாயகண்ணை நீண்ட தேயிலைவடியை கையினால் நீவிவிட்டு ஆவிபறக்கும் சுடுநீரை அதற்குள் ஊற்றி நிறைய சீனி போட்டுத் தந்த தேநீர் எனது விடியப்பற நித்திரைத் தூக்கத்தை ஓட ஓட விரட்டியது.

***

காலங்கள் விரைந்தோடி எண்பதுகளின் முற்பகுதி ஆரம்பமாகி விட்டது. நூற்றியம்பது ரூபாவை ஒழுங்காக அடுக்கி உறையில் வைத்து வெளிப்பக்கத்தில் எனது பெயரெழுதி கனகரத்தினம் மாஸ்டர் என் கையில் தந்தார். அதனைப் பொக்கிசமாய் வாங்கி எனது பொக்கற்றிலிட்டேன். எனக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது.

நான் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் சித்தியெய்திவிட்டு ஆழியவளையில் விஞ்ஞானத் தொண்டர் ஆசிரியராகப் படிப்பித்துக் கொண்டிருந்தேன்.

மாதம் முடிவில் ஒழுங்காக சம்பளம் தருவார்கள். அம்மா அப்படியே கபளீகரம் செய்ய முற்பட்டாலும் அதில் பொத்திப் பொத்திச் சேகரித்து "லங்காசாறி" ஒன்று ஆச்சிக்கு வாங்கி நான் கொடுத்திருந்தேன்.

ஆச்சி எழுபதைக் கடந்தும் உற்சாகமாகவே இருந்தா. அந்த வழமையான கூனலைத்தவிர மற்றப்படி உற்சாகமாகவே இருந்தா. ஒவ்வொரு நாளும் அம்மியில் அடுக்குப்பெட்டியை அருகில் வைத்து சரக்கு அரைத்து கறிகாச்சுவது தொடக்கம் தடுக்கில் பனாட்டுப் போடுவது வரை ஆச்சி சுயமாகவே இயங்கிக் கொண்டிருந்தா. 'டுக்கு டுக்கு டுகுடு டுகுடு' என்று மியூசிக்குடன் இரவில் வானொலியில் செய்தி ஒலிபரப்பாகும் வரையில் ஆச்சி கிடுகு பின்னிக்கொண்டு இருப்பா. இடைக்கிடை எனக்கு ஜெலோலைன் போட்ட ஐம்பத்தைந்து ரூபா பெல்ஸ்துணி வாங்க காசு தருவா.

ஒரு நாள் பாடசாலை விட்டு களிக்கரைப் பக்கமாக உள்ள பிரதான வீதியால் எங்கள் இரண்டாம் கட்டைச் சந்தியை நோக்கி சைக்கிளில் வந்துகொண்டிருந்தேன்.

வீரக்களி எங்கும் உடுத்துறை மகா வித்தியாலய மாணவர்கள் நிறைந்து காணப்பட்டனர். மாமுனை தொடக்கம் கட்டைக்காடு

வரையுள்ள மாணவர்கள் உடுத்துறை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலமது. இல்ல விளையாட்டுப் போட்டி ஆயத்தப் பயிற்சிகளில் மாணவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

பஸ்சுக்காக காத்திருந்த தாளையடி பெண் பிள்ளைகள் சிலர் மயிலு அண்ணையின் சதுர வடிவக் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தனர்.

என்னுடன் படித்த ஜெனிபேட்டின் தங்கை என்னைப் பார்த்து கையசைத்தாள்.

வாரியாவயல் பிள்ளையார் கோவிலடி தென்னமரச் சோலையும் புதுவளவு கனகம்மாக்காவை வயல் நிறைய விதைத்திருந்த பயிற்றம் செடிகளையும், தழுவி வந்த தென்றல் என்னுடலில் துளிர்த்திருந்த வியர்வை முத்துக்களைத் தழுவி உடலுக்கும் மனதுக்கும் இதம் கொடுத்தது. புதுவளவு ஏற்றத்திலேறி ஈஸ்வரியக்கா வீட்டுப் பக்கம் பார்க்கிறேன். அவர்கள் வீட்டில் பலர் போவதும் வருவதுமாக இருந்தனர்.

"தாளையடி போஸ்ற் ஒவிசுக்கு போட்டு வந்த சேகரை ட்ரக்கில் வந்த ஆமியள் கேட்டுக் கேள்வியில்லாமல் அடிச்சுப் போட்டுப் போட்டாங்களாம்"

கேற்றடியில் நின்ற இந்து அக்கா கூறினா.

நான் கேற்றைத் திறந்து உள்ளே சென்றேன். முகம், கைகள், வீங்கியபடி என் நண்பன் சேகர் சாய்மனைக்கதிரையில் படுத்திருந்தான்.

அருகில் சென்று குனிந்து என் நெஞ்சுக்கினிய நண்பன் சேகரை ஆதரவாக அணைத்துக் கொண்டேன்.

"இந்த நாட்டில் இருக்கேலாது மச்சான் சும்மா போற ஆக்களை யெல்லாம் பந்து போல அடிச்சுப் போட்டுப் போறாங்கள். எப்பவும் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை. நான் வெளிநாடு போகப்போறன். நீயும் வாறியா?" சேகர் என் கைகளைப் பற்றிக் கேட்டான்.

வெளிநாடு சென்றால் என்ன? இந்த வினா முன்னெப் பொழுதுமில்லாதளவு என் நெஞ்சுக்குள் விஸ்வரூபமெடுத்தது. நான் வெளிநாட்டிற்குச் செல்வதற்கு உறுதியாக முடிவெடுத்துவிட்டேன். வெளிநாட்டுக்கு வெளிக்கிடுவதற்கு முதல் நாள் எனக்குப் பிடித்த அரிசிப்பிட்டும் வட்டமாகப் பெரியதாகப் பொரித்த முட்டைப் பொரியலுமாக ஆச்சி எனக்கு உணவு பரிமாறினா.

இரவு ஆச்சியின் பாயிலேயே ஒன்றாகப் படுத்தேன். புறப்படும் போது கொஞ்சி, விழிபனிக்கக் கவனமாய்ப் போட்டு வா மோனை என்று ஆசீர்வாதம் தந்தா. முகவரி தெரியாத இடத்திற்கு என்னை என் குடும்பத்தினர் மிகுந்த கவலையுடன் அனுப்பிவைத்தனர். வீட்டு வாசலடியில் வந்த வேம்படி ராசண்ணையின் வானில் ஏறி என் வெளிநாட்டுப் பயணம் ஆரம்பமாகியது.

***

வெளியில் பஞ்சுப் பொதிகளாய் இலேசாகப் பனி கொட்டியபடி இருந்தது. காரை கராச்சில் விட்டுவிட்டுப் படியேறி வீட்டுக்கு வந்த நான் சத்தமில்லாமல் ரீவியைப் போட்டேன்.

ஏ.ஆர்.டி யில் ஆறுமணிக்கு ஒளிபரப்பாகும் காலை வணக்கம் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. பன்னிரண்டு மணித்தியாலம் "நைற்சிவ்ற்" செய்துவிட்டு வந்திருந்தேன்.

குளித்துவிட்டு கோப்பியையும், வாங்கி வந்திருந்த சலாமி வைத்த புரோச்சினையும் சாப்பிட்டேன். படுக்கையில் என் மனைவியும் என் செல்லக்குட்டி எழிலும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். அருகில் சென்று தலையணையைச் சரிசெய்து போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு நானும் அவர்களை அணைத்தபடி ஆழ்ந்து தூங்கிவிட்டேன்.

மதியம் ஒரு மணியளவில் மனைவியின் கரம் என்னைத் தட்டி எழுப்பியது.

"ஊரில் இருந்து கடிதம் வந்திருக்கு. சண்டைக் காலம் தானே போட்டு பதினைந்து நாளைக்கு பிறகுதான் கடிதம் வந்து

சேர்ந்திருந்தது. ஆச்சிக்குக் கொஞ்சம் கடுமையாம். எங்களைப் பார்க்கத் தானாம் ஆசைப்படுகிறா...."

மனம் திக்கென்றது. வார்த்தைகளால் அடக்க முடியாத சோகம் நெஞ்சைக் குப்பென்று ஆழ்த்தியது. ஆச்சியைப் பார்க்க வேணும் என்ற வெறி உணர்வெங்கும் அனலாய்க் கொதித்தது.

இயந்திரமாக இயங்கி சிறிலங்கன் எயர்லைன்ஸ்சில் அவசரமாக ரிக்கற் போட்டேன்.

பிராங்கோட் விமான நிலையத்தில் போடிங் பாஸ் எடுத்து விட்டுக் காத்திருந்தோம். சண்டைக்காலம் என்பதால் என் மனைவிக்கு சற்று முழிப்பிதுக்கம். பயத்தில் அடிக்கடி 'ரொயிலெட்' பக்கம் சென்று கொண்டிருந்தா.

***

பன்னிரண்டு ஆண்டுகளின் பின் ஊருக்கு வந்திருந்தேன்.

படுத்திருந்த ஆச்சி கைத்தாங்கலாய் நிமிர்ந்து என் மகன் எழிலை, என் மனைவியை, என்னை ஆரத்தழுவி முத்தமிட்டா. ஆச்சியின் விழிகளில் எங்களைக் கண்ட சந்தோசம் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

நான் ஆச்சியின் தலைமாட்டில் இருந்து 'உதயன்' வாசித்துக் கொண்டிருந்தேன்.

எங்கள் வீட்டு முற்றத்து கறுத்தக் கொழும்பான் காயாய் சொரிந்து விட்டிருந்தது. பக்கத்துவீட்டுப் பரமேசக்கா வந்து சுகம் விசாரித்து என்னுடன் வெளிநாட்டுப் புதினம் கதைத்துக் கொண்டிருந்தா.

அம்மா எங்கள் வடமராட்சி கிழக்கிற்கே உரிய பனங்காய்ப் பிட்டு சமைத்துக் கொண்டிருந்தா.

வேம்படியில் இருந்துவந்த எங்கள் முத்தம்மாப் பேத்தி என் மனைவியுடன் குசினியில் கதைத்துக் கொண்டிருந்தா.

"நாச்சன் அக்கை எத்தனைநாள் இருந்து இழுபடப் போறாவோ தெரியாது உங்கட ஆளும் லீவுபோட்டிட்டு வந்தவரே?"

“இவருக்கு ஆச்சியெண்டால் உயிர். லீவும் கனக்க எடுக்க முடியாது. சண்டை தொடங்கிவிட்டால் ஆமியள்ளை பிளேன் ஓட்டமும் சில வேளை நிண்டுபோடும். வேலைக்கும் இடைஞ்சல் தான். ஆனால் ஒண்டும் செய்யேலாதுதானே” என் மனைவி குசினிக்குள் சொல்வது எனக்குத் தெளிவாகக் கேட்டது.

ஒரு கணம் தான்....

ஆச்சியின் கரங்கள் மெல்ல உயர்ந்து என் கழுத்தை இறுகப் பற்றின.

ஒரு விக்கல்....

ஆச்சியின் தலை சரிந்து சாய்ந்தது....

ஆச்சி.... ஆச்சி.... என உதடுகள் அலறின....

என் விழிகளில் பெருக்கெடுத்த நீர் சொட்டுச் சொட்டாக ஆச்சியின் முகத்தில் விழுந்து சிதறியது.

உனக்கு மேலான ஒருவர்
உன்மீது சந்தேகம் கொள்வதற்காகக்
கவலைப்படாதே.
அந்தச் சந்தேகத்தை தோல்வி அடையச்
செய்வதே உனது வெற்றி.

## வேலாயுதம்பிள்ளை அகிலேஸ்வரன்

# உயிருள்ளவரை துளசி

அவள் வெளிநாட்டிற்குப் போய்விட்டாள், அழகானவள், அன்பானவள், என்னோடு வாழ்வாள் என்றல்லவா நினைத்திருந்தேன். அவள் வெளிநாட்டிற்குப் போய்விட்டாள். என் நண்பன் அபிமன்யுவை நேற்றைக்கு முதல்நாள்தான் சந்தித்திருந்தேன். அவள் பற்றி அவனிடம் எது கேட்டாலும் வாய் திறக்காதவன் சற்று முன்பு தான் போன் எடுத்துச் சொன்னான். அவள் யார், அவளை ஏன் நான் இற்றைவரை நேசிக்கிறேன்? மீண்டும் அவள் பற்றிய ஞாபகங்கள் எனைத் தீண்டத் தொடங்கியது.

உயர்தரம் படிப்பதற்காய் விடுதி ஒன்றில் சேர்க்கப்படுகிறேன். விடுதி வாழ்க்கை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. சுதந்திரமாய் பாடித்திரிந்த பறவை சிறைக்கூட்டுக்குள் அகப்பட்டுக் கிடப்பது போலவே எனது நாட்களும் நகர்கிறது. விடுதியில் சேர்ந்த நாள் அது மிகவும் சோகமான நாள். காலையில் சென்ற எனக்கு மதியம் கடந்து மாலையான பின்பே அனுமதி கிடைத்தது. அது மட்டும் யார் வரவிற்காய் காத்திருந்தேன். அந்த விடுதியை இரண்டு கிறிஸ்தவ பாதிரிமார் நடத்திக் கொண்டிருந்தார்கள். எனது கஷ்ர காலமோ என்னவோ நான் சென்ற நேரம் விடுதியில் அவர்கள் இல்லை. நீண்ட பயணம் செய்துவிட்டுக் களைப்போடு பாதர் உள்ளே நுழைகிறார். அவரது முகத்தில் சிறிதளவு புன்னகை கூட காணவில்லை. ஏன் இத்தனை கோபம் அவர் முகத்தில் வேறொன்றுமில்லை. பட்டி உடைத்த நாம்பன் மாடொன்றிற்கு கொமாண்டர் கம்பி கிழித்துவிட்டதாம். பெரிய காயமாம். அதுதான் பாதர் அத்தனை கோபத்தில் இருந்தார். மாட்டைப் பராமரித்தவரை அழைத்தார். அவன் கைகட்டி வாய்பொத்தி கூனிக் குறுகி நின்றான். மூன்று வேளை மூக்குமுட்டத் தின்கிறாய்தானே என்ற கேள்விக்கு தலையசைவு மட்டும் கொடுத்தான். தொடர்ந்து பேச்சுக்கள் செல் மழை போல

பொழியப்பட்டது. திரும்பிப் பார்த்தார். அப்போது தான் என்னைக் கண்டார். என்ன புதுசா என்று கேட்டார். ஆமாம் என்று தலையாட்டினேன். எத்தனை படிக்கிறாய் என்றார். ஏ.எல் என்றேன். கிறிஸ்தவம்தானே என்றார். இல்லை இந்து என்றேன். அப்படியாயின் நீ நல்ல பெடியனாய் இருப்பாய் என்றார். இங்கிருக்கின்ற இந்துப் பொடியளுக்கு சமய பாடத்தைக் கற்றுக்கொடு. சின்னப் பொடியளுக்கு உயர்தரம் கற்கிற மாணவர்கள்தான் மற்றைய பாடத்தினைக் கற்பிக்கிறார்கள் என்று சொன்னார். எதற்கும் நான் மறுப்புத் தெரிவிக்காமல் தலையாட்டினேன். இது வீடல்ல கொஸ்ரல். அந்தந்த வேலைகளை அந்தந்த நேரத்தில முடிக்கவேணும். பெடியளால ஏதாவது பிரச்சினை என்றால் என்கிட்ட சொல்லு. சரி சரி நாளையிலிருந்து பாடசாலைக்குப் போகலாம். நீ தங்கும் றூம் எண் நான்கு. அங்கே போ எனக் கட்டளையிட்டார்.

மறு நாள் பாடசாலையில் காலடி எடுத்து வைக்கிறேன். எல்லாமே புதிது புதிதாக எனது கண்களில் படுகிறது. உள்ளே நுழைந்ததும் வெள்ளாடை சிட்டொன்று எனைப் பார்த்து அப்படியே சிரித்தது. எனது மனதில் உதித்த வரிகளை பின்னைய நாள் ஒன்றில் இப்படித்தான் எழுதி வைத்தேன் “பள்ளியறை காலடி எடுக்க புற்களின் வரவேற்புடன் மலர்ந்த மான்விழிகளை மறக்க முடியுமா?”

காலைப் பிரார்த்தனை ஆரம்பமாவதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் என்னைப் பார்த்ததும் நான் அவளை பார்த்ததும் அருகே என் நண்பன் கண்டுபிடித்துவிட்டான். அவன் வேறு யாரும் அல்ல; என் நண்பன் அபிமன்யு. விடுதியில் சேர்ந்த நாளே என்கூட ஒட்டிக்கொண்ட விசுவாசமானவன். என்ன வந்த நாளே களை கட்டுது போல கிடக்குது என அவன் கேலி செய்யும் போது கொஞ்சம் சும்மா இருக்கிறியா என்று செல்லக் கட்டளை இட்டேன். அவன் சிரித்துக்கொண்டே நன்றாக நாடகம் அரங்கேறட்டும் என்றான்.

பாடசாலை முதல்வரின் இருப்பிடத்திற்கு எனது நண்பனே எனை அழைத்து சென்றான். பிரதி அதிபரின் கனிவான பார்வை அன்போடு அழைத்தது. என் பயிலை வாங்கி செக் பண்ணிப்

பாத்திட்டு அதிபரிடம் கொடுத்தார். அதிபர் ஒரு தடவை என்னை உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை பார்த்தார். நடிகர் ரஜனியை வில்லன் இரகுவரன் பார்ப்பது போலவே இருந்தது. பயிலை நாலு தரம் தட்டிப் பாத்திட்டு "எங்கை ஒன்றையும் காணவில்லை" என்றார். இதற்கு பிறகும் என்ன வேண்டும் சேர் என்று கேட்டேன். என்ன வந்த நாளே திருப்பிக் கதைக்கிறாய் என்றார். "இல்லை நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதிலுரைத்தேன்" என்றேன். எங்கே பாடசாலை லீவிங் சேட்டிபிக்கற் என்றார். நான் முதல் படித்த பாடசாலை யுத்தத்திற்குள் அகப்பட்டதால் தவறிவிட்டதென்றேன். உரிய ஆவணங்களை கொண்டு வராமல் இங்கு ஏன் வந்து எங்களின் உயிரை வாங்கிறியள் என்றார். மறுபதில் உரைக்காமல் அமைதி காத்தேன். என்னடா கழுத்தில உது என்றார். உருத்திராட்சம் கோயில் நேர்த்திக்காய் கட்டியது என்றேன். உதெல்லாம் நாளைக்கு அறுத்தெறிஞ்சிட்டு வரணும், உப்படியே வந்தியெண்டால் கலைச்சுப்போடுவன் என்றார். ஒரு தடவை ஆடிப்போனேன். கட்டிய மனையாள் தன் கழுத்துத் தாலியை அறுத்து எறிவதும் நான் உருத்திராட்சத்தை அறுத்தெறி வதும் ஒன்றென்று கருதிக்கொண்ட நான் புத்திசாலித்தனமாக பாடசாலை ரை ஒன்றை வாங்கி அணிந்தமையால் உருத்திராட்சம் வெளியே தெரியவில்லை.

அதிபரின் முதல்நாள் வரவேற்பு அற்புதமாக இருந்தமை, அந்தப் பள்ளியில் நான் தொடர்ந்து கற்பதற்கு மனதில் சிறிது வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. விடுதி வாழ்க்கை எனக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. சத்தான உணவு வேளாவேளைக்கு கிடைத்தாலும் அளவுக்கு மீறிய வேலைகள் எம்மீது திணிக்கப்படுவதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அதிகமாக விடுதியில் குழப்படி மாணவர்களே விடப்பட்டிருந்தார்கள். ஒரு சில மாணவர்களைத் தவிர மிகுதியாய் இருந்த அனைவரும் எனக்கு எதிரியைப் போலவே தெரிந்தார்கள். நாட்டுச் சூழ்நிலையால் பல பிள்ளைகள் விடுதியில் தங்கியிருந்தமையும், அந்த விடுதி பிள்ளைகளை நன்றாக வேலை வாங்கியிருந்தமையும் விடுதி நிர்வாகத்தின் மீது வெறுப்பு நாளுக்கு நாள் அதிகமானது.

சில நாட்களில் பாடசாலையில் மதிய உணவிற்கான உலர் உணவுப் பொருட்கள் இறக்குவது வழமை. அப்போது அதனை இறக்கி அடுக்கும் பொறுப்பு உயர்தர மாணவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. அப்படிப் பொருட்களை இறக்கி அடுக்கும் போது எதேச்சையாக அவள் என்மீது மோதினாள். மன்னிப்போடு ஆரம்பித்த பேச்சுக்கள் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்தது.

அவள் பெயர் துளசி. அவள் இப்போது எனக்கு நெருக்கமான தோழி. வீட்டிலிருந்து விதம்விதமான உணவுப் பொருளெல்லாம் சமைத்து எடுத்திட்டு வருவாள். அவள் எங்க சமைப்பது அவளின் தாய்தான் எல்லாமே சமைப்பாள். அவளின் தந்தை நோயினால் இறந்துவிட்டார். திருமணமாகிய தமையன் தாயையும் தங்கையை யும் கைவிடாமல் காத்துக் கொண்டிருந்தான். துளசிக்கு அண்ணியாக வந்தவள் இன்னொரு சகோதரியாக இருந்தமையால் துளசி செல்லமாகவே வளர்க்கப்பட்டாள். தமையனின் உழைப்பிலே அவர்கள் வாழ்க்கை வண்டி ஓடியது.

எட்டமாக இருந்தவள் என்னருகே தனது கதிரையினை அமர்த்தி இருப்பிடத்தை மாற்றினாள். அடிக்கடி இப்போதெல்லாம் தொட்டுப் பேச ஆரம்பித்தாள். ஆரம்பத்தில் கூச்சமாக இருந்தாலும் பின்பு ஏதோ பழகிப்போச்சுது. அவளைப் பார்த்த முதல் சந்தர்ப்பத்தில் காதல் உணர்வு அவள் மீது தோன்றினாலும் பின்பு நல்ல தோழியென்றே அடிக்கடி என் மனம் சொல்லிக்கொண்டது. கொய்யாப்பழம், நெல்லிக்காய், மாம்பழம் எல்லாம் அவள் கொண்டுவருவாள். உப்பு தூளோடு மாங்காய் சாப்பிடும் நாட்கள்தான் அதிகம். இப்படியே இருக்கையில் ஒரு நாள் அபிமன்யு எனை அழைத்து "என்ன நல்லாய் குடும்பம் நடத்திறியள் போல கிடக்குது. கவனம் குழந்தை பிறக்காட்டி சரி" என்றான். "சும்மா இருடா அவள் எனக்கு நல்ல தோழி" என்றேன். "எல்லாம் ஆரம்பத்தில் இப்படித்தான் இருக்கும். பின்புதான் எல்லாம் வெளியுலகத்திற்குத் தெரியவரும்" என்றான்.

விடுதியில் மாணவர்களின் அட்டகாசங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தது. மாணவர்களின் சித்திரவதைகளைத் தாங்கிக்கொள்ள

முடியாத நான் விடுதியை விட்டு வெளியேறினேன். இப்போதுதான் எனது வாழ்வில் சோதனை காலமும் கூடவே இருந்து கும்மியடித்தது. மாறிமாறி எத்தனை வீடுகள் அத்தனை வீடுகளில் வாழ்ந்த போதும் மனதில் இனம்புரியாத சலிப்புக்களும் வெறுப்புக்களுமே அதிகரித்தது. உயிர் வாழ்வதற்கான போராட்டம் இதற்குள்ளே கல்வி கற்பது என்பது ரொம்பவே கடினமான விடயமானது.

அன்றொருநாள் மாரி மழை பொய்க்காமல் பெய்து கொண்டிருந்தது. செம்மண் கலந்த வன்னி வீதியில் துவிச்சக்கர வண்டியில் வேகமாகச் சென்று கொண்டிருந்தேன். என் கஸ்ரகாலம் அப்படியே சறுக்கி விழுந்துவிட்டேன். செம்மண் கலந்த களி அப்படியே ஆடையில் ஒட்டிக் கொண்டது. அன்று பாடசாலை செல்லாமல் மறுநாள் பள்ளிக்குச் செல்லும்போதுதான் விபரீதம் காத்திருந்தது. அன்றைய தினம் சில மாணவர்கள் பள்ளிக்குச் சமுகம் தரவில்லை. அதிபர் எந்தக் காரணத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் தண்டனையை வழங்கிய வண்ணமிருந்தார். ஆண் பிள்ளைகளின் பின் புறத்தை குறி வைத்துத்தான் அதிபர் ஆக்கள் அதிகம் பேர் பிரம்பினால் தாக்குதல் நடத்துவார்கள். பெண்பிள்ளைகளின் கையை மீறி வேறெங்கும் படாதவாறு கச்சிதமாக தம் அலுவலை முடித்து வைப்பார்கள். விடிகாலைப் பொழுதில் உணவுண்ணாமல் வந்த எனக்கு தரப்பட்ட விருந்து பலமாகவே இருந்தது. ஏற்கனவே அதிபருக்கு என்னைப் பிடிக்காது. இதுதான் சந்தர்ப்பம் என்று என்மீது தாக்குதல் நடத்தினாரோ புரியவில்லை. அன்று துளசியின் விழிகளை அவதானித்திருந்தேன். அவள் எனக்காகக் கலங்கியழுதிருந் தாள். என்னை மூன்று நான்கு முறை வலிக்குதா என்று கவலை தோய்ந்த முகத்தோடு பாசத்தோடு கேட்டபோது புரிந்து கொண்டேன். அப்போதுதான் காதோடு காது வைத்து ஒரு செய்தி சொன்னாள். தனக்கு மாதத்தில் ஏற்படும் சுகமில்லாத நிலையின்போது கூட வயிற்றுவலியோடு அத்தனை வலிகளையும் தாங்கிக்கொண்டு பள்ளிக்கு வந்துவிடுவதாக சொன்னாள். பொல்லாத பள்ளி நிர்வாகமும் முதல்வரும் நோயின்போது கூட லீவு எடுக்க அனுமதி வழங்குவதில்லை.

பாடசாலை விட்டு வீடு சென்றாலும் துளசி பற்றிய எண்ணங்களே எனைச் சுற்றி வலம்வர ஆரம்பித்தது. நாடோடி வாழ்க்கை வாழ்ந்தாலும் துளசி என்கூட இருப்பது போலவே எனக்கு தோன்றியது. இது நட்பா காதலா புரியக்கூடிய மனநிலையில் என் மனம் இருக்கவில்லை. ஆனாலும் காலம் விடுவதாய் இல்லை. விதி என் வாழ்வில் விளையாடத்தொடங்கியது. துளசியை என்னிடமிருந்து பிரிக்கும் நாட்களை விதி தானாக எண்ணிக் கொண்டது. இதை அறியாமல் நானும் அவளுடன் பழகிக்கொண்டிருந்தேன். பள்ளிக்கு வந்ததன் பின்னாடி ஏதோ அன்று அவள் அதிகம் குழப்பத்தில் இருந்தாள். அதை மட்டும் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. ஒரு ஐம்பது ரூபா பெறுமதியான வாழ்த்து அட்டையை காணவில்லையாம். அவளின் குழப்பத்திற்கான காரணத்தை அறிந்து கொண்டேன். வாழ்த்து அட்டையை திறக்கும்போது ரியூன் போடும். அதில் ஏதும் எழுதப்படவில்லை. ஆனால் அதை என் புத்தகப் பையினுள் திணித்து வைத்திருந்தேன். ஒரு விளையாட்டிற்காகவே அவ்வாறு நடந்தேன். பள்ளி முடியும் நேரம் அவளிடம் கையளித்து இன்ப அதிர்ச்சி கொடுப்பதே எனது நோக்கமாக இருந்தது. பாடசாலை முடிவடையும் நேரம் நெருங்கி பாடசாலை கீதம் ஆரம்பமாகியது. பாடசாலைக் கீதம் முடிவடைந்ததும் வாழ்த்து அட்டையை அவளிடம் கொடுத்துச் சிரித்தேன். அப்போது தான் எனக்கு ஒரு அடி அடித்தாள். கன்னத்தில் பலமாக அடி விழுந்ததும் திடுக்கிட்டேன். என்னை ஒரு நாள் அழவச்சிட்டியெல்லோ. இனிமேல் என்கூட பேசாதே. இன்றிலிருந்து உன்னோடு நான் கோபம் என்று சொல்லி சென்றவள்தான் மறுபடியும் ஒரு நாள் கூட என்கூட பேசவேயில்லை.

எனக்கு ஆறுதலாய் கிடைத்த அவளின் அன்பும் இப்போது இல்லை. ஆரம்பத்தில் கஷ்ரமாக இருந்தாலும் நாட்கள் நகர நகர கொஞ்சம் மனம் தெளிவடைந்ததும் அவளை தோழி எனும் இடத்தை அகற்றி வைத்துவிட்டு காதலி எனும் சிம்மாசனத்தில் அமர்த்திக் கொண்டேன். அதிகமாக அவள் பற்றிய வரிகளை கவிதைகளாக்கி கொண்டேன். உண்மையிலே எழுத்து இல்லாது விடின் என்றோ நான் மண்ணோடு மரித்திருப்பேன் என்றெல்லாம் சொல்லிக் கொண்டேன்.

முகாம் வாழ்க்கை வாழ்ந்தபோது எதிர்பாராத அவளின் வண்ணமடல் என் கைக்கு எட்டியிருந்தது. வானொலியில் என் நிகழ்வு கேட்டு மகிழ்ந்து எனது முகவரி கண்டுபிடித்து கடிதம் எழுதியிருந்தாள்.

நான் உயிரோடு தப்பி வந்தது தனக்கு சந்தோசமாம் என்றும் நான் நல்லாய் இருக்கணும் என்பதுதான் தன் எண்ணமாம். மடல் கிடைத்ததும் எனக்கு பதில் போடாதே. அப்படி பதில் போட்டாலும் உனக்கு நான் இனி எந்த மடலும் வரையமாட்டேன். உனக்கான இறுதிமடல் இதுவாகவே இருக்கும் என எழுதியிருந்தாள். வாசிக்கும் போது கடிதத்தில் சில கண்ணீர்த்துளிகள் விழுந்து காகிதம் நனைந்திருந்தது. பதில் போட்டேன். அவள் பதில் போடவில்லை. அவளின் தோழியே எனக்கு பதில் போட்டாள். ஒரு வாழ்த்து அட்டைக்கு இப்படியா கோபிப்பது. எதற்காக அவள் அந்த வாழ்த்து அட்டையை பாதுகாத்தாள். என்னை அவள் எப்படிப் பாத்தாள். நண்பனாகாத காதலனாகவா? இறுதிவரை எனக்கு விளக்கம் கிடைக்கவில்லை. என் மனம் அவளைக் காதலியென்றே அடிக்கொரு தடவை சொல்லிக் கொண்டது. பொருள் மீது ஆசைப்பட்ட என் துளசி யாரோ ஒருவனின் காதல் வலையில் விழுந்து கலியாணமாகி வெளிநாட்டிற்குப் போய்விட்டாள்.

டேய் மச்சான் புறப்படு. மீண்டும் நண்பன் எனது சிந்தனையை கலைத்தான். அதற்கு அவன் ஒருத்தி விட்டிட்டு போனால் அவளையே நினைச்சு நித்தம் அழிந்து போகாமல் இன்னொருத்தியை கட்டி சந்தோசமாக வாழுற வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை. உலகத்தில எல்லாற்ற காதலும் வெற்றியில் முடிவதில்லை. பள்ளிக் காதல் பாதியில முடிஞ்சுபோகிறது என்று அவன் விளக்கியபோது மெதுவாக என் மனம் நிலையற்ற வாழ்வியலை உணர்ந்தது. எப்படி பொம்பள வேணும் என்று அவன் என்னிடம் கேட்டபோது துளசி எனும் பெயரில் உள்ள பெண்ணே வேண்டுமென்று பதிலுரைத்தேன். அவனும் சம்மதித்தான். பிரபல கல்யாண புறோக்கர் வீடு தேடி நானும் நண்பனும் மோட்டார் சைக்கிளில் பறக்கிறோம். துளசி எனும் பெயரில் அமைந்த பெண் எனக்கு கிடைப்பாள். அவள் என் துளசியைப் போல அன்பாக இருப்பாள். நம்பிக்கை மட்டும் என் மனதில் ஆழமாக வேரூன்றி இருந்தது.



## அருட்பணி ராஜன் றோகான்

அம்பனை வசிப்பிடமாகக் கொண்ட இவர் இயல்பாகவே மானிட மேம்பாடு, சமூக மாற்றுருவாக்க கோட்பாடுகளிலும் செயற்பாடுகளிலும் ஆர்வம் கொண்டவர். சிறுவயதுமுதல் கவிதை, கட்டுரை, நாடகம், சிறுகதை எழுதுவதில் நாட்டம் கொண்ட இவரது அனைத்துப் படைப்புக்களிலும் மாற்றுக் கலாசாரத்திற்கான சிந்தனையும் மானிட விடுதலைக்கான ஏக்கமும் முதன்மைபெறுகின்றது.

# என்னை பிரசவித்துக் கொண்டிருக்கும் இத்தனை தாய்களுக்கு....

*என்றும் போல் அல்ல; அன்று விடியலின் பிரசவம் தாமதமாகிக் கொண்டே இருந்தது. விடியல்கள் என்பது இப்போது வெறும் வெற்றுக் கிண்ணங்களாகும். அமிர்தம் சுரக்கும் அட்சய பாத்திரம், காத்திருந்த எனக்கும் என்னைப் போல இன்னும் சிலருக்கும் அருளப்பட்ட ஏமாற்றங்களின் உச்சப் பெறுமானம். நகர்வதற்கு இனி ஒரு சாண் இடமில்லாது விரக்தியில் தள்ளிக்கொண்டுள்ளது. வெறுமையும் வரட்சியும் என் எண்ணங்களின் மூல உருவாக்கம் வரை ஆழமாய் வேரூன்றிய விருட்சங்கள். ஆகவே இனி நற்கனிகளின் முளையத்திற்கு சாத்தியம் குறைவே! இப்போது ஆக்ரோசம் என்னை பிரசவித்துக் கொண்டிருக்கும் இன்னுமொரு தாயாவாள்.*

*வீரியம் குறைந்துவிட்டன. சூரியனின் வெளிச்சங்களுக்கு, அதன் கதிர்களின் நீட்சிகளில் ஸ்தம்பிதமே! நாளுக்கு நாள் மாறிக் கொண்டிருக்கும் காலநிலைகளின் விம்பங்களில் நானும் ஒன்று. என்னவொரு பொருத்தம், என்னைப் போலவே காலநிலைகளும் அசௌகரியத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. அழுகைச் சத்தங்கள் மாறுகின்றன புலம்பலாக, தோற்றுப் போன என் கனவுகளின் அத்திவாரத்தில் மிச்சமாகவுள்ள மூச்சுக் காற்றுக்களுடன்*

புழுதியில் இருந்து மீண்டும் ஒரு சாயல், இப்போது தோல்விகள் என்னைப் பிரசவித்துக் கொண்டிருக்கும் இன்னுமொரு தாய்.

நாழிகைகள் கழிகின்றன. உற்றுப் பார்த்தேன்! உதயம் வலிமையற்றுப் போனதாகவே உணர்ந்துகொண்டேன். எவ்வித வேறுபாடுகளையும் அறிந்து கொள்ள முடியவில்லை. தடயங்கள் எல்லாம் வலிந்து உருவாக்கப்படுகின்றன. இப்போது, சூரியனின் நாகப் பிழம்புகள் படம் எடுத்தாடுவதில் பாரிய பின்னடைவுகள், அக்கினித் தழலின் கணகணப்பு குறைந்து கொண்டே போகின்றது. அதனை முற்றிலும் மேவி உலர்த்துப்போன மானிட எலும்புக்கூடுகள் குவியல் குவியலாகக் காணப்படுகின்றன. ஆயினும், எனது ஐம்பொறிகளும் விழித்துக் கொண்டன. உற்றுப் பார்த்தேன் செத்துக் கிடந்த சித்தாந்தங்கள் வேதாந்தங்களின் தாய்மைப்பேறு பெற்று பாலூட்டுகின்றன. இப்போ, சித்தாந்தங்கள் முலையூட்டிகள், வேதாந்தம் வளர்குட்டிகள் தெளிவாக எதுவுமே தெரியவில்லை. மீண்டும் மீண்டும் உற்றுப்பார்த்தேன். காரிருள் இன்னும் அகலவில்லை. இருளின் ஆதிக்கம் ஜெயகீதம் பாடிக் கொண்டிருந்ததால் சந்திரலோகத்தின் புதல்வர்கள் வழுக்குமரத்தின் உச்சம் அடைந்து வெற்றிக்கொடியைப் பிடித்துவிட்டார்கள். பிரபஞ்சத்தின் வடிவம் துகள் துகளாக உடைக்கப்பட்டன. அதன் சிதைவுகளில் இருந்து எனக்கான உறவுகளை பொறுக்கியெடுக்க முயன்றேன். எதுவும் கிடைக்கவில்லை. அவர்கள் அனைவரும் அவர்களுக்கென, ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட கலத்தின் அகம் புகுந்து சுருண்டு படுத்துக் கொண்டனர். அதனைவிட்டு வெளிவரும் ஆற்றல் அவர்களிடம் இருந்தது. ஆயினும் வாய்ப்பாடுகள் வழியாக நகர்ந்தே பழக்கப்பட்ட ஜந்துக்களானபடியால், நெற்றிக் கண் திறக்கும் தந்திரம் அவர்களுக்கே தெரிந்திருக்கவில்லை. ஆனபடியால் எவரும் எனக்குக் கிடைக்கவில்லை. தனித்திருப்பதே என் சித்தம். இப்போது தனிமை என்னைப் பிரசவிக்கும் இன்னுமொரு தாயாவாள்.

வெளிச்சங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை. பாலியல் தூண்டலுக்கும் குறைவில்லை. இப்போது நான் இருளைக் காதலிக்கின்றேன். என் காதலனும் ஓர் அரும் பொக்கிசம். ஆகவே

அவன் இருள், ஆயினும் அவனை உண்மையாகவே நேசிக்கின்றேன். அவன் என் அம்மணங்களை மறைத்துக் கொள்கிறான். வெளிச்சங்கள் வேண்டாம். அவற்றில் பல நிறங்கள் உண்டு. அதன் வேறுபாடுகள் தமக்கிடையே பிளவுபட்டுக் கொள்கின்றன. அதன் போட்டிகளில் எஞ்சியிருக்கும் மனிதமும் ரணம் சிந்துகின்றது. இருள் நல்லது. அதன் நிறம் ஒன்றே! இருவரும் ஒருமுறை உடலுறவு கொண்டோம்! அதன் பின்னர் என்னுள் இறந்து கிடந்த அணுக்கள் யாவும் உயிர்பெற்றன. வலுவடைந்து எழுச்சி பெற்றன.

நான் தலையை நிமிர்த்தினேன். எனக்காக கொடுக்கப்பட்ட கூடாரத்தின் கூரை கிழிந்தது. அக்கிழிஞ்சல்களின் துவாரங்கள் வழியாக புத்துணர்வு தரும் காற்று என்னைப் புதுப்பிக்க முத்த மிட்டது. இயலும் வரை நிமிர்ந்தேன். கண்ணுக்கெட்டிய தூரத்தில் வெள்ளை நிறக்கோபுரம் ஒன்று கம்பீரமாகக் காட்சியளிக்கக் கண்டேன். அது புதிதாக முளைத்தது என்றனர் சிலர். எப்படியாயினும் அது கண்ணுக்கு மிகவும் கவர்ச்சியாக இருந்தது. அதனைச் சுற்றி புத்தரின் புத்திரர்கள் வணக்கம் செய்தனர்.

என்ன ஆச்சரியம் அக்கோபுரத்தின் உச்சத்தில் நின்று கொண்டிருந்த ஒருவன், என்னை பூதக்கண்ணாடி கொண்டு அவதானித்துக் கொண்டிருந்தான். அவனது முகம் சிங்கத்தைப் போன்று கம்பீரமாக இருந்தது. தர்மசக்கரத்தை மகுடமாக அணிந்திருந்தான். அரசிலைகளால் நெய்யப்பட்ட இடைக் கச்சையை உடுத்திருந்தான். அது மிகவும் அழகானதாக இருந்தது. ஆனால் அவனோ, பூதக்கண்ணாடி வழியாக என்னை உற்றுப் பார்த்த வண்ணம் இருந்தான். அப்படி அவன் என்னைப் பார்ப்பது, எனக்கு மிகவும் சங்கடமாகவே இருந்தது. அவன் என்னை அவதானிப்பதற்கான அர்த்தங்கள் என்னவாயிருக்கும் என எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன். அவ்வேளையில் கல்லறைகளில் இருந்து புலம்பல் சத்தங்கள் என் செவியை வந்தடைந்தன. நான் மீண்டும் கூடாரத்திற்குள் புகுந்துகொண்டேன். எனது மூன்றாவது மகள், அவளுக்கு இசையென்றால் மிகவும் பிரியம். அவள் உறங்கிக் கொண்டிருந்த கல்லறையருகில் மெதுவாகச்

சென்றேன். நான் போவதற்கு முன்னமே அவள் விழித்துக் கொண்டு, எனக்காகக் காத்திருந்தாள். அவள் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்டபோது, அவள் எனக்கொரு சங்கதி சொன்னாள். நான் கண்ட அந்த மனிதன் தான் இந்தக் கல்லறைக்குச் சொந்தக்காரனாம். மேலும் ஒரு ஆலோசனையையும் சொன்னாள், "அம்மா நீ சாதாரண பெண் அல்ல. நீதான் உண்மை. உன்னைப் பார்க்க இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு சில ஆத்துமாக்கள் தாகமாய் இருக்கின்றன. ஆகவே நீ இக் கூடாரத்தை விட்டு வெளியே செல்ல வேண்டும்" என்றாள். இவ் வார்த்தைகளைச் சொல்லியவுடன் அவள் மீண்டும் உறங்கத் தொடங்கினாள். செவிப்பறை வழியாக எனக்குள் வந்தடைந்த இவ் வார்த்தைகள் என் நுனி நரம்புகளுக்கு வலுவேற்றம் செய்தன. உள் உறுப்புக்கள் அனைத்தும் வெப்பம் அடைந்தன. நான் மீண்டும் ஜனனித்தேன். என்னால் இயங்க முடியும் போல் தோன்றிற்று! இப்போது, இறந்து போனவர்களின் ஏக்கம் என்னைப் பிரசவித்துக் கொண்டிருக்கும் இன்னுமொரு தாய்!

நான் எழுந்து நின்று எனது இரண்டு கால்களையும் அகலமாக ஊன்றி நின்றேன். எனது எழுச்சியும் இப்புதிய நிலைப்பாடும் சிங்கப் புத்திரனுக்குப் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும். உடனடியாக, புதிதாகத் தளிர்விட்ட அலரி இலைகளை எடுத்து ஏதோ எழுதிய பின் ஓலையாக மடித்து எல்லாத் திசைகளுக்கும் அனுப்பினான். ஓலைகளைப் பெற்றுக்கொண்ட தூதர்கள் திசையெட்டும் பறந்தனர். வெள்ளைக் கோபுரத்தின் உச்சத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைக்கப்பட்டது. சிங்கப் புத்திரர்கள் எல்லாம் கூடி ஆலோசித்து விட்டு, மீண்டும் மறைந்து விட்டனர். ஏதோ ஒன்றுக்கு ஆயத்தப் படுத்துவதாகவே நான் உணர்கின்றேன். கூடாரத்துக்குள் இருந்தவர்கள் என் காலைப்பிடித்து தொடர்ச்சியாக இழுத்த வண்ணம் இருந்தனர். நானும் மீண்டும் கூடாரத்துக்குள் வந்து அமர்ந்து கொண்டேன்.

விடியலுக்கான தடயங்கள் எதுவும் தென்படவில்லை. இருளின் ஆதிக்கம் தொடர்ந்துகொண்டே இருந்தது. ஆயினும் என் கூடாரத்தினுள் உறங்கிக் கொண்டிருந்தவர் அனைவரும் எழுந்து

அமர்ந்திருந்து என்னை ஆச்சரியமாகப் பார்த்தனர். ஒருவிதமான பயமும் அவர்கள் முகத்திரையில் தென்பட்டன. வழமையாகப் படுத்தே கிடக்கும் குமாரியும் அன்று விழித்தெழுந்து அமர்ந்திருந்தாள். அவள் எழுந்திருந்தது மட்டுமல்ல, அவளது பார்வையே ஓர் ஆச்சரியமாக இருந்தது. ஒருவிதமான நிசப்தம் எம்மத்தியில் தொடர்ந்து, யாராவது பேசினால் நல்லாயிருக்கும் என எண்ணினேன். ஆனால் ஒருவருமே பேசவில்லை. சில சந்தர்ப்பங் களில், அனைவரும் மௌனமாக இருப்பதனால் ஏற்படுகின்ற அமைதி, ஈற்றில் பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடும். ஆகவே இவ்வமைதியை உடைக்க வேண்டும் எனும் ஏக்கத்தோடு குமாரியை நோக்கி "என்ன பித்துப் பிடித்தவள் போல் இருக்கின்றாய்! ஏதும் சொப்பனம் கண்டாயா?" என்றேன்! நெற்றிப் புருவங்களை இறுகச் சுருக்கிக்கொண்டு கூடாரத்தின் கூரையில் உண்டான கிழிஞ்சல் வழியாக ஏதாவது தெரிகிறதா? என உற்றுப் பார்த்துவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டாள்.

மீண்டும் நான், "என்ன? யாராவது பேசுங்கள்! என்ன யோசிக்கிறீர்கள் என்பதையாவது சொல்லுங்கள்" என்றேன். எனது இளைய சகோதரன், இரண்டு நாட்களுக்கு முன்புதான் தடுப்பு முகாமில் இருந்து வந்திருந்தான். இதுவரையிலும் ஏதோ ஒரு மயக்க நிலையில் தான் இருந்தான். இப்போது சற்று சித்தம் தெளிந்தவனாக "எம்மில் எவரும் வெளியே போவது நல்லதல்ல. நம் எல்லோருக்கும் நல்ல வாழ்வு இதற்குள்ளே இருக்கின்றது. நாம் எதுவும் பேசாது இதற்குள்ளே இருந்து விடுவோம். வெளியே என்ன நடந்தால் என்ன, நாம் இந்தக் கூடாரத்துக்குள்ளே இருப்போம். அதுதான் நல்லது!" என்னை உற்றுப்பார்த்து "உனக்குத்தான் சொல்கிறேன்" என்றான். எல்லோரும் அதற்கு தலையசைத்த வண்ணம் ஒப்புதலை வழங்கி விட்டு மீண்டும் படுத்துக்கொண்டனர்.

ஆனால், எனக்கென்னவோ! அவனது பேச்சில் அர்த்தம் ஒன்றும் புலப்படவில்லை. அவனது பேச்சு வெறும் ஒலி ஓசையாகவே இருந்தது. உயிர்ப்பிக்கும் மூச்சுக்காற்றுக்கள் அந்த ஒலி நாதத்திற்குள் இருக்கவில்லை. இதற்கு முன் அவன் அப்படி இல்லை, எமக்கு

முன்பே சிவரூபம் எடுத்திருந்தான். அவன் விடம் உண்ட கண்டன் அல்ல, விடம் உண்பதற்காக, நெஞ்சறையின் இடையே விடமேற்றி, தழலில் சுழியோடுகின்ற யாகம் ஒன்றில் தடம் பதித்திருந்தான். தடுப்பு முகாமிலிருந்து வந்த நாள் முதல், அவனது சிந்தை, செயல் யாவும் சிறைப்பட்டதாகவே தென்பட்டது. கண்ணுக்குப் புலப்படாத பல சங்கிலிகள் அவனைப் பிணைத்திருந்தன. இப்போது அவனது வார்த்தைகள், என் ஊகத்தை உறுதி செய்துவிட்டன. அவன் என்னுடன் இருப்பதில் எனக்குப் பயனேதும் இல்லை, எம்மோடு இருப்பவர்கள் எல்லாம் எமக்கானவர்களும் இல்லை. எனது சுவாசப் பாதையின் சுற்றுப்பயணத்திற்குத் துணையானவர்களும் அல்ல. "எண்ணிக்கைகள் வெறும் இலக்கங்களாகவே தென்படுகின்றன. படைக்கலன்களும் வெறும் இயந்திரங்களாகும். நெற்றிக்கண் திறக்கும் தந்திரம் தெரியாவிட்டால், அல்லது அதனை திறப்பதற்கான தைரியம் இல்லாவிட்டால், நாம் எப்போதும் வேறு நபர்களின் உடமையாகவே இருப்போம், சதுரங்க ஆட்டத்தில் வெற்றி பெறுவோர் எம்மை சுவீகரித்துக் கொள்வர்." இவை எனக்குள்ளே எழுந்த ஞான உபதேசங்கள். இவற்றை யாரிடம் சொல்வது! சொல்லியும் பயனில்லை. முதலில் இந்த இடத்தை விட்டு எப்படியாவது வெளியே செல்ல வேண்டும் என முடிவெடுத்தேன். என் மகள் இசையும் இதைத்தான் சொன்னாள். இவ்வாறு நான் சிந்தித்துக் கொண்டிருந்த போது, ஏதோ கனரக வாகனங்களின் இரைச்சல் என செவியை வந்தடைந்தது. என்னவென்று அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் மிகையானது. ஆனால் என்னுடன் இருந்தவர்களில் எவரும் அதனைப் பற்றி சிந்திப்பதாக தோன்றவில்லை. ஒன்று மட்டும் எனக்கு தெளிவாகப்பட்டது. இப்போது எம்மில் யாராவது ஒருவர் எழுச்சி கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், எமது ஆலயங்களில் தீபத்தின் வெளிச்சம் பிரகாசித்த வண்ணம் இருக்கும். ஆயினும் எமது தெய்வத்திற்கு ஆற்றல் இல்லையென்றே ஆகிவிடும்.

நான் மீண்டும் எழுந்து நின்றேன். என் அவயங்களிலும் மேனியின் பரப்புகளிலும் ஒட்டிக்கொண்டிருந்த புழுதிகள் இன்னும் இறுக்கமாக என்னைப் பற்றிக் கொண்டன. அவை வெறும் துகள்கள் அல்ல, அவை கொள்கைகளாக மாண்ட இலட்சியத் தோழமைகளின்

மாற்று வடிவங்கள். உயிருடன் இருப்பவர் யாரும் இல்லா விட்டாலும், இறந்தவர்கள் என்னுடன் இருப்பது எனக்கு புதியதொரு ஆற்றலைக் கொடுத்தது. நான் ஒரு சாதாரண மனிதனல்ல. இறைவனின் சாயல், ஜீவாத்துமாக்களின் சங்கமம் நானே! கொள்கையுடன் மாண்டோர் என்னைப் பிரசவித்துக் கொண்டிருக்கும் இன்னுமொரு தாய் ஆவார்.

மீண்டும் எழுந்த நான், புதினங்களைப் பார்த்தறியும் ஆவலுடன், கூடாரத்தின் கிழிஞ்சல்கள் வழியாக தலையை நீட்டி வெளியே பார்த்தேன். இப்போது தலை மட்டுமல்ல, எனது நெஞ்சறை, இரண்டு மேலவயவங்கள் எல்லாம் கூடாரத்தை விட்டு வெளியே வந்தன.

மக்கள் சாரை சாரையாக நடமாடிக் கொண்டிருந்தனர். அனைவரும் தங்களுக்கென ஒன்று சிலர் இரண்டுமாக ஊன்றுகோல்களை ஊன்றிய வண்ணம் நடமாடினர்.

சந்து, பொந்து என அனைத்து இடங்களிலும் சந்தைகள், ஆலயங்கள் கூட வியாபார தளமாக வடிவமைக்கப்பட்டிருந்தன. அவை பரவசமூட்டும் இறை நாதங்களை வியாபாரம் செய்தன. கலப்படமும் கலகலப்பும் அனைவரையும் நுகர்பவர்களாக மாற்றிக் கொண்டிருந்தன. தன் ராச்சியத்தை பார்வையிட வந்த சிங்கப்புத்திரன், நுகர்வோரையும், நுகர்வுப் பொருட்களையும் கண்டு ஆனந்த உற்சவத் தாண்டவம் ஆடினான். ஜதி, நடை, தாளம் எதுவும் அவனது ஆட்டத்தில் சாஸ்திரப்படி அமைந்திருக்கவில்லை. ஆயினும் அனைவரும் அவனது ஆட்டத்தைப் பார்த்து மெச்சினர்.

தெற்கில் இருந்து, செவிப்பறைகளைக் கிழித்த வண்ணம் நாதசுர ஒலிகளை எழுப்பிக் கொண்டு கனரக வாகனங்கள் வருவதும் போவதுமாக இருந்தன.

நகரின், நடுமையத்தை நோக்கி புதிதாக அமைந்திருந்த பாதையின் இரண்டு பக்கத்திலும் மாலைகளை ஏந்திய வண்ணம் பலர் ஏதோ ஒன்றுக்குத் தயாராகினர். அது திருமண விழாவுக்கான ஆயத்தம் போல இருந்தது. அப்போது, பேரோசையுடன்

"யாழ்தேவி" நகரை வந்தடைந்தாள். கூடி நின்றவர் எல்லாம் மாலை அணிவித்து முத்தமிட்டு அவளை வரவேற்றனர். பட்டுப்புடவை அணிந்திருந்த அவளைக் கண்டு, அனைவரும் ஆரவாரம் கொண்டனர். நான் நெற்றிக் கண்ணைத் திறந்து பார்த்தபோது, சரித்திரத்தில், அவள் பல தடவை கூட்டு வன்முறைக்குட்படுத்தப் பட்டது எனக்கு நினைவுக்கு வந்தது. ஆனால் எல்லாம் மறந்து அனைவரும் மகிழ்ச்சியாகவே இருந்தனர். இதைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்குள் முரண்பாடுகள் தோன்றின. நான் மீண்டும் கூடாரத்துக்குள் வந்து அமர்ந்து கொண்டேன். படுத்திருந்தவர்கள் எல்லாம் என்னைப் பார்த்து விட்டு, தங்களுக்குள்ளே நகைத்துக் கொண்டனர். எனக்கு என்னவோ சற்று அவமானமாகவே இருந்தது. யாருடன் எதுவும் பேசாது, போர்வை ஒன்றை எடுத்து இழுத்து மூடிக்கொண்டு படுத்துக் கொண்டேன். இனி, என்ன நடந்தாலும் சரி, வெளியே போவதில்லை என முடிவெடுத்து, கண்களை இறுக மூடி உறங்குவதென்று தீர்மானித்தேன். உறக்கம் என்னை ஆட்கொண்டது. உறக்கம் என்னை மிகவும் ஆழமான இடத்திற்கு அழைத்துச் சென்றது.

அது ஒரு சுரங்கப்பாதை, வளைவும், சுழிவும் கொண்ட மிக நீளமான சுரங்கப்பாதை. இடையிடையே தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன. பறந்து செல்வதாகவே உணர்ந்தேன். மையப் பகுதியை அடைந்ததும் மிகவும் விசாலமான பகுதியொன்று காணப்பட்டது. அங்கே பல அறைகள் இருந்தன. ஒவ்வொரு அறைகளிலும் பன்னிரெண்டு இளையோர் விகிதம் சிறை வைக்கப்பட்டிருந்தனர். ஒரு இளைஞன் மட்டும் என்னைக் கண்டவுடன், என்னை நெருங்கி வந்தான். அவனுக்கு ஒற்றைக்கால் மட்டுமே இருந்தது. இருப்பினும் அவன் மிக வேகமாக என்னண்டை வந்து அம்மா! என்று கதறியபடி அணைத்துக்கொண்டான். பெத்து வளர்த்த எனக்கே அப்போதுதான் புரிந்தது. எனது மூத்தமகன் "அனிஸ்ரன்" அவன்தான் என்று. இறுதி யுத்தத்தின் போது பறிபோனவன், விசாரித்துவிட்டு விடுகின்றோம் என அழைத்துச் சென்றனர். எட்டு வருடங்களாயிற்று. அவனது உடல் முழுவதும் மாமிச வாடை, முதுகுப்புறம் எங்கும் முள்ளாணிகள், என்னடா இது? உன் மேனியெங்கும் ஆணிகளாக இருக்கின்றது என்றேன்.

அதற்கு அவன், நான் இயேசு, இங்கு இருப்பவர் எல்லாம் இயேசுக்கள், ஒரு சிறு வித்தியாசம், இயேசுவுக்கு மூன்றாணிகள் மட்டுமே! எமக்கோ! தொண்ணூற்றெட்டு ஆணிகள் என்றான். நான், அவனது இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு, இனி இங்கே இருக்க வேண்டாம், வா என்னுடன் வா... வா...வா... என கையைப் பிடித்து இழுத்து அழைத்தேன்.

என்னருகே படுத்திருந்த குமாரி, என்னைத் தட்டியெழுப்பி, ஏதாவது சொப்பனம் கண்டாயா? இந்த தண்ணீரைக் குடி என ஒரு டம்ளர் தண்ணீர் கொடுத்தாள். தண்ணீரைக் குடிக்கும் போதுதான், சுதாகரித்துக் கொண்டேன். நான் காணாமலாக்கப்பட்ட எனது மகனை எண்ணிக் கனவு கண்டேன் என்பதனை.

தண்ணீரைக் குடித்துவிட்டு, எனது கைப்பையை எடுத்து, அதற்குள் இருந்த அனிஸ்ரனின் படத்தை மீண்டும் பார்த்துவிட்டு, கைப்பையையும் எடுத்துக் கொண்டு மீண்டும் எழுந்தேன். என்ன நடந்தாலும் சரி, நான் இந்தத் தடவை வெளியே சென்று ஆகவேண்டும். இப்போது இந்தத் தீர்மானத்தில் எனக்கொரு உறுதியான நிலைப்பாடு தென்பட்டது. தெளிவற்ற விம்பங்கள் ஏராளம் அவற்றுள் தெளிவாக தரிசனமொன்று தென்பட்டது. என் தரிசனம் என்னைப் பெற்றெடுத்த இன்னொரு தாய்!

**தவறான விடயங்களைச் சரியானதென்று**
**நினைத்துக் கொண்டிருப்பது தான்**
**இன்று பல தவறுகளுக்கு**
**அடிப்படைக் காரணமாகியுள்ளது.**



## ந. மயூரரூபன்

அம்பனில் 1978 இல் பிறந்த இவர் சிறுகதை, கவிதை, விமர்சனம், நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடுடையவர். 2012 இல் சமூகப் பிரச்சினைகள் : சில சமூகவியல் குறிப்புகள் எனும் கட்டுரைத் தொகுதி, 2012 இல் நீயுருட்டும் சொற்கள் கவிதைத் தொகுதி, 2013 இல் சொற் குறியம் இலக்கிய விமர்சனக் கட்டுரை, 2016 இல் மரத்தில் தொங்கும் பாம்பு சிறுகதைத் தொகுதி ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

# பதுங்குகுழி

உருவத்தில் மிக மெலிந்த, உயரங்குறைந்த தோற்றத்தில் தற்போது குடியிருக்கும் அவன், தன்னை வீரசிங்கம் இரத்தினகுமார் என போதகரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான்.

சுதந்திரபுரத்திலிருக்கும் அந்த ஆலயத்துக்குப் போதகர் ஆனந்தம் றோகான் கடந்த மாதந்தான் தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டிருந்தார். அவருக்கு மிக இளவயது, ஆயினும் தனது எண்ணங்கள் தொடர்பில் மிக மேலான மதிப்பீடுகளை அனைவரிலும் ஏற்படுத்தியிருந்தார். அவரது ஆள்மன எண்ணமும் அதுவாகவே இருந்தது. அதற்கேற்றவகையிலேயே அவரது நடவடிக்கையும் இருப்பதை உணரமுடிந்தது.

தன்னை ஒரு ஆசிரியனாக அடையாளப்படுத்தியிருந்த இரத்தினகுமார், போதகர் றோகானின் முன் வெகுவாக சங்கடப்பட்ட தோரணையிலேயே அமர்ந்திருந்தான். போதகர் அவனது முகத்தினை மிக உன்னிப்பாகப் பார்த்தார். நீண்டநேரம் பார்த்த படியே இருந்தார். இரத்தினகுமார் அடிக்கடி அவரது முகத்தை நிமிர்ந்து பார்ப்பதும் பின்னர் தலையைக் குனிவதுமாக இருந்தான். இடைக்கிடை கால்களை அப்படியும் இப்படியுமாக அசைத்துக்

கொண்டான். அவனால் தொடர்ந்து அவ்வாறு இருக்கமுடிய வில்லை.

போதகர் மேலும் கீழுமாக தலையை ஆட்டிக்கொண்டார். இறுதியுத்தத்தில் அவனது மனைவியும் பிள்ளைகளும் இறந்து விட்டதன் பேதலிப்பு அவனது முகத்திலும் உடலிலும் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தார்.

இரத்தினகுமாரும் எப்போதும் பதற்றத்தினை தன் மேல் போர்த்திக் கொண்டவன் போலவேயிருந்தான். சிரிப்பதற்கு அதிகம் சிரமப்பட்டான். சிரிக்கமுனையும்போது உதடுகள் மட்டும் கட்டளைக்கு விரிவது போல் விரிந்து பின் மூடிக்கொள்ளும். பற்கள் ஒழுங்கற்றும் அதிகமாய் கறைகளைப் பூசிக் கொண்டனவாயும் காணப்பட்டன. மிகத் தொலைவில் பார்ப்பதற்கு ஆசைப்பட்டவன் போல அவனது பார்வை தூர எறிந்திருப்பதனை போதகர் றோகான் கண்டுகொண்டார். இதனால் அவருக்குள்ளும் சிறிது பதற்றம் தொற்றிக்கொண்டது. நடுக்கமாகவும் இருக்கலாம், அந்தக் கணத்தில் அதனைச் சரியாக இனங்கண்டுகொள்ள முடியவில்லை.

தனியாக யாருமற்று இரத்தினகுமார் இருப்பதைக் கண்டு கொண்ட போதகர் றோகான், இரத்தினகுமாரைத் தன்னுடனேயே இருத்திக்கொண்டார். பாடசாலை நேரம் போக மீதி நேரங்களில் போதகருடனேயே இருக்க முனைந்தான் இரத்தினகுமார்.

தனிமையின் பிடிக்குள் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வது அவனுக்கு மிகக் கடினமாகவே இருந்தது. ஆலயத்துள் அதிக நேரம் மௌனமாக இருக்கத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டான். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உருவத்தைப் பார்த்தபடி நீண்டநேரம் அமர்ந்திருப்பான். றோகான், இரத்தினகுமாரின் இந்த இருப்பை அவதானித்தபோதும் அவனைத் தொந்தரவு செய்யாமல் அவன் போக்கிலேயே விட்டுவிட்டார். சிலுவையிலுள்ள இயேசுவின் உருவத்தில் விழிகள் எப்போதும் நிலைத்திருந்தன.

தன்னை யாரோ பின் தொடருகிறார்கள் என்பதான பிரமை இரத்தினகுமாரின் தோள்களில் நன்றாகவே குந்தியிருந்தது.

அந்தப்பிரமையில் அடிக்கடி தோள்களைக் குலுக்கிக் கொள்வான். தோள்களைக் குலுக்கிக் கொள்வது அவனது இயல்பாகவே மாறியிருந்தது.

இரத்தினகுமாரின் ஆலய இருப்புக்கண்டு போதகர் றோகான் அவனுக்கு ஞானஸ்நானம் செய்தார். அவன் போதகரிடம் தன்னுடைய மதத்தைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ அல்லது ஆன்மீகத்தைப் பற்றியோ எப்போதும் வாய்திறந்து உரையாடிய தில்லை. அவனது தூரத்தில் கொழுவிய பார்வையும், ஆலயத் தனித்திருப்பும், இயேசுவின் மீதான பார்வை நிலைப்பும் இரத்தினகுமாரை கிறிஸ்தவனாக்கியிருந்தது.

கர்த்தர் அவனது வாழ்வின் கிருபைக்குத் துணையிருப்பார் எனப் போதகர் றொகான் முழுமையாக நம்பிக்கை வைத்தார்.

இப்பொழுதெல்லாம் கிறிஸ்தோபர் இரத்தினகுமார் பைபிளுக்குள் தனது பார்வையை நிலைத்திருக்கப் பழக்கிக் கொண்டான். இரவுகளிலும் தொடர்ந்து பைபிளுக்குள் தனது பார்வையைக் கொழுவியிருந்தான். ஆலயத்தின் மேலே பார்த்த, சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் அந்த உருவம் பைபிள் தாள்களில் நீர்த் தோற்றமாய் அசைந்தது. அது அவனது விழிகளை எப்போதும் அழைத்து வைத்திருந்ததை யாருமே அறிந்திருக்க வில்லை.

திடீரென அந்தத் தாள்களிலிருந்து விழிகளை பிடுங்கிக் கொள்பவன் தனது தோள்களை குலுக்கிக் கொள்வான். பின் விழிகள் மெல்ல மெல்ல அந்த நீருக்குள் இறங்கும். அங்கு சிலுவையில் தொங்கும் இயேசுவை அவை தேடிக்கொண்டேயிருக்கும்.

கிறிஸ்தோபரின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் பார்த்த றோகான் போதகருக்கு வியப்பாக இருந்தது. ஒரு உண்மையான கிறிஸ்தவனாக இருக்க இரத்தினகுமார் உழைக்கிறான் என உணரத் தலைப்பட்டார். அதனால் கிறிஸ்தோபருடன் விவிலியக் கருத்துகளை விவாதிப்பதற்கு அவர் முனைந்தார். எனினும் இரத்தினகுமார் அதில் பெரிதாக ஆர்வங் கொண்டவனாய்க் காட்டிக் கொள்ளவில்லை.

மிகவும் அமைதியுடன் போதகர் கூறுவதை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவன் கரிசனையுடனும் மிகுந்த ஈடுபாட்டுடனும் தான் கூறுவனவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கிறானா என்பதை போதகரால் அறிந்துகொள்ளமுடியவில்லை. அவன் இடைக்கிடை தனது தோள்களைக் குலுக்கிக் கொள்வதை மட்டுமே அவரால் கண்டுகொள்ள முடிந்தது.

ஆயினும் கிறிஸ்தோபரின் பைபிள் படிப்பு தொடர்ந்து கொண்டேயருந்தது. விழிகள் தொடர்ந்து நீர்ச்சலனத்துள் மிதந்து படிப்படியாக நீந்தத் தொடங்கியிருந்தன.

இயேசுவின் உடல், காயங்களின் செம்மையில் உயிர்த்திருந்தது. குருதிப் பொட்டுகள் நீரில் விழுந்து கீழிறங்கிப் பின்னர் உடைந்து நீரில் அடர்ந்தது. முக்குழித்துச் சுழியோடப் பழகிக் கொண்ட அவனது கண்கள் செந்நீர் அடர்த்தியின் வலிகளில் தத்தளித்து, மீண்டபின் தத்தளித்தது.

தொடர்ந்து தத்தளிக்கத் தத்தளிக்க, வலிகள் புதிது புதிதாய் உயிர்த்தெழுவதை விழிகள் தொடர்ந்து பார்த்துக் கொண்டேயிருந்தன.

பொதுவாக இரத்தினகுமாருக்கு இரவுகளில் நித்திரை வருவதில்லை. பெரும்பாலான இரவுகள் இரத்தினகுமாரின் விழிப்புகளை மட்டுமே காவிச் சென்றன. இது கிறிஸ்தோபர் இரத்தினகுமாராக அவன் மாறிய பின்னும் தொடர்ந்தது. அவனது விழிப்பு நேரங்களில் பெரிதாக மாற்றங்கள் எதுவும் நிகழ்ந்திருக்கவில்லை. அதேபோல் தனிமையில் தன்னுடலை வைத்திருப்பதை தொடர்ந்து கடைப்பிடித்து வந்தான். அவனது மூளையும் மனமும் முழுமையான விழிப்புடன் இருளுக்குள்ளும்; இருள் கடந்தும் தொடர்ந்தும் அலைந்தபடியே இருந்தன.

நைலோன் கயிறொன்று உத்தரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்தது. சற்றுப் பழுப்பேறிய நீலநிறக் கயிறு. அதன்

கீழ்முனையில் யட்டியுடன் ஒருவன் தொங்கிக் கொண்டிருந்தான். குள்ளமான மெலிந்த தோற்றத்திலிருந்த அவனது வெற்றுடம்பிலிருந்து வியர்வை கரைந்து கொண்டிருந்தது. அவனது தலைக்குக் கீழே சிறு தொட்டியொன்று, அதற்குள் நீர் நிறைந்திருந்தது.

சற்றே ஊத்தை கலந்த செம்மையேறிய அந்த நீர் சலனப்பட்டுக் கொண்டேயிருந்தது.

மெதுவாக ஒவ்வொரு இஞ்சிகளாய் இறங்கிய கயிறு, திடீரென மிக வேகமாக தொட்டிக்குள் அவனது தலை மூழ்கக் கூடியவாறு இறங்கிப் பின் நிலைத்து நின்றது.

அவனது அந்தரத்தையும் அவஸ்தையையும் அவனது உடல் துடித்தபடி வெளித்தள்ளியது.

இரத்தினகுமாருக்கு மூத்திரம் மணத்தது.

தொங்குபவனின் விழிகள் அந்தச் செந்நீரில் நீந்தி விளையாடுவது போலிருந்தது. தொங்குபவனின் முகம் தன்னைப் போலவே இருந்ததை அவனது மூளையும் மனமும் உணர்ந்து கொண்டது.

அவன் முக்குளிப்பதை இரசிக்கும் ஒருவனும் அங்கிருந்தான். கொம்ரேட் டுச்-சின்னின் * மூளையும் எண்ணமும் அந்த இரசிப்பவனின் சாயலுக்குள் ஒளிந்திருப்பதை இரத்தினகுமாரின் வழிகள் துடித்தபடி கண்டுகொண்டன.

அவனது வாயில் குரூரப் புன்னகையொன்று நெளிந்த நிலையில் உறைந்திருந்தது. உதடுகளின் இடைவெளி, செத்துக் காய்ந்த பாம்பின் உடல்போல் வறண்டிருக்க குரூரம் நஞ்சாய்க் கசிந்து உலர்ந்து கிடந்தது. அவனது கைகளிலும் கால்களிலும் இரத்தம் காய மறுத்த அடத்துடன் வழிந்து சித்திரமாய்ப் படர்ந்து படிந்திருந்தது.

---

* பொல் பொட் ஆட்சியில் கமர் ரூஜ் இயக்கத்தினர் நடத்திய பயங்கரமான கொடுமைகளின்போது டுவால் ஸ்லெங் *(Tuol Sleng)* என்ற சிறையின் வோர்டனாக இருந்தவன். நடந்த கொலைகளில் 17000 கொலைகளுக்கு பொறுப்பானவன்.

பார்வை அவனது முகத்தை நோக்கி நகர்வதற்கிடையில் கிறிஸ்தோபர் இரத்தினகுமாரின் விழிகள் உறக்கத்துள் அமிழ்ந்து போயின.

உயிர்ப்பதற்கு முன் இயேசு எவ்வாறான வேதனைகளை அனுபவித்தாரென போதகர் றொகான் மிகவும் உணர்வுபூர்வமாக கூறிக் கொண்டிருந்தார். கிறிஸ்தோபர் இரத்தினகுமார் அதனை எந்தவித சலனமுமின்றிக் கேட்டுக் கொண்டிருந்தான்.

குறித்த ரிதத்தில் அவனது தோள்கள் குலுக்கிக் கொண்டன.

மிக மூர்க்கமாக ஆணிகளில் அறையப்பட்ட வலியும் இரத்தமும் தன்னைச் சுற்றி உறைந்திருப்பதான எண்ணம் இரத்தினகுமாரின் எண்ணங்களை சூறையாடிக்கொண்டிருந்தது. அவனது விழிகள் அந்த வலிகளுள்ளும் வடியும் இரத்தத்துள்ளும் நுழைந்து நுழைந்து வெளியேறிக் கொண்டிருந்தன.

கொலை செய்யும்போதிருக்கும் கண்களை இரத்தினகுமாருக்கு நன்றாகத் தெரியும். அந்தக் கண்களின் விழிகள் எப்போதும் விரிந்திருக்க வாய்ப்பேயில்லை. புருவங்கள் குவிந்தபடியே எப்போதும் இருக்கும். கிறஸ்தோபர் இரத்தினகுமாரின் மூளையும் மனமும் இந்தக் கண்களை அதன் உறை நிலையில் பாடமாக்கித் தனக்குள்ளேயே வைத்திருந்தன.

குளிரேறிய அன்றிரவு இருள் சற்று அதிகப்படியான ஈரத்துடனிருந்தது. மௌனத்துக்கான இடைவெளிகள் அவனைச் சுற்றி வழமைபோல கொட்டப்பட்டுக் கொண்டேயிருந்தன. நித்திரையும் அவனருகில் சுற்றிவைக்கபட்டிருந்தது. மூளையும் மனமும் அந்தக் குரூரமுறைந்த கண்களைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

திடீரென எழுந்து ஆலயத்துள் ஓடினான். வழமையாக இருக்குமிடத்தில் அமர்ந்து கொண்டான் மூச்சு இலேசாக இழைத்தது. மெதுவாகத் தலையை உயர்த்தி சிலுவையில் தொங்கும் இயேசுவைப் பார்த்தான்.

அவன் பார்த்துக் கொண்டிருந்தபோதே தொங்கவிடப் பட்டிருந்த சிலுவையின் மேற்புற ஆணி கழன்று சிலுவை தலைகீழாக வந்து நின்றது. இப்போது இயேசு தலைகீழாகத் தொங்கினார்.

மீண்டும் வீட்டுக்குள் இரத்தினகுமார் ஓடிவந்து அமர்ந்து கொண்டான். தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டபின் பைபிளை எடுத்துப் புரட்டத் தொடங்கினான். நீராய் சலனப்படும் இயேசு இங்கேயும் அதேபோல் சிலுவையில் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தார்.

உண்மையில் தலைகீழாகத்தான் தொங்கவிட்டிருப்பார்களா?

"ச்சீ... அப்பிடியெண்டா கைகளை பின்னுக்கெல்லோ கட்டி வச்சிருப்பாங்கள்."

விழிகள் இரண்டும் வலிகளும் செம்மையும் கலந்து நெகிழ்ந்த தாள்களுக்குள் முக்குளித்து மீண்டன. மிதந்து வரும் எண்களைச் சேகரமாக்கிக் கொண்டான். மீண்டும் அந்தக் குரூரக் கண்கள் இருளில் தொங்க முற்படும்போது முதலாவது அழைப்பை ஏற்படுத்தினான்.

"நீங்கள் அழைத்த இலக்கத்தை தற்போது அடைய முடியாதுள்ளது..."

மீண்டும் அழைத்தான்.

மீண்டும் மீண்டும் அழைத்தான்.

தொலைபேசி இலக்கம் அழைப்புகளால் தொடர்ந்து முற்றுகையிடப்பட்ட வண்ணம் இருந்தது. இது மீட்சி பெறும் வழியென கிறிஸ்தோபர் இரத்தினகுமாரின் மனம் நம்பத் தொடங்கியிருந்தது.

வெட்டிப்போடப்பட்டிருந்த தென்னை ஓலைகளுக்கு மேல் குந்தியிருந்தபோது இது ஒன்றுமே தெரிந்திருக்கவில்லை. எந்தப் பற்றுமில்லை...

எந்தக் கடவுளுமில்லை....

எந்த இலக்கமுமில்லை...

பயத்துக்கான அழைப்புகள் மட்டுமே அவனைச் சுற்றிச் சேர்ந்து கொண்டிருந்தன.

எனினும் இப்போது இந்தத் தேவைப்படாத அழைப்பை ஏற்படுத்த கிறிஸ்தோபர் இரத்தினகுமார் தொடர்ந்து முயன்று கொண்டிருந்தான். நகமில்லாத சுட்டு விரல்கள் இலக்கங்களை ஏதோவொரு வேகத்துடன் ஓடியோடி அழுத்திக்கொண்டிருந்தன.

எனினும் விரல்களில் காணப்பட்ட பதற்றம் அவனில் காணப்படவில்லை.

இரவு ஒரு பதுங்குகுழி போலவே தனது வாயைப் பிளந்திருந்தது. இரவு எப்போதும் போல பதட்டங்களை விழுங்கிக் கொண்டேயிருந்தது. அழைப்புகள் நிறைய நிறையக் குழி மூடிக்கொண்டது.

இரவின் வெளியில் மரணம் காத்திருப்பதான பிரமையை உள்வாங்கி அவனது உடல் அதனைப் பாவனை செய்து இப்போது வெளிப்படுத்திக்கொண்டிருந்தது.

இரவு - அது பெரும் பதுங்குகுழி

மரணம் - கடந்துவிடமுடியாப் பெருவெளி

அவன் கடந்துவந்த வெளி வர்ணங்களால் பூசப்பட்ட முகட்டைக் கொண்டது. சிவப்பும் கருப்பும் அதிகம் பூசப்பட்ட முகடு. அந்த முகட்டைப்போலவே அவனுக்கான இரவுகளும் துடைக்கப் படாதவை. அவனது ஒவ்வொரு இரவுகளிலும் சிதறியிருக்கும் மூளையும் இரத்தமும் நிணமுமாய் குழந்தைகள் சிதறிக் கிடக்கும் காட்சியும்.... நிறை வெடிலும்.... அள்ளியிறைக்கப் பட்டிருந்தன. இரவின் சுவர்களில் பசியும் பட்டினியுமாக இருந்த மனிதர்களின் ஓவியங்கள் மறைய மறுத்தன.

கிறிஸ்தோபர் இரத்தினகுமார் தன்னந் தனியே இரவுக் குழிக்குள் பதுங்கிக் கொண்டான்.

தூரத்தே எறித்த பார்வையுடன் அந்தத் தொலைபேசி இலக்கங்களைத் தன்னிச்சையாக கைகள் அழுத்த, அவனது மூளையும் மனமும் இருளைத் துளாவித் துளாவி குரூரமாய் உறைந்த அந்தக் கண்களை இழுத்துக்கொள்ள முயற்சித்தன.

இருளைச்சுற்றி இருளுக்குள் அவனது மனமும் மூளையும் நாய்போல இளைக்க இளைக்க ஓடிக்கொண்டேயிருந்தன.

இரத்தினகுமார் தலைகீழாகத் தொங்க, அவனது முகம் மூத்திரத் தொட்டியில் முக்குளித்துக் கிடந்தது. அவன் முக்குளிப்பதை அந்தக் குரூரக் கண்களுக்குச் சொந்தக்காரன் இரசித்துக் கொண்டிருந்தான். அவனது நிழல் அங்கிருந்த சிறு துண்டு ஒளியில் பூதாகரமாய் நீண்டிருந்தது. அந்த நிழலுக்குள் பல உருவங்கள் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தன. அவனது முகத்தில் குரூரப் புன்னகை பாம்பு போல நெளிந்த நிலையில் உறைந்திருக்க, இப்போது அவனது முகம் வெளிச்சத்துக்குள் சிக்குப்பட்டிருப்பதை கிறிஸ்தோபர் இரத்தினகுமார் கண்டுகொண்டான்.

மிக மெலிந்த உயரங்குறைந்த தோற்றத்திலிருந்த அந்தக் குரூரக் கண்ணுக்குரியவனின் முகம் இரத்தினகுமாரின் சாயலை அப்படியே கொண்டிருந்தது.

இப்போது அழைப்பை ஏற்படுத்தும் முயற்சியை கிறிஸ்தோபர் இரத்தினகுமார் கைவிட்டிருந்தான்.

## பாசதீபம்

மிகப்பெரிய ஆலமரம், அதன் நிழல் பரந்து விரிந்து குடை போல் அழகாகவும் அதே நேரம் பயத்தையும் ஊட்டவல்ல ஆலமர நிழலில் மிகச் சிறிய குடில். அந்தக் குடிலில் உள்ளே செல்வதாயின் தவழ்ந்துதான் போகலாம்.

உள்ளே சென்றால் ஒருவர் மட்டுமே படுத்து உறங்கலாம். மழை பெய்யும்போது மட்டும் சிவம் உருண்டு படுப்பார். இத்தனைக்கும் அவன் மிகப் பெரிய பணக்காரன். இவர் சிறுவனாக இருக்கும்போது தந்தையுடன் இணைந்து மா, பலா, வேம்பு, அரசு, ஆல் போன்ற பல பயன்தரு மரங்களை நட்டு இயற்கையுடன் ஒன்றிணைந்து வாழ்ந்த வள்ளல் குடும்பம்.

அப்படிப்பட்ட வள்ளல் இன்று ஏன் இப்படி குடில் வாழ்க்கை வாழ்கின்றார். அவருக்கு என்ன நடந்தது. நாமும் அவர் அருகில் சென்று பார்க்கலாம் வாருங்கள். “அடடே” கனவுலகில் சஞ்சரிக்கின்றார். நாமும் அவர் கனவு எப்படிப் போகுது என்பதை அறிவோம்.

அந்தக் கனவில் அவர் மகன் பல்லவன் பற்றித் தான் இருந்தது. மகன் பிறந்து அவனை அரசகுமாரனாக நினைத்து அவனுக்கு பல்லவன் என்று பெயர் வைத்து அவன் பாதம் பூமியில் படாதவாறு வளர்த்தார். அவன் பாடசாலை செல்லும் வயதை அடைந்ததும் அவன் தாயார் படத்தின் முன் நின்று வணங்கி ஆசீர்வாதம் வேண்டும்படி செய்து மகனுக்குப் பல அறிவுரைகள் கூறினார்.

பல்லவா உன் அன்னை இவ்வுலகை விட்டு போகும்போது அவரின் ஆசை என்ன தெரியுமா? நீ படித்துப் பட்டம் பெற்று ஒரு

பட்டதாரியாக வலம்வர வேண்டும் என்பது தான் உன் அன்னையின் ஆசை. அவள் இப்போது இறைவனிடம் சென்றாலும் எங்களுடனே வாழ்கின்றாள். அவளுடைய கனவையும் என்னுடைய ஆசையையும் நீ தான் நிறைவேற்ற வேண்டும். மகனைக் கையில் பிடித்த வண்ணம் அவனுக்கு என்று புதிதாக வேண்டப்பட்ட ஆட்டோவில் அமர்த்தி ஓட்டுனரிடம் மகனை மிகவும் கவனமாகக் கொண்டுசெல்லும்படி அறிவுரைகள் கூறினார்.

இப்படியே பத்து வருடங்கள் ஓடி மறைந்தன. இப்போது 15 வயதில் அவன் தனக்கு ஆட்டோ வாகனம் வேண்டாம். கார் வேண்டும் என்று கேட்டான். மறுநாளே புதிய கார் ஒன்று அவர்கள் வீட்டு வாசலில் நின்றது. அதற்கு ஓட்டுனர் தெரிவு நடக்கும்போது பழைய ஆட்டோ ஓட்டுனருக்கு ஆட்டோவைச் சொந்தமாக எழுதி அவருக்குக் கொடுக்கின்றார். கார் ஓட்டுனரைத் தெரிவு செய்யும் போது பொறுப்பு வாய்ந்த நடுத்தர வயது உடைய அனுபவம் நிறைந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்தார். அவருக்குத் தங்குவதற்கு ஓர் அறையும் கொடுத்து பல்லவனுக்கு வேண்டப்பட்ட நேரத்தில் ஏற்றி இறக்கும் வாய்ப்பைக் கொடுத்தார். இதற்காக அவருக்கு 40,000 ரூபா மாதம் ஒன்றுக்கு சம்பளம் கொடுத்து வைத்திருந்தார். அப்படி ஒரு செல்ல மகன் பல்லவன்.

வருடங்கள் ஓடிக்கொண்டு இருக்கின்றது. இப்போது பல்லவன் வயது 20. இந்த வருடம் பிறந்தநாளை மிகச் சிறப்பாக கொண்டாட சிவம் ஆயத்தம் செய்தான். இதைப் பயன்படுத்தி தனக்குப் புதிய கார் வேண்டும் என்று கேட்க, பிறந்த நாள் பரிசாகத் தருவதாக வாக்குறுதி கொடுத்தார். இப்போது ஓட்டுனர் இல்லை பல்லவனே கார் ஓட்டும் வல்லமையைப் பெற்றுக் கொண்டிருந்தான். இப்படியே அவன் கேட்டது அத்தனையும் செய்தார்.

அவனும் படித்து பட்டதாரியாகிவிட்டான். இப்போது வயது 26 ஆகிவிட்டது. தந்தையின் ஒரே செல்ல மகன் என்ற காரணத்தால் தன்னுடைய வாழ்க்கைத் துணையையும் தேர்ந்தெடுத்தான். பின்னரே தந்தையிடம் கூறினான். அதற்கு அவர் மறுக்காமல் சம்மதம் தெரிவித்தார். விரைவாக திருமணத்தையும் வெகு சிறப்பாக நடத்தி

வைத்தார். அவன் விரும்பிய வாழ்க்கை அவனுக்குக் கிடைத்து விட்டதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியில் தந்தையின் சகல பொறுப்புகளையும் அவனே கவனித்தான்.

அவன் திறமையைக் கண்ட தந்தை அவனைப் பாராட்டி அவன் பெயரில் சொத்துக்கள் அனைத்தையும் எழுதிக் கொடுத்துவிட்டார். சொத்துகள், உடமைகள் அனைத்தும் கைக்கு வந்ததும் தன்னுடைய சுய உருவத்தைக் காட்ட ஆரம்பித்துவிட்டாள் மருமகள். அவர்மீது பாசமுள்ளது போல் பாசாங்கு செய்து சிவத்தை மருமகள் வீட்டில் அடக்கிவிட்டாள். சின்னச் சின்ன வேலைக்காக கடைக்கு போவது, மின்சார பில், கடிதங்கள் போடுவதற்கு தபாலகம் போவது போன்ற தேவைகளை மருமகள் (சுந்தரி) கொடுப்பாள். அவரும் அதன்படியே செய்து பொறுமையுடன் வீட்டினுள் இருந்தார்.

சுந்தரத்தை வீட்டை விட்டு துரத்துவதற்கு பல வகையாக யோசித்து மருமகள் நல்லதொரு முடிவெடுத்தாள். வெள்ளைப் பேப்பர் கொஞ்சம் எடுத்து ஆயிரம் ரூபா நாணயத்தாள் அளவில் துண்டுகளை வெட்டி எடுத்தாள். ஓர் இடத்தில் மறைத்து வைத்தாள். நாட்கள் நகர்ந்தது.

அவள் எதிர்பார்த்த நாளும் வந்தது. கணவன் தொழிலாளர் களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு ஒரு பெட்டியில் 2 லட்சம் ரூபா பணத்தாள்களை அடுக்கி வைத்துவிட்டு மனைவியை அழைக்கின்றான். மனைவி வரவில்லை முன் மண்டபத்துக்கு வந்து மனைவியின் பெயரைச் சொல்லி அழைக்கின்றான். மனைவி முகத்தை முறைத்து கொண்டு வருகின்றாள். என்ன விடயம் என்று வினாவுகின்றாள்.

பல்லவன் தன்னுடைய பிறந்தநாள் செலவுக்கு 2 லட்சம் பணம் தேவை என கேட்கின்றான். சுந்தரி அதற்கு இன்னும் காலங்கள் இருக்கின்றது. ஒரு கிழமையின் பின்னர் தருவதாக கூறுகின்றாள். இருவருக்கும் இடையே தர்க்கம் ஏற்படுகின்றது. ஆத்திரத்துடன் பணப் பெட்டியை மறந்து காரில் ஏறிச் சென்றுவிடுகின்றான். பல்லவன் அங்கு போனதும் தொழிலாளரின் சம்பளப் பணத்தை

மறந்து வீட்டில் விட்டது ஞாபகம் வருகின்றது. உடனே தொலைபேசி மூலம் சுந்தரிக்குத் தெரிவித்தான். தந்தையிடம் கொடுத்துவிடும்படி கூறினான்.

இதுதான் தக்க நேரம் என்று எண்ணிய சுந்தரி பணப் பெட்டியைத் திறந்து எத்தனை கட்டுகளை எண்ணி எடுத்தாளோ அதே போன்று 8 கட்டு வெள்ளைப் பேப்பர்களைக் கொண்ட கட்டுகளில் கீழும் மேலுமாக ஆயிரம் ரூபா தாள் வைத்து றபர் நூலினால் கட்டினாள். உடனே பாசத்துடன் மாமனிடம் பணத்தை எண்ணி காட்டி 8 கட்டுகளையும் காண்பித்து 2 லட்சம் ரூபா என பெட்டியை திறந்து காட்டி கணவனிடம் கொடுத்துவிட்டு வரும்படி ஒப்படைக்கின்றாள்.

தனக்கு தலைவலி என்று மாத்திரை வாங்க மருந்தகம் செல்வதாகச் சொல்லிவிட்டு செல்கின்றாள். சிவமோ பணப் பெட்டியை மூடிவிட்டு சட்டை அணிவதற்காக உள்ளே சென்று சட்டை அணிந்து கொண்டு பணப் பெட்டியை எடுத்துக்கொண்டு மகனிடம் போகின்றார்.

இதை வீதியில் கடை அருகில் மறைந்து இருந்து பார்த்த சுந்தரியும் வீடு திரும்புகின்றாள். உடனே தன் காரியத்தில் இறங்கி மீதிப் பணமான 184000 ரூபாவை கையில் எடுக்கின்றாள். சுற்றுமுற்றும் பார்த்த வண்ணம் வேலைக்காரி என்ன செய்கின்றாள் என்று நோட்டம் பார்க்கின்றாள். அவள் கிணற்றடியில் உடை கழுவுவதைக் கண்ட சுந்தரி அவள் பெட்டியைத் திறந்து மிகுதிப் பணத்தாள்களை அவளுடைய துணிகளுக்குள் மறைத்து வைக்கின்றாள். தன் அறைக்கு வருகின்றாள். தலைவலி போல் படுத்து உறங்குகின்றாள்.

சிறிது நேரத்தின் பின்பு வேகமாக வந்து வீட்டு வாசலின் முன் நின்றது கார். காரில் இருந்து இறங்கிவந்த பல்லவனும் தந்தையும் வந்த வேகத்தில் சுந்தரியிடம் விசாரிக்கின்றார்கள். பல்லவன் விசாரித்தும் மனைவி ஒரே பதிலையே சொல்லுகின்றாள். தான் 8 கட்டு பணத்தையும் எண்ணிக் கொடுத்ததாகவும் தன்மீது சந்தேகம் இருந்தால் தனது அறையை சோதனை செய்யும்படியும் கூறுகின்றாள்.

ஏற்கனவே தன் மனைவி மீது சந்தேகம் கொண்ட பல்லவன் அறையைச் சோதனை இடுகின்றான். அங்கே எதுவும் கிடைக்காத கோபத்தில் தன் தந்தை மீது சந்தேகப்படுகின்றான். உடனே சிவம் தன் அறையை சோதனையிடுமாறு மகனிடம் கூற மகன் தயங்கி நிற்கின்றான். இதுதான் சமயம் என்று சுந்தரி மாமனின் அறையில் நுழைந்து சோதனை இடுகின்றாள்.

அங்கு எதுவும் கிடைக்காத சுந்தரி வீடு முழுவதும் சோதனை இடும்படி சொல்லுகின்றாள். பின்பு எல்லோரும் இணைந்து தேடுகின்றனர். இறுதியாக வேலைக்காரிக்கு ஒதுக்கப்பட்ட அறையினுள் தேடும்போது உடுப்பு பெட்டியில் அடியில் பணக்கட்டுகளை கண்ட பல்லவன் உடனே மனைவியைப் பார்த்து இப் பணம் எப்படி இங்கு வந்தது என்று விசாரணை செய்கின்றான். சத்தியமாகத் தனக்குத் தெரியாது என்றும் வேலைக்காரியைக் கேட்கும் வண்ணம் பேசுகின்றாள். அதன்படி வேலைக்காரி அழைக்கப்படுகின்றாள். அழுது புலம்பி பல சத்தியம் செய்து வேதனைப்படுகின்றாள். உடனே சுந்தரி "பணத்தை மாமா கொடுத்தாரா அல்லது நீ களவெடுத்தாயா" என்று கன்னத்தில் ஓங்கி தன் கையால் அடித்தாள்.

அவளோ ஐயா கொடுக்கவில்லை. நானும் எடுக்கவில்லை எப்படி வந்தது என்று தெரியவில்லை. கடவுளே என்று கதறினாள். இந்த நேரம் சிவம் குறுக்கிட்டு "நிறுத்து சுந்தரி! நானேன் கொடுக்கவேண்டும்" என்று கேட்க உடனே மாமனாரை எதிர்த்துப் பேசுகின்றாள். "உங்களிடம் முழுப் பணத்தையும் எண்ணித் தந்துவிட்டுத் தானே வெளியில் போனேன். நீங்கள்தான் இறுதியாகப் பணத்தைக் கொண்டு போனீர்கள். எனக்கு தெரியாது" உடனே பல்லவன் "அப்பா இதுவெல்லாம் என்ன?" என்று விசாரிக்க தந்தை மிகுந்த கோபம் அடைகின்றார்.

எந்தக் கோணத்தில் நீங்கள் இந்த மாதிரி கேள்வியைக் கேட்கின்றீர்கள். சுந்தரி சொல்லும் வார்த்தை அவர் நெஞ்சைச் சுட்டது.

"கைப்புண்ணுக்கு கண்ணாடி எதற்கு மாமா. இந்த வயதிலும் இளம் பெண்கள் சீ சீ நினைத்தாலே வெக்கமாக இருக்கின்றது" சிவம் (உரத்த குரலில்) சுந்தரி! பல்லவன் உடனே போதும் அப்பா நிறுத்துங்கள் என்று சொன்னதும் சிவத்துக்கு தலைக்கு ஏறியது. உடனே தனது அறைக்குச் சென்று தனது உடைகளை எடுத்துக் கொண்டு வெளியில் வருகின்றார். எங்கிருந்தாலும் நீங்கள் இருவரும் நல்லாய் இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு சிவம் வெளியில் போகின்றார்.

தான் நட்ட ஆலமரத்தின் கீழ் ஒரு சிறிய குடிலை அமைத்து அன்றுதொட்டு இன்றுவரை அதில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார். கோயில் பிரசாதமும் பழங்களும் தான் உணவு. அதுவும் மூன்று வேளையும் உணவு கிடைக்கும். சில நாளில் பல்லவனின் தந்தையிடம் வேலை பார்த்த வேலப்பன் இவ்விடம் வந்தால் இவருக்கு ஏதாவது உதவி செய்வான்.

அன்று கோவிலில் விசேட பூசை நடக்கவிருப்பதால் மக்கள் பலர் கூடியிருந்தார்கள். அதில் சிவம் கண்ணை மூடிக் கொண்டு சிந்தித்துக் கொண்டு இருக்கிறார். அந்த நேரம் இருவர் பேசுவது அவர் காது களுக்கு மென்மையாகக் கேட்கின்றது. "அதோ! அந்த சிவம் ஐயா எவ்வளவு சிறப்பாக வாழ்ந்தவர். இன்று அவரின் நிலைமையைப் பாருங்கள். சாப்பாட்டுக்கு பிள்ளையார் கோவில் பிரசாதம் வேண்டித்தான் சாப்பிடுகின்றார். அந்தக் காலத்தில் பசி என்று வந்தவர்க்கு உணவு உண்ணக்கொடுத்த வள்ளல் தனது உணவுக்கே கையேந்தும் நிலை". அருகில் இருந்த முதியவர் ஒருவர் ஏன் இப்படி வந்தது என வினாவுகின்றார்.

அதற்கு அவர் பதில் பேசத் தொடங்குகின்றார். "இவரின் மகன் ஒருத்தன் இருக்கின்றான். படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரி. அவனுக்கு பாவ புண்ணியம், நல்லது கெட்டது எதுவும் தெரியாது. மனைவி சொல்லே மந்திரம் என வாழ்ந்தான். பெற்ற தந்தையை இழி சொல்லிற்கு ஆளாக்கி வீட்டை விட்டுத் துரத்தினான். அதன்பின் இவர் இவ் ஆல மரத்தடியைத் தனது வாழ்விடமாக எண்ணி வாழ்கின்றார். இன்று இந்த சிவம் ஐயாவின் மகனுக்கும் மார்பு அடைப்பு நோய்.

"அரசன் அன்று அறுத்தால் தெய்வம் நின்று அறுப்பான்" இதைக் கேட்டுக்கொண்டு படுத்திருந்த சிவம் மெல்ல எழுந்து ஆலய வாசல் நோக்கி சென்று கொண்டிருக்கின்றார். அதைப் பார்த்த இந்த இருவரில் ஒருவர் "அடா பாவமாய் இருக்குது. எழுந்து நடக்கக்கூட வலுவில்லாத ஒருவரை இப்படியா பிள்ளைகள் தண்டிக்க வேண்டும். தந்தையின் சொத்தை எல்லாம் சுரண்டி அவர்கள் கண்ட பலன் என்ன?" இதேநேரம் ஆலய வாசலில் சிவத்தின் கதறல் கேட்கின்றது. "விநாயகப் பெருமானே என்னை ஏன் இப்படிச் சோதிக்கின்றாய். சுந்தரிக்குப் புற்றுநோயையும் பல்லவனுக்கு மார்பு அடைப்பு நோயையும் ஏன் கொடுத்தாய்? இறைவா! அவர்கள் எங்கிருந்தாலும் நல்லாயிருக்க வேண்டும் என்று தானே நான் இங்கு வந்தேன். அந்தப் பொல்லாத நோயை எனக்குக் கொடு. அவர்களைக் காப்பாத்து" என்று கதறிக் கதறி அழுதுகொண்டு இருக்கின்றார்.

இந்த நேரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சுந்தரி பல்லவனிடம் நடந்த உண்மைகளைக் கூறித் தனக்கு கடவுள் சரியான தண்டனை கொடுத்துவிட்டார் என்று சொல்லுகின்றாள். பல்லவன் மிகுந்த கவலையுடன் மனைவியைப் பார்க்க சுந்தரியோ கலங்கிய விழிகளுடன் பல்லவனிடம் ஓர் வரம் கேட்கின்றாள். மாமா (சிவத்தை) மீண்டும் தங்கள் குடும்பத்தில் ஒருவராக இணைக்க வேண்டும் என்பதுதான் அந்த வரம். இந்த வார்த்தையைக் கேட்ட பல்லவன் தந்தையைத் தேடிச் செல்கின்றான்.

ஆனால் இங்கு கோயில் வாசலில் கதறி அழுத சிவம் மயக்கமுற்று விழும் நேரம் இருவர் தாங்கிப் பிடிக்கின்றார்கள். மெதுவாக அவரைத் தூக்கி வந்து ஆலமர நிழலில் படுத்துகின்றார்கள். யாரோ ஒருவர் பேசுகின்றார் தந்தை செய்த புண்ணியம் மகனுக்கு.

ஆலமரத்தின் கீழ் நின்ற மகன் கோயிலில் கூடி நின்ற எல்லோரையும் விலக்கி, தந்தையின் முகத்தில் நீர் தெளிக்கின்றான். எந்தவொரு அசைவும் தென்படவில்லை. அந்த நேரம் ஒருவர் நாடி பிடித்துப் பார்க்கின்றார்.

கவலைப்படாதீர்கள் அவர் மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்றுவிட்டார். அதே நேரம் பல்லவன் "அப்பா என்னை மன்னித்துவிடுங்கள். இந்தப் பாவியை மன்னித்துவிடுங்கள். சுந்தரி உங்களை கூட்டிற்று வரட்டாம். எழுந்து இருங்க அப்பா எழுந்து இருங்க அப்பா". எந்தப் பதிலும் வராத நிலையில் பல்லவன் சுற்றும் முற்றும் கூட்டத்தாரைப் பார்த்தான். அதில் இருந்த ஒரு பெரியவர் பல்லவா உன் அப்பா இவ்வுலகை விட்டுப் போய் இப்போது 15 நிமிடம் ஆகின்றது. இதைக் கேட்டதும் அப்பா என்று அவர் மார்பின்மீது புரண்டுபுரண்டு அழுகின்றான். திடீரென மகன் குரலும் நின்று போகுது.

அக் கூட்டத்தின் இடையே ஓர் அமைதி. திரும்பவும் ஒருவர் பல்லவனின் நாடியைப் பிடித்துப் பார்க்கின்றார். முதியவர் ஒருவர் பேசுகின்றார். பாசம் உள்ள தந்தையும் மகனும் ஒரே நாளில் இவ்வுலகை விட்டுப் போய்விட்டார்கள். யாரோ சொல்லி இந்த நேரம் பொலிசும் வருகின்றது. சடலங்கள் அப்புறப்படுத்தப் படுகின்றது.

**நம்மை ஒருவருக்குப்**
**பிடிக்கவில்லையென்றால்**
**நாம் காட்டும் அன்புகூட**
**அவருக்குத் தொல்லைதான்.**

*தம்பிராஜா சிறீஸ்கந்தராஜா*

## வாசகன்

அன்றாடம் அதிகாலை கோழி கூவும்போது கண்விழித்து தன் கடமையைத் தொடங்குவது மருதம்மாவுக்கு பழக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. அன்றும் வழமைபோல் எழுந்து தனது பணியைத் தொடங்கிவிட்டாள். அப்பம், தோசை பலகாரம் சுட்டுக் கடைகளுக்கு கொடுப்பது அவளது தொழில். அதைச் செய்துதான் தனது வயிற்றையும் பார்த்து தனது இரண்டு பிள்ளைகளையும் வளர்க்க வேண்டிய நிலை.

ஆண்டவன் அப் பொறுப்பை அவளுக்குக் கொடுத்துவிட்டுக் கணவனைத் தன்னிடத்தே எடுத்துவிட்டார். கணவன் இறந்தபோது பிள்ளைகளான மதுராவிற்கு 10 வயது மதுசனுக்கு 5 வயது. கணவனை இழந்த நிலையில் ஓரிரு மாதம் உறவினரிடம் உதவி பெற்றபோது அவள்பட்ட அவலம்; அவர்களது செருக்குப் பேச்சு என்பன அவளை உறுதிகொள்ள வைத்தது.

எப்படியாவது எவ்வளவு கஸ்ரப்பட்டாவது பிள்ளைகளைப் படிப்பித்து சமூகத்தில் நல்ல பிள்ளைகள் எனப் பேரெடுக்க வைப்பது தான் தன் கணவனுக்குத் தான் செய்யும் கைமாறும் கடமையும் என எண்ணினாள். அது மட்டுமல்ல; கணவன் இல்லாத நிலையில் தன்னைப் பார்த்து எள்ளிநகையாடியவர்களுக்கும் ஏதோ ஏதோ எல்லாம் சொன்னவர்களுக்கும் எடுத்துக்காட்டாகவும் உயர்ச்சியாகவும் ஒழுக்கமாகவும் வாழவேண்டும் என எண்ணி அப்படியே வாழ்ந்தும்வந்தாள்.

அவளது நேர்மை, அயராத உழைப்பு மூலம் பெண் பிள்ளையை கரைசேர்த்து நல்ல இடத்தில் கொடுத்துவிட்டு தன் மகனுடன்

வாழ்ந்துவந்தாள். அன்றும் வழமைபோல எழுந்து தனது வேலைகளைத் தொடங்குவதற்கு முன், மதுசன் விடியப் படிக்க வேண்டும் எழுப்பிவிடம்மா என்றது ஞாபகம்வர அவனை எழுப்பினாள்.

"மணிக்கூட்டில் நேரம் என்னண்டு பாரம்மா" அது ஓடயில்லைத் தம்பி. அதுக்குப் பற்றி போடவேணும். பொறு நான் விடிவெள்ளி காலிச்சிட்டுதோ எண்டு பாக்கிறன். காலிச்சிட்டுது சரியாய் நாலு மணி தம்பி. என்ன பேந்தும் இறுக்கி போத்துக் கொண்டு எண்டு சொல்ல நினைத்தவள் அவனின் பரிதாப நிலை கண்டு பாவம் படிபடி எண்டு படிச்சிட்டு இரண்டு மணிக்குப் படுத்தால் என்னண்டுதான் எழும்புறது என மனசுக்குள் நினைத்துக் கொண்டாள்.

இருந்தாலும் மெல்ல மகனை எழுப்பினாள். "எழும்பு மோனை" "ஓ எழும்பிவிட்டன் அம்மா. இண்டைக்கு மாஸ்ரருக்கு புத்தகக் காசு முந்நூறு கட்டாயம் குடுக்கவேணும்". "இண்டைக்கு இல்லைமோன நாளைக்கு குடுப்பம்". ஓ இண்டைக்கும் பிள்ளையாற்றை கலியாணமோ எண்டு அவ்வளவு பெடியளுக்கையும் அவமானப் படுத்துறது மட்டுமல்ல கட்டியும் அடிப்பரம்மா.

அந்த வார்த்தை அவள் இதயத்தை ஆயிரம் ஈட்டி கொண்டு தாக்கியது போன்று அதிர்ந்து போனாள். சில நிமிட மௌனத்தின்பின் கண்ணிரண்டிலும் வழிந்த நீர் முகத்தை நனைத்தது கை விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் தெரிந்தது.

இதைக் கண்டு சகிக்காத பிஞ்சு மனம் தன்னையே நொந்து கொண்டு படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணி ஏதோ எல்லாம் மனம் அசைபோட சீ என்ன படிப்பு, மற்றப் பெடியள் போல ரியூசனுக்குப் போகக்கூட கையில அம்மாவிடம் காசில்லை.

புது வாத்தியார் குடும்ப நிலை தெரிந்துதான் சும்மா காசு தரவேண்டாம் வா மதுசன் நான் பாடம் சொல்லித்தல்லாம் எண்டபோது வேண்டாம் அது வீண் பிரச்சனை. அது அம்மாவின் ஒழுக்கத்திற்கு, நடத்தைக்கு நாணயக் கயிறுபூட்டி அதில சவாரி

செய்யும் இந்தப் பாழாய்ப்போன சமுதாயம் என்று சமுதாயத்தை சபித்தவனாக அண்டைக்கு அம்மா "உந்த வாசிகசாலையிலை உன்ரை பாடப்புத்தகம் ஏதும் இருந்தால் தலைவரட்டை இலவசமாக வேண்டிப்படி" என்று சொன்ன ஆலோசனை அவனுக்குப் புது வழியைக் காட்டியது.

அன்று தொடக்கம் பத்திரிகையில வாற புதிய பாடத்திட்டம், அந்த வருட பாடத்திற்கு சரியாய் அமைஞ்சதால வகுப்பில ஆறாம் நிலையிலை இருந்தவனை இரண்டாம் நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. எப்படியாவது இப்பிடியே படிச்சு இந்தமுறை ஓ.எல் எழுதி முதல்நிலைக்கு வருவன் என்ற என்ரை இலட்சியமும் அம்மாவின் இலட்சியமும் நிச்சயம் நிறைவேறும்.

எங்கையாவது ஒரு வேலைக்குப் போகலாம் என்று மனம் அசைபோட அம்மா அதட்டினாள். "நான் எதுக்கும் அக்காவிட்ட போய் வாறன்". "வேண்டாம் அம்மா நான் படிக்கப் போறன். நீங்கள் பலகாரத்தைக் கொண்டு போங்கோ". "போய் என்னடா அப்பு செய்ய. கடைக்காரன் மாசம் முடியத்தானே காசு தருவான். எதுக்கும் முதலாளிய கேட்டுப் பாப்பம்" என வெளிக்கிட படலையைத் திறந்து மகள் மதுரா வந்தாள்.

"அக்கா வாறா நீ கதை அம்மா.", "தம்பி! டேய் உனக்குத் தெரியாதே உந்த வாசிகசாலையை ஆரோ கொழுத்திப் போட்டாங்களாம்" என்றாள் மதுரா. "சீ, நீ பாத்தனியே அட கடவுளே! அக்கா எல்லாம் எரிஞ்சு போச்சோ". "டேய் நான் பாத்தனான். அப்பிடியே எரிஞ்சு சாம்பலாய்க் கிடக்கு". அவன் மலை ஒண்டு இடிஞ்சு தலையிலை விழுந்த மாதிரி அப்பிடியே உறைந்து போனான்.

எவனெவனோ பெரும் தீப்பந்தங்களால அவனின் எதிர் காலத்தை இழுத்து இழுத்து கொழுத்தின மாதிரி அகோர உணர்வில் தத்தளித்தான். அவன் படித்தும் கேட்டும் அறிந்திருக்கிறான் யாழ். பொது நூலகத்தை துரோகிகள் தீயிட்டு கொழுத்தியதையும் அறிவுசார் பொக்கிசங்கள் புத்தகங்கள் அழிந்து சாம்பலாகியதையும்.

ஒரு இனத்தின் வரலாற்று ஆவணங்கள் இல்லாது அழிக்கப் பட்டது கூட அவனுக்கு பெரும் தாக்கத்தை கொடுக்கவில்லை. ஆனால் இது விபரிக்க முடியாத, வெளிக்கொண்டு வர முடியாத, எதுவும் பேசமுடியாத பிரஞ்ஞை பிடித்தவனாக்கி விட்டது. வாசிகசாலைப் பெடியள் பெரிசா அடிப்பம் முறிப்பம் என ஆர்ப்பரித்துக் கொதித்தனர்.

சட்டம், பொலிஸ் விட்டிடுமோ, விடுவமோ என்ற ஆவேசக் குரல்கள் எல்லா முனைப்பிலும் தேடுதல்கள். இனம் தெரியாததோர் பதற்றம். பத்திரிகையில் முன் பக்கச் செய்தி யாழில் இரண்டாவது நூல் நிலையம் எரிப்பு. இணையத்தளங்களில் எரியுண்ட படத்தோடு செய்தி வெளியாகின. புத்திஜீவிகள் சமூக ஆர்வலர்கள் கண்டனம். ஆறு ஏழு நாட்களில் ஆரவாரம் அடங்கிப்போனது.

பாவம்! பத்திரிகைச் செய்தி பார்த்து படிக்க நினைத்தவனின் எதிர்காலக் கனவை எவர் அறிவர். அது அவனுள்ளே அஸ்தமனமாகிட இரண்டொரு நாளில் நலன் விரும்பிகள், ஊர்ப் பெரியவர்கள் சேர்ந்து சிறு கொட்டில் அமைத்து நிர்வாகம் கூடி பத்திரிகை, புத்தகம் போட்டு துரோகிகட்கு சவால் விடுவது போல் புத்தொளி பிறந்தது. கிராமத்திற்கு மட்டுமல்ல மதுசனின் படிப்புக்கும் புது அத்தியாயம் எழுதப்பட்டது.

வாசிகசாலையடிக்குப் போகப் போனவனை தாய் மறித்து "தம்பி! நாளைக்கு சோதினை எண்டனி. இந்தக் காசு ஐநூறையும் கோயில் உண்டியல்லை போட்டிட்டு வடிவாய் கும்பிட்டிட்டு வா. அம்மா நேர்த்தி வைச்சனான்" அவள் சொன்னாள். "அம்மா கோயில் எல்லாம் உண்மைதான் இல்லை எண்டு சொல்ல இல்லை. எங்களுக்கெல்லாம் உந்த வாசிகசாலைதான் கோயிலம்மா. அது அறிவாலயம். உந்த ஐநூறு ரூபாவோட என்னட்டைக் கிடக்கிற காசையும் சேர்த்து இந்த மாதப் பேப்பருக்குக் காசு குடுக்கப்போறன்.

இன்னுமொண்டம்மா, அநாவசியமாய் உவ்வளவு வெளி நாட்டுக் காசை செலவழிச்சு சும்மாய் அளவுக்கதிகமா சோத்தை அன்னதானம் எண்ட பேரில அவிச்சு காகத்துக்கும் குருவிக்கும் ஆடு

மாட்டுக்கும் போட்டு மிச்சத்தை ஒண்டும் செய்யமுடியாமல் வெட்டித் தாக்குதுகளே. ஏன் தங்கட விலாசத்துக்கு, ஒரு மரத்துப் போன போலிக் கௌரவத்துக்கு அந்த காசை, கட்டிக் குறையில ஒப்பேறாமல் கிடக்கும் உந்த வாசிகசாலைக்குக் குடுத்தால் எல்லாம் கட்டி முடியும். முடிஞ்சால் எவனாலையும் சிம்பிளாய் கொழுத்த முடியாது. கல்வி அறிவை எவராலும் அழிக்கவும் முடியாது.

அதுமட்டுமல்ல; ஒவ்வொரு கிராமத்திலும் வாசிகசாலை இருந்தால் என்னைப் போல வசதியில்லாத பிள்ளை படித்து ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கி நல்ல பிரஜையாக நாட்டைப் பாதுகாக்கலாம்" என மூச்சுவிடாது கூற, மருதம்மா தன் மகனின் அறிவாற்றலையும் சமூகப்பற்றையும் தனது வளர்ப்பின் புனிதத் தன்மையையும் கண்டு பூரித்துப் போய் தன் மகனை அன்போடு அணைத்து முத்தமிட்டாள்.

எல்லா நண்பர்களும் துரோகிகளல்ல;
எல்லாத் துரோகிகளும் ஒரு
காலத்தில் நண்பர்களாய்
இருந்தவர்கள் என்பதே உண்மை.



# சிவனேஸ்வரி றொபேட்கெனடி

## "நக்கீரன் மகள்"

[illegible] பொற்பதி என்னும் கிராமத்தில் பிறந்த இவர் பாடசாலைக்காலம் முதல் கலைத் துறைகளில் ஆர்வம் உள்ளவர். தற்போது டென்மார்கில் ஐரோப்பிய ஊடகங்களான IBC.ABC.TRT.TTN. களத்தில், ஈழமுரசு போன்றவற்றிலும், அமுது என்னும் சிற்றிதழிலும் எழுதிவருகின்றார். 2016இல் "அற்றைத்திங்கள்" என்னும் கவிதை நூலினை கொழும்பு தமிழ் சங்கத்தில் வெளியிட்டுள்ளார்.

# வேப்பமரம்

இன்று ஆதவன் வருவதும் போவதுமாக ஒளித்து விளையாடிக் கொண்டிருந்தான். இடையிடையே மழைத்துளிகளும் பூமியைத் தொட்டுத்தொட்டுப் போயின.

செல்வி விடுமுறை முடித்து வந்து இரு வாரமாகியும் அவளின் உடலும் உள்ளமும் வழமைக்குத் திரும்பமுடியாமல் போராடுகிறது. மனது மிகவும் பாரமாகவும் யாருடனாவது பேசவேண்டும் போலிருந்தாலும் இந்த விடயத்தை யாருடன் பேசுவதென திண்டாடிக் கொண்டிருக்கிறாள்.

"செல்வி.... செல்வி இஞ்ச வாடா செல்லம் அந்த வேப்பங்குச்சி யால் பல்லு விளக்கு.... பல்லுக்கு நல்லது" என்று அம்மா அழைத்தாள்.

"ஐயோ அது கைக்குமம்மா.... அது வயது போனாக்கள் தான் தீட்டுவினம் எனக்கு வேண்டாம்" செல்வி அம்மா பக்கமே வராது ஓடிப்போய் இனிக்கும் பற்பொடியைப் போட்டு பற்களை தீட்டிக் கொண்டிருக்க பின்னாலே வந்து அம்மா கட்டிப்பிடித்து வேப்பங் குச்சியால் செல்விக்கு பல்லுத் தீட்டினாள். "சீ.... சீ கைக்குது விடம்மா" என்று கத்தியவாறு கண்விழித்தாள்.

மணிக்கூட்டைப் பார்த்தாள் ஐயோ கடவுளே.... இந்தக் கனவு வராவிட்டால் அஸ்வினை ஸ்கூலுக்கு விட்டிருக்கேலாது....

அம்மாதான் கனவில் வந்து எழுப்பினாவோ என முணுமுணுத்தாள். இரவு நித்திரையின்றி விழித்திருப்பதால் காலையில் எழும்பச் சிரமப்பட்டாள்.

செல்வி திருமணம் முடிந்து ஆறு மாதத்திலேயே அவளது கணவன் சங்கர் டென்மார்க் போய்விட்டான். ஒரு வருடத்திற்குப் பின் செல்வியும் சங்கரிடம் வந்தாள். ஆரம்பத்தில் புலம்பெயர் வாழ்க்கை அவளுக்கு கசந்தாலும் சங்கரின் அன்பாலும் அரவணைப்பாலும் காலப்போக்கில் பிடித்துக்கொண்டது. ஊரில் உள்ள இருபக்க உறவினர்களுக்காகவும் கடுமையாக உழைத்தனர். ஊரில் உள்ள உறவுகள் பலரின் திருமணங்களும் வெளிநாட்டு வருகையும் செல்வியினதும் சங்கரினதும் உழைப்பில் நிறைவேறின.

மூன்று வருடத்தில் அவர்களுக்கு மகள் இசா பிறந்தாள். செல்வி தன் மகளை ஆறே மாதத்தில் பராமரிக்கும் இடத்தில் சேர்த்துவிட்டு மீண்டும் வேலைக்குப் போனாள்.

இசாவுக்கு ஐந்து வயதாகியும் அவளுக்கு ஒரு சகோதரத்தைப் பற்றி நினைக்கவே முடியாமல் அவர்கள் பொறுப்புக்கள் அவர்களைக் கட்டிப்போட்டிருந்தன. இப்படியே காலம் நகர்ந்தது. இத்தனை வேலைப்பளுவிலும் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு அன்போடு இருந்தனர். வயிற்றில் இரண்டாவது குழந்தை வளர்வதை அறிந்து சங்கர் மகிழ்ந்தான். செல்வியை வேலையிலிருந்து கொஞ்ச நாளைக்கு லீவெடுக்கச் சொல்லிவிட்டுக் கடுமையாக உழைத்தான். கடுங்காற்றுடன் மழை கொட்டிய நாளொன்றில் இரவு வேலைக்குப் போய் வீடு வரும் வழியில் காலன் சங்கர் உயிரை பறித்துவிட்டான். செல்விக்கு உலகமே இருண்டு கிடந்தது. வாழ்க்கையே வேண்டாமென்று வெறுத்துப்போனது. கடவுளைத் திட்டினாள். தனிமை வாட்டியது. உயிரான தன் குழந்தைகளை எண்ணினாள்.

இரண்டாவது குழந்தையும் வயிற்றில் சுமந்துகொண்டு எல்லா வேதனைகளையும் நெஞ்சில் சுமந்துகொண்டு சில உண்மையான தமிழ், டெனிஸ் நண்பர்களின் உதவியோடு வாழ்க்கையை போராடிக் கடக்க வேண்டுமென்ற துணிவோடு தொடர்ந்தாள்.

சங்கரின் குடும்பத்தினரெல்லோரும் சங்கர் இருக்கும்போதே கனடா வந்துவிட்டனர். அவர்களில் சிலர் அவன் இறுதிக் கிரியைக்கு வந்ததோடு அவர்கள் உறவும் தூரமாகப் போய்விட்டது.

ஆயிரத்தில் ஒரு நாளைக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வரும் அவ்வளவுதான்.

மகன் அஸ்வின் சற்று உளநலம் பாதிக்கப்பட்டவன். சற்றுப் பயந்த சுபாவமும் பத்து வயதாகியும் 5 வயதுக் குழந்தை போல் எப்பவும் செல்வியில் தங்கியிருப்பான். மற்றக் குழந்தைகளை விடக் கிரகிக்கும் தன்மை குறைந்தவன். அதற்கான பிரத்தியேக பள்ளியில் தான் படிக்கிறான். நகரசபையால் ஒழுங்கு செய்யப்பட்ட வாகனமொன்று அஸ்வினை தினமும் பள்ளிக்கு ஏற்றிப் போகும்.

மகனை அனுப்பி வைத்துவிட்டு தானும் வேலைக்குத் தயாரானாள். செல்வி வயோதிபர்களைப் பராமரிக்கும் ஒரு இடத்தில் தான் வேலை செய்கிறாள். இசா தனக்குத்தானே சாப்பாட்டைக் கட்டிக்கொண்டு சைக்கிளில் பள்ளிக்கு போய் வருவாள்.

செல்வி வெளிநாடு வந்து இன்னும் தன் பிறந்த மண்ணுக்குப் போகும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பிள்ளைகளுக்கு அடிக்கடி தன் பசுமையான நினைவுகளைச் சொல்லி மகிழ்ந்துகொள்வாள். இம்முறை விடுமுறைக்கு போவதென முடிவெடுத்தாள். செல்வியினுடைய அம்மா செல்வி வெளிநாடு வந்து ஓரிரு வருடங்களிலேயே நோயால் இறந்துவிட்டார். செல்வி வீட்டில் அக்காவும் அண்ணாவும் செல்வியுமாக பிள்ளைகள் மூவர். அக்கா குடும்பத்துடன் வன்னியில் போரில் இறந்துவிட்டாள். யாழ்ப்பாணத்தில் இருப்பது அண்ணன் கண்ணன் மட்டுந்தான். செல்விக்கு தன் அண்ணா மீது அளவுகடந்த பாசம்.

சங்கர் இருக்கும்போதே அவனை வெளிநாடு வரச்சொல்லிக் கேட்க, முடியாது என்றவன் பின்னர் செல்வியைக் கூப்பிடச் சொன்னான். அவளால் முடியவில்லை. கண்ணன் குடும்பத்தோடு தான் அப்பா இருக்கிறார். திடமாக இருந்த அப்பா பலரை இழந்த ஏக்கத்தில் வாய் இழுத்து நடக்கமுடியாமல் ஏலாவாளியாகி விட்டார்.

அவரைப் பராமரிக்க சாந்தியென்று ஒரு பெண்ணுக்கு அண்ணன் ஒரு நாளைக்கு ஆயிரம் கொடுப்பதாகச் சொல்லியிருந்தான்.

கண்ணனுக்கு சகானாவும் சயந்தனும் என்ற இரு பிள்ளைகள். அப்பாவின் செலவுக்கும் அண்ணா குடும்பத்துக்கும் செல்வி ஒவ்வொரு மாதமும் பணம் அனுப்புவாள்.

செல்வி பதினெட்டு வருடத்திற்குப் பின் சொந்த மண்ணில் கால் வைக்க தன் பிள்ளைகளோடு விமானத்தில் ஏறுகிறாள்.

விமானத்துக்குள் தூக்கம் வராமல் மண்ணின் நினைவுகளை மீட்டியபடி பயணித்தாள். இசாவும் அஸ்வினும் படம் பார்த்தார்கள். செல்வி வீட்டில் ஒரு அழகான வேப்பமரம் பெரிய பச்சைக் குடை போல் அதன் கீழே பால் போன்ற வெள்ளை மண் அடிக்கடி கூட்டப்பட்டு அழகாக இருக்கும். அது வரவேற்பறையை விட அதிகம் பயன்பட்டது. குழந்தைகள் உருண்டு புரண்டாலும் ஊத்தை வராது. சகோதரர்கள் மூவரும் மண் வீடு கட்டியது. அம்மாவுக்கு வடகம் செய்ய வேப்பம்பூப் பிடுங்கியது, ஊஞ்சல் கட்டி ஆடியது, அண்ணனுடன் மரமேறியதென எத்தனையோ அழகான படங்கள் செல்வி மனத்திரையில் விரிந்தன.

வேப்பமர நிழலில் அம்மா அடி போட்டு பேன் பார்த்த படியாலும், அப்பாவிடம் அடி வாங்கி வீட்டுப்பாடம் செய்ததாலும் சில சமயங்களில் வேப்பமரத்தில் குட்டிச் செல்விக்கு வெறுப்பு வந்தாலும் அவளைப் பொறுத்தவரை அந்த வேம்பு ஒரு முக்கிய உறவு போல அதன் மேல் அவளுக்கு அத்தனை பிரியம். திரும்பாத அந்த நாட்களையெண்ணிப் பெருமூச்சுவிட்டாள்.

அஸ்வினை பாத்ரூம் விடப்போய் வரும்போது அவள் கடந்த நினைவுகளுக்கு இடைவேளை விட்டு இப்போ அங்கே போய்ச் செய்யப் போவதை எண்ணிப் பார்த்தாள்.

அண்ணாவுடன் கதைக்க எவ்வளவு இருக்கு. நிறையக் கதைக்க வேணுமென்று நினைத்தாள். அண்ணா என்னைப் பார்த்ததும் எவ்வளவு கவலைப்படுவார். இந்த வயதில் ஒரு சகோதரியை இழந்து

விட்டு இன்னொரு சகோதரி தாலியின்றியிருப்பது எந்த அண்ணனாலும் ஏற்க முடியாத ஒன்றுதான் என கண்ணனை நினைத்தும் கவலைப்பட்டாள்.

"அம்மா சிறீலங்காவில் மாமாவுடன் ' ரீ ' மரங்களைப் போய்ப் பார்ப்பமோ" என்றாள் இசா.

"ஓமம்மா போனதும் மாமாவைக் கேளுங்கோ. கூட்டிப் போவார்" என்றாள் செல்வி.

"அந்த வன்னியிலுள்ள அநாதைப் பிள்ளைகளைப் போய்ப் பார்த்து ஏதாவது உதவி செய்யோணும்...." என்றாள் செல்வி. "ஓம் நல்லது அம்மா செய்வோம்" என்றாள் மகள்.

அண்ணிக்கு அண்ணா பிள்ளைகளுக்கு விரும்பியது எல்லாம் வாங்கிக்கொடுக்க வேண்டும். அப்பாவைப் பராமரிக்கும் அந்த சாந்தி அக்காவை வரவேண்டாமென்றுவிட்டு தானே பார்க்கவேண்டும். வேப்பமரநிழலில் குட்டித்தூக்கம் போடணும். பிள்ளைகள் அதில் ஊஞ்சல் கட்டி ஆடணும். சிறு குழந்தையைப் போல் நிறையவே எண்ணி இன்ப வெள்ளத்தில் மூழ்கினாள். இசா இடையிடையே அம்மாவைப் பார்த்தாள். அம்மா முகத்தில் இத்தனை மகிழ்வை முன்னர் அவள் காணவேயில்லை.

பாத்ரூம் செல்ல எழும்பும்போது அம்மாவை இறுக்கிக் கட்டியணைத்து விட்டுப் போனாள் இசா.

இந்தச் சந்தோசத்தில் பங்கு கொள்ள சங்கர் இல்லையே. இந்தப் பாழாய்ப் போன கடவுள் ஏன் அவரை என்னிடமிருந்து பிரித்தானென அடிக்கடி அவள் மனம் ஏங்கியது.

விமானம் இறங்கும் நேரம் வந்தது. செல்வியெனும் பட்டாம்பூச்சியின் மகிழ்ச்சிச் சிறகுகள் பறந்தன. அண்ணன் குடும்பம் மகிழ்வுடன் இவர்களை வரவேற்றனர்.

அண்ணனை ஓடிப்போய் குழந்தை போல் கட்டிப்பிடித்தாள். சங்கரையும் அக்காவையும் நினைத்து கண்கள் பனித்தன. அழுகையை

அடக்கிக் கொண்டாள். எல்லோரும் ஒருவரையொருவர் கட்டியணைத்து முத்தமிட்டனர். அஸ்வின் மட்டும் அம்மாவுடன் ஒட்டிக்கொண்டிருந்தான்.

கையில் பிடித்துக் கூட்டிப்போய் செல்வி மகனுக்கு எல்லோரையும் அறிமுகப்படுத்தினாள். விமானநிலையத்திலிருந்து எல்லோரும் வெளியேறினார்கள். சூரியன் தன் பொற்கரங்களால் அவர்களை வரவேற்றான். விமான நிலையத்தருகே இருந்த மரங்களெல்லாம் தலையசைத்து வணக்கம் கூறின. பெரிய வான் ஒன்றில் எல்லோரும் ஏறி அமர்ந்து டென்மார்க் இனிப்புகளைச் சுவைத்தபடி பயணித்தனர்.

வெள்ளவத்தையில் அண்ணா வாடகைக்கு எடுத்த வீட்டிற்கு வந்தனர். வீடு சகல வசதிகளோடு வெளிநாட்டு வீடு போலிருந்தது. குளித்து உடைமாற்றினார்கள். பயணக்களைப்பு இருந்தாலும் அவளுக்குள் அண்ணனைச் சந்தித்தது ஒரு புத்துணர்ச்சியைக் கொடுத்தது.

அண்ணன் கையில் இரண்டு லட்சத்தைக் கொடுத்து செலவுக்கு வைத்திருக்கச் சொன்னாள். எல்லாருக்கும் பல விலையுயர்ந்த பரிசுப் பொருட்களைக் கொடுத்தாள்.

"அண்ணா.... கொழும்பில் என்ன வேலை.... கெதியாய் வீட்டை போவம்" என்றாள்.

அவள் மனம் அப்பாவையும் வீட்டையும் விரைவில் பார்க்க வேண்டுமென்ற ஆவலோடு இருந்தது.

"இஞ்ச சொப்பிங் போகவேணும்" என்றான் கண்ணன்.

"அண்ணா நான் ஒண்டும் இப்ப வாங்கேல்ல. போகும்போது பாப்பம்" என்றாள் செல்வி.

"இசா தேயிலைத் தோட்டம் பார்க்கோணுமாம் முடிஞ்சா அதைப் பார்த்துவிட்டு வீட்டை போவம்"

"தேயிலைத் தோட்டம் பிறகு போகேக்கை பார்க்கலாம். இப்ப எங்கட சகானா அத்தையைக் கொண்டு ஏதோ வாங்கவேணுமாம்" என்றான் கண்ணன்.

"செல்வி! நாங்கள் சகானாவுக்கு ஒரு பெடியனைப் பார்த்திருக்கிறம். எங்கட ஊருக்குக் கிட்டத்தான். பருத்தித்துறைப் பெடியன். இங்கதான் இருக்கினம். வாற கிழமை தட்டு மாத்தப் போறம். நீ நிக்கேக்கை செய்தால் சந்தோசம் தானே" என்றாள் அண்ணி.

"ஓ அப்படியா? சரியான சந்தோசம் அண்ணி. எங்கடை சகானாக் குட்டி கலியாணம் கட்டுமளவுக்கு பெரிய மனுசியாகிட்டாள்" என்று சிரித்துவிட்டு "அப்ப வாங்கோ சொப்பிங் போவம்" என்றாள் செல்வி.

நிறையக்கடை ஏறி விரும்பியதெல்லாம் வாங்கிக் கொடுத்தாள். தன் பிள்ளைகளுக்கு இந்த வெயிலில் வந்த களையோடு அலைவது கஸ்ரம் என உணர்ந்து கவலைப்பட்டாள். ஆனால் தன் மருமகளுக்காகப் பொறுத்துக்கொண்டாள். பெரிய விலையுயர்ந்த கொட்டலில் இரவு உணவு சாப்பிட வேண்டுமென சயந்தனும் சகானாவும் ஆசைப்பட்டு அங்கே போய் எல்லோரும் சாப்பிட்டார்கள்.

செல்வி தன் வாழ்க்கையில் இவ்வளவு பணம் கொடுத்துச் சாப்பிட்டது இதுதான் முதற் தடவை. இப்படியான இடங்களில்தான் கொழும்பில் நின்ற நாட்களில் சாப்பாடு நடந்தது. சயந்தன் விரும்பியது போல் மோட்டார் சைக்கிளும் வாங்கிக் கொடுத்தாள். இனிச் சகானாவுக்கு தட்டையும் மாற்றிவிட்டால் ஊருக்குப் போகலாமென எண்ணினாள். திருமணத்துக்கு வெளிக்கிட்டது போல் செல்வி வாங்கிக் கொடுத்த ஆடையில் எல்லோரும் அழகாக இருந்தனர். செல்வியும் குழந்தைகளும் மிகவும் எளிமையாக இருந்தனர். இசா எல்லோரையும் படமெடுத்தாள்.

அலுவல்கள் தடல்புடலாக நடந்தது. எல்லோரும் அழகாக வெளிக்கிட்டனர். சகானாவை வெளிக்கிடுத்த யாரோ இரு பெண்கள்

வந்தனர். செல்வியின் சாறியைப் பார்த்து "இதென்ன இது செல்வி? இந்தச் சாறியேன் கட்டினனி" என்றான் கண்ணன். "ஏனண்ணா நான் இதுதான் கொண்டுவந்தனான் என்றாள்.

"சங்கரில்லாமல் செல்வி வேறை எப்பிடியப்பா வெளிக்கிடுகிறது, பேசாமல் இருங்கோ" என்றாள் அண்ணி. இசா புரிந்துகொண்டு அம்மாவைப் பார்த்தாள். இசாவுக்கு காட்டாமல் செல்வி புன்னகைத்தாள். எல்லாவற்றையும் மனதுக்குள் புதைக்கத் தெரிந்த புன்னகைச்செல்வி.

அண்ணியும் அண்ணாவும் ஏதோ பேசிவிட்டு செல்வியை அழைத்து "செல்வி நீ உன் மகனை வேறொரு அறைக்குள் இருக்கச் சொல்லு. அவன் கொஞ்சம் மூளை சரியில்ல எண்டு அவையள் ஏதும் நினைப்பினம்."

செல்விக்கு அதைக்கேட்க உடம்பெல்லாம் ஏதோ செய்து வியர்த்தது. வேறு நாட்டவன் கூட என் குழந்தையை இப்படி ஒதுக்கவில்லையே என தனக்குள் நொந்துகொண்டாள். குளறி அழ வேண்டும்போலிருந்தது. ஆனால் அடக்கிக்கொண்டாள். மகனைக் கட்டிப்பிடித்து கொஞ்சிவிட்டு ஒரு அறைக்குள் ஐபாட்டைக் கொடுத்து இருக்கவிட்டாள்.

மாப்பிள்ளை வீட்டார் வந்து எல்லாம் நல்லபடியாக நடந்தது. மாப்பிள்ளையின் அம்மா சொன்னார். "எங்கட மகன் இஞ்சினியர். மற்றவர்கள் மாதிரிக் கனக்கக் கேட்க இல்லை ஐம்பது லட்சம் வங்கியில் கலியாணத்திற்கு முன் போடுவியள்தானே" என்றாள். "அது ஒரு பிரச்சனையுமில்லை. தங்கச்சி தன்ரை மருமகளுக்குத் தானே செய்யவேணுமெண்டு ஒற்றைக்காலில் நிக்கிறாள்" என்றான் கண்ணன்.

செல்வி திடுக்கிட்டாள். "நான் எப்போ சொன்னேன் இப்பவே கொண்டுவந்த காசெல்லாம் முடிஞ்சு மாஸ்ரர் காட்டில் எடுத்தாச்சு" மனதுக்குள் பேசினாள். மகளின் விடயம் நன்றே நிறைவேறியதில் அண்ணனின் மகிழ்ச்சியைப் பார்த்து செல்வி மகிழ்ந்து போனாள்.

செல்வியின் ஒரு மாத விடுமுறையில் இரண்டு வாரம் முடிந்துவிட்டது. ஒரு வாரம் ஊரில் நின்றுவிட்டு மீண்டும் கொழும்புக்கு வரவேண்டும். வீட்டையும் அப்பாவையும் பார்க்கும் அளவுகடந்த ஆவலோடு ஊருக்குப் பயணமாகிறாள் அப்பாவின் கடைக்குட்டி செல்வி.

வீடு போய்ச் சேர்ந்தபோது கடுமிருட்டு. இரவு பன்னிரண்டு மணி. அவளின் கால்கள் அந்த வெண்மணலில் புதைந்தபோது கண்ணால் கண்ணீர் பொலபொலவெனக் கொட்டியது. அப்பாவுக்கு பின்னுக்குள்ள அறையைக் கொடுத்திருந்தார்கள். அறை ஊத்தையும் தூசுமாக இருந்தது. அப்பா இன்னும் தூங்கவில்லை. அப்பாவால் பேசமுடியாது. ஆனால் ஆட்களை இனங்காண முடியும். செல்வியை மேலிருந்து கீழே பார்த்தார். கைகளை நீட்ட செல்வி அப்பாவைக் கட்டிப்பிடித்து அழுது தீர்த்தாள். தன் பிள்ளைகளையும் காட்டினாள். அப்பா பேரப்பிள்ளைகளை ஆசை தீரக் கொஞ்சினார். அப்பாவைப் பார்த்ததும் செல்விக்கு அண்ணன் குடும்பத்தைப் பற்றித் தெளிவாகப் புரிந்தது.

"செல்வி வந்து சாப்பிட்டுவிட்டுப் படு. நாளைக்கு காணிக் கந்தோருக்குப் போகவேணும்" என்ற அண்ணனின் குரல் செல்விக்கு எரிச்சல் ஊட்டியது.

"நாளைக்கா அப்பாவுடன் நான் இருக்கேல்ல. அவருக்கு குளிக்க வாத்து அவருடன் இருக்கப் போறன்" என்றாள் செல்வி. "அதுக்கு ஒரு பொம்பிளை வரும் நீ நாளைக்கு என்னோடை வா" என்றான் கண்ணன்.

என்ன செய்வதென்று தெரியாமல் ஓம் என்றுவிட்டுக் குழந்தைகளோடு தூங்கினாள். அப்பாவை நினைக்க துக்கம் நெஞ்சை அடைத்தது. விடிய எழும்பியதும் குயிலோசை சிறிய மகிழ்வைத் தந்தது. குயிலோடு போட்டிக்குக் கூவியதை நினைத்தபடியே வெளியில் போனாள். அங்கே வேப்பமரத்தைக் காணவில்லை. அவள் இதயம் நிற்பது போலிருந்தது. சற்றே கடினமான குரலில் "எங்கேயண்ணி எங்கள் வேப்பமரம்?"

அவளும் பதிலுக்கு "உம்மடை அப்பாவையும் பார்த்து இந்தக் கஞ்சல் குப்பையைக் கூட்ட என்னால ஏலாது. அதுதான் தறிச்சுப் போட்டடம்" என்றாள். செல்விக்கு தன் இதயத்தை யாரோ ஈட்டியால் குத்துவது போலிருந்தது.

பொம்மையைத் தொலைத்த குழந்தைபோல் அந்த மரம் நின்ற இடத்தில் அசையாது நின்றாள். "ஏன் செல்வி இந்த மரத்துக்காகவோ அண்ணியிடம் உரத்துப் பேசுறாய்...? கெதியா வெளிக்கிடு காணி அலுவல்கள் முடிக்கவேணும்" என்றான் கண்ணன். டென்மார்க்கில் இருக்கும்போதே தன் அண்ணனுக்குக் காணியை எழுதித் தருவதாகச் சொல்லிவிட்டாள்.

பிள்ளைகள் வேண்டாமெனத் தனியே வரச்சொன்னான். இசாவிடம் "செல்லக்குட்டி தம்பி கவனமடா" என்றபடி போனாள். அண்ணாவோடு தனியப் போவது நல்லது தான். எத்தனை சோகத்தை அடக்கி வைத்திருக்கிறேன். அவனோடு பேசினால் தன் வலிகளைப் புரிந்துகொள்வான் என எண்ணினாள் அந்தக் கள்ளமில்லாத பாசக்காரத் தங்கை. காருக்குள் ஏறி ஐந்து நிமிடத்தில் "செல்வி உங்கட நாட்டில மூளை சுகமில்லாதாக்களுக்கு நல்ல காசு குடுப்பாங்களாம் உனக்கும் அப்பிடித்தானே" என்றான்.

இந்த அண்ணனுடன் என் வலியைப் பகிர்வது முட்டாள்தனம் என மௌனமாக இருந்தாள். காணி அலுவல் நான்கு நாட்களைத் தின்றது. இரண்டு நாட்கள் அப்பாவின் அறையைத் துப்பரவாக்கி அப்பாவுக்குக் குளிக்கவார்த்தாள். அப்பா குழந்தைபோல் அழகாகவும் புன்னகையோடும் இருந்தார். அதுமட்டும் செல்விக்கு திருப்தியைத் தந்தது.

அப்பாவைப் பராமரிக்க வரும் சாந்தி அக்காவுடன் பேசியபோது, அப்பாவைப் பராமரிக்க மாதத்தில் ஒரு நாள்தான் வருவார் என்று அறிந்தாள். மாதத்தில் அப்பாவின் பராமரிப்புச் செலவு முப்பதாயிரம் என்று அனுப்பிய செல்விக்கு அதிர்ச்சியாக இருந்தது.

செல்வியின் ஊர் அழகான சிறிய கிராமம். அங்கே பெரிய கடைகள் இல்லை. அதனால் செல்வியின் அண்ணி பக்கத்து நகருக்கு சென்று வரும் பஸ் றைவரிடம் பணம் கொடுத்து "அடுத்த ரிப் வரேக்கை 5 பிரியாணியும் 3 கொத்துரொட்டியும் ரவுணில வேண்டி வாங்கோ" என்று சொன்னதைச் செல்வி கேட்டாள்.

இங்கே பல வீடுகளில் வெளிநாட்டுப் பணங்கள் அடுக்களைக்கு விடுமுறை கொடுத்தன என்பதையும் அண்ணனோ அண்ணாவின் மகனோ எந்த வேலைக்கும் போவதில்லையென்பதையும் அறிந்தாள். இப்படி எத்தனையோ புலம்பெயர்ந்தோரின் உழைப்பு, புலத்தில் பலரை குளிர்காய வைக்கிறது என்பதை எண்ணி வேதனைப்பட்டாள்.

இந்த ஒரு மாதத்தில் அண்ணா செய்தவற்றை நினைக்க செல்விக்கு நெஞ்சு வலித்தது. ஒற்றைச் சகோதரத்திடம் ஓடி வந்தவளால் ஒரு சில விடயங்களை நினைக்கவே முடியாமலிருந்தது.

ஒரு பொருளைக் கூட என் அண்ணன் எனக்கு தன் பணத்தில் வாங்கிக் கொடுக்கவில்லை. சங்கரின் துயரை என்னோடு பகிரவில்லை, அக்காவைப் பற்றி ஒரு வார்த்தை எடுக்கவில்லை. என் பிள்ளைகளிடம் கூட மாமாவாக அன்போடு பேசவில்லை. பிள்ளைகளை ஒரு நல்ல இடம் பார்க்கக் கூடக் கூட்டிப் போகவில்லை. ஏன் அண்ணா இப்படி மாறிவிட்டானென டென்மார்க் வெளிக்கிடுவதற்கு முதல்நாள் இரவு தூங்காமல் நினைத்து நினைத்து வருத்தப்பட்டாள்.

அன்று வெறுமையான வேப்பமர நிழலில் கூட பாசம் வளர்ந்தது. இன்று எத்தனை வசதி வந்தும் பணத்தால் பாசம் அழிகிறதே என்றெண்ணியபடி அன்புச்செல்வி பயணத்தைத் தொடர்ந்தாள்.

இந்த ஈழபூமியை போர் கிழித்தது போல் மனித மனங்களையும் பெயர்த்துவிட்டதோ?

### *தம்பிராஜா சிறீஸ்கந்தராஜா*

## ஒத்திகை (நகைச்சுவை நாடகம்)

### *காட்சி : 1*

இடம் : விலாசம் வீரகத்தியர் வீடு

பாத்திரங்கள் : விலாசம் வீரகத்தி, மனைவி பாய்க்கியம் சட்டம்பியார், ராணி

கோயில் மணி ஒலிக்கிறது.

வீரகத்தியர் : அப்பு பிள்ளையாரே உன்ரை மணிச்சத்தம் உண்மையில் மனசுக்கு சந்தோசம். என்ன இண்டைக்கு இந்த நேரம் ஆரோ அடிக்குதுகள். அடிக்கட்டும். உதுக்கு ஏதோ எண்ணைச் செலவே.

பாய்க்கியம் : ம் சும்மா அலம்பாதையுங்கோ. போன் அடிக்குது. ஓ சொன்னன் அட பிள்ளை எடுக்கிறான். ஓ அவன்தான் நம்பர், ஓ பிள்ளை தான்.

போன் : ஆர் அம்மாவே அப்பா எங்கை.

பாய் : இருக்கிறார் என்ன மோனை இப்ப தானே கொஞ்சம் முந்தி எடுத்தனி. பேந்து உடன

பாய் : என்ன நிலநடுக்கமோ என்ன சுனாமி வருமோ இதென்ன ஆய்க்கின. அள்ளிக் கொண்டு போனது காணாதோ. எனி ஆரை அள்ளப் போகுதோ.

வீர : என்னடியப்பா ஒப்பாரி வைக்கிறாய் பாய்க்கியம், ஐயோ சுனாமி வரப்போகுதாம் தம்பி. எழும்புங்கோ இந்த பாய்க்கை காணயில்லை. எதை இப்ப எடுக்கிறது. அயிலென்ரிகாட் எங்கை. இஞ்சை கொண்டு வா பதறாதை போன் பே... ஓம் ஓம் சரி சரி. அப்பிடியே! எடி அப்பா இஞ்சை சிலோனிலயிருந்து ஆரோ

நெற்றில விட்டவங்களாம் சுனாமி வாற அறிகுறி எண்டு. ஒண்டும் பதட்டப்படத் தேவையில்லை.

பாய் : என்ன விசர் ஆட்டம் கதைக்கிறியள். கொண்டா நான் கதைக்கிறன். ஓம் ஓம் சரியடா தம்பி. இஞ்சாருக்கோ உதைப் போடுங்கோ.

வீர : எதை

பாய் : தம்பி சொல்லுறான் *TV* போட்டுப் பாக்கட்டாம் அதில சொல்லுவாங்களாம்.

வீர : எதைப் போடுறது எனக்கும் போன் சொன்னவன். நான் சொல்லிப்போட்டன். சண்டை போடுறதில சண்டை நான் போடன்.

பாய் : என்னப்பா இந்த மனிசன் நேர காலம் தெரியாமல் திமிர் பிடிச்சுக் கொண்டு நிக்குது. போடுங்கோ.

வீர : இஞ்சார் பாய்க்கி அண்டைக்கே நான் உனக்குச் சொன்னனான் சண்டை போடமாட்டன்.

சட்டம் : வீரப்பா! என்னடாப்பா நான் கூப்பிட்டதும் கேளாமல் சண்டை போடுறதில்லை எண்டு சொல்லிச் சொல்லி சண்டைதான் போடுறியள்.

வீர : சட்டம்பியார் நீர் படிப்பிச்ச சட்டம்பி இல்ல. பட்டம் வச்சு வந்த சட்டம்பி எண்டது விளங்குது. விளங்கச் சொல்லுறன் கேள்.

சட் : பாத்தியே நக்கிப் போட்டாய். உன்ர நக்கல் குணம் போகாதடாப்பா. பாய்க்கியம் நீ சொல்லு என்ன பிரச்சனை.

பாய் : சட்டம்பி அண்ணை இப்ப பிள்ளை லண்டனில இருந்து எடுத்தது. சுனாமி வரப்போகுதாம்.

வீர : எடி எடி அப்பா உப்பிடித்தான் பெண்டுகள் கதை கட்டுறது. அவன் சொன்னது நெற்றில போகுது எதுக்கும் அவதானமாயிருங்கோ. அதை நீ தலை கால் வைச்சு சுனாமி அடிச்சிட்டுது எண்டு முடிச்சிடுவாய் போல கிடக்கு. சுடுதண்ணி குடிச்ச நாய் மாதிரி.

சட் : ஓம் ஓம் இப்பத்தைப் பெடியள் தெரியாதே ஒரு போனை வைச்சு அதை இதை வம்புக்கும் செய்யுங்கள்.

| | | |
|---|---|---|
| வீர | : | பின்ன என்ன இது தெரியாமல் கிடந்து மாரடிக்கிறாய். |
| பாய் | : | அது தானப்பா உதைப் போடுங்கோ. போட்டாத் தானே உண்மை பொய் அறியலாம். |
| வீர | : | பேந்தும் சொல்லுறன். நான் சண்டை போடுறதில்லை எண்டால் உயிர் போனாலும் போடன். |
| பாய் | : | ஐயோ இந்த மனிசன் எப்பதான் திருந்தப் போகுதோ. |
| சட் | : | என்னடாப்பா சண்டை போடுறதில்லை இல்லை எண்டு வாய்ச் சண்டை போடுறியே. எனக்கு ஒண்டுமே விளங்குதில்லை. |
| வீர | : | எப்பிடி விளங்கும். எங்கட வீட்டுப் பிரச்சினை. |
| பாய் | : | கடவுளே! இந்த மனிசனுக்கென்ன விசராக்கிப் போட்டுதே. |
| ராணி | : | பாக்கியக்கா.... |
| பாய் | : | என்னடியாத்தை நீ வேறை இதுக்குள்ள. |
| வீர | : | வந்திட்டாள் வந்திட்டாள் சிவபூசயிக்கை கரடி வந்த மாதிரி. |
| ராணி | : | இல்லை ஆரோ பெரிசாய் கதைச்சுக் கேட்குது. என்னண்டு பாப்பம். அக்கா எனக்கு பாதிக் கையில் தேங்காய் தாறியளே. |
| பாய் | : | எடி பாதி இல்லை. ஒண்டு முழுசாய் தல்லாம் வாங்கிப் போட்டுத்தா. |
| வீர | : | சரி பாதி கேட்டவளுக்கு முழுசாய் குடு. நீ கொடை வள்ளல் எண்ட நினைப்பு. வீரகத்தி வீட்டுச் சாமான் எனி கோயில் கணக்குத்தான். சரி வேண்டிப் போட்டாய் போ. |
| ராணி | : | ஏன் கலைக்கிறியள். போவன் தானே பின்ன இஞ்சை இருக்கவே வந்தனான். |
| பாய் | : | எடியே ராணி சுனாமி வருமாம். |
| ராணி | : | என்னக்கா சுனாமியாமோ பெடியள் தனிய நான் போறன். |
| வீர | : | சரி, எனி சுனாமி அடிச்சதுக்குச் சரி. இப்ப ஊரெல்லாம் ஓடிஓடி உவள் இந்த உலகமெல்லாம் பரப்பிப் போடுவள். |

ராணி : அக்கா உந்தக் கிழடுகள் ஓடாதுகள். நீங்கள் வெளிக்கிடுங்கோ பள்ளிக்கூடப் பக்கம் போவம்.

வீர : பாய்க்கியம் உந்த வதந்தி பரப்பிறவளின்ர கதையைக் கேட்டு இருட்டுபடுகுது எங்கையும் போகாதை. நாங்கள் போய் வாசிகசாலையடியில நிண்டு நோக்கம் பாத்துக்கொண்டுவாறம்.

பாய் : நீ போய் உங்கை வசந்தி பரப்பிக் கொண்டு நில்லாத. பொடியள கூட்டிக்கொண்டு உயிரை பாதுகாப்பம். பிந்தினால் நான் போய்விடுவன்.

சட் : பாய்க்கியம் வசந்தி இல்லை வதந்தியடி. ஏன் தான் சொல்லை மாத்தி தமிழைக் கொல்லுறியளோ தெரியல.

பாய்க்கியம் : ஏதோ வசந்தியோ சுகந்தியோ நீங்கள் சட்டம்பி எண்டதுக்கு இதுக்கை ஒரு இலக்கணம்.

சட் : வீரகத்தியா வா நாங்கள் வாசிகசாலையடிக்கு போய் என்னண்டு அறிஞ்சுவருவம்.

## *காட்சி : 2*

*பாத்திரங்கள் : வீரகத்தி, சட்டம்பி, பாலன், ரகு*

சட்டம்பி : தம்பியவை என்னடா பேப்பரில என்ன புதினங்கள், அரசியல் எப்பிடிப் போகுது.

பாலன் : வீரகத்தி அண்ணை இந்தாங்கோ பேப்பரைப் பாருங்கோ. என்ன புதினம் சட்டம்பியார். கசிப்பு வடிப்பு பிடிபட்டது; கஞ்சா கடத்தினவன் கைது; வாள் வெட்டு குழு அட்டகாசம்;

சட்டம்பி : ஓம் ஓம் நாடு நல்லாய் கெட்டுப்போச்சு.

ரகு : சட்டம்பியார் (நெற்றில போகுது) சுனாமி ஒத்திகை பாத்தவையள்.

வீரகத்தி : இப்ப கேட்ட மணிச் சத்தம்

சட்டம்பி : கூவின மாதிரி ஒலி இதெல்லாம் ஒத்திகையோ.

ரகு : ஓம் வீரப்பா சுனாமி ஒண்டு வந்தால் என்ன செய்ய வேணும், எப்பிடி ஓடவேணும், எங்கை போக

வேணும். இதுகள தெளிவுபடுத்தி விளங்க வைச்சு விழிப்புணர்வை ஏற்படுத்துகினம்.

வீரகத்தி : எல்லாம் ஆர் செய்யிறது

பாலன் : அரசாங்கம்தான் விபரமாய் *TV* யிலை போட்டுக் காட்டினவை. நாளைக்கு இஞ்சை செய்யப் போகினம் (பாலன், ரகு போதல்) சரி நீங்கள் இருங்கோ நாங்கள் வாறம்.

சட்டம்பி : எட வீரப்பா நீ அப்ப *TV* போட்டுப் பார்த்தா எல்லாம் சரிவரத் தெரிஞ்சிருக்கும் சீ... என்ன மனிசன்.

வீரகத்தி : சரியடாப்பா இருண்டு போச்சு பாய்க்கியம் எங்கை ஓடினாளோ எழும்பு.

சட்டம்பி : இப்பபோய் எனி மொட்டு மொட்டெண்டு வெள்ளண சண்டை போடன் எண்டு சண்டை போட்டது.

வீரகத்தி : எட நீயும் விடனெண்டுதான் நிற்கிறாய். நான் ஆர் தெரியுமே விலாசம் வீரகத்தி.

சட்டம்பி : ஓ விலாசம் சொல்லுங்கோ.

## காட்சி : 3

பாத்திரங்கள் : வீரகத்தி, பாய்க்கியம், ராணி, சட்டம்பியார்

வீர : பாய்க்கியம் உங்கை குசினிப் பக்கம் ஏதோ தட்டிக் கேட்குது பூனையோ தெரியாது.

பாய் : என்னண்டு பாருங்கோ.

வீர : ஏன் நீ என்ன செய்கிறாய்.

பாய் : ஐயோ, இராமாயணத்தில முக்கிய கட்டமப்பா சீதையை ராவணன் கடத்திறான்.

வீர : பொரியல் சட்டியை பூனை கடத்தின பிறகு தெரியும். சீதையை கடத்தினது இராமனோ இராவணனோ எண்டு. இப்ப அஞ்சு நிமிசத்தால அரசியல் வளம். இப்ப நான் வர விடாட்டால் இராவண சங்காரம் தான். ஓ தெரிஞ்சுகொள் சொன்னனான் சொன்னனான் குழம்புச் சட்டியிக்கை பூனை குளிக்குது. பறப்பாளே இனி என்னத்தை தின்ன. இவளை அடிச்சு தண்ணியில

போடவேணும். கண்டறியாத நாடகமும் படமும் எந்த நேரமும் *TV* யோடைதான்.

பாய் : கடவுளே ஆக்கினை விழுவார் பூனை வளர்த்துப் போட்டு சாப்பாடு போடாட்டால். உது உவள் பொன்னியின்ரை பூனை. பொன்னிக்கு குடுக்கிறன் கிழி.

வீர : ஏன் பொன்னி சொல்லிவிட்டவளே திண்டிட்டு வா எண்டு. எடியே காலமை விடிய 1000 பாவல் கொட்டை மாதிரி குடுத்து ஆசையோட வாங்கி வந்த பாரையைப் பூனைக்குத் தாரை வாத்துப் போட்டு கிடக்கிறியே. உனக்கு நாலு சாத்து சாத்தினா தான் ஆத்திரம் தீரும்.

பாய் : சரி விடுங்கோ, பாரை என்ன கரும்பே பேந்தொரு நாளைக்கு வாங்கி திண்டால் போச்சுது.

வீர : போச்சுதோ காசுக்கல்லே வாங்கினது.

பாய் : காசு தான் காசு, உங்கடை உழைப்பே? உருக்கொண்டாடுறியள்.

வீர : என்ன காசோ, காசென்ன உன்ரை கொப்பன் வீட்டு சொத்தே. விலாசம் வீரகத்தியின்ரை பரம்பரைச் சொத்து.

பாய் : தெரியும் தெரியும் அந்த பெடி அனுப்பாட்டால் உங்கடை ஒய்ப்பும் சொத்தும் இந்த ஊருக்குத் தெரியும்.

வீர : எனக்கு வாற விசருக்கு வாங்கிப் போடுவன் வாய் காட்டாத.

பாய் : வாங்கவும் போடவும் நான் என்ன மரம்தடியே. நானும் ஏதோ சமாளிப்பமெண்டால் ஏறிப்பாயிறியள். பாரை என்ன பவுணே தொலைஞ்சது எண்டு கத்துறீயள்.

வீர : கண்டறியாத படம் பார்ப்பு. நாடகம் பார்ப்பு அடக்கப்பிடாமல் கிடக்கு. ஒரு செய்தி கேட்கேலாது கிரிக்கட் பாக்கேலாது அரசியல் பற்றி அறியேலாது. அவவுக்கு தொடர் நாடகம். துலைச்சுப் போடுவன்.

இண்டு துவக்கம் நீ T.V பாத்து நான் கண்டால் பல்லு முப்பத்திரண்டும் பணியக் கிடக்கும்.

பாய் : ஏலுமே இல்லை என்ன செய்யப் போறியள்

வீர : வாய் காட்டாத பொத்தடி வாய.

பாய் : வெருட்டாத, உதுக்கு வேறை ஆரயும் பார்க்க வேணும்.

வீர : என்ன சொல்லச் சொல்ல சொடுசொடுக்கிறாய் (சாத்தல்)

பாய் : ஐயோ, பாழ்படுவான் ராணி ஓடிவாடி அடிச்சுத் துலைகிறான்.

ராணி : அம்மான் என்ன இது விடுங்கோ. சீ.... அக்கம் பக்கத்தில சனம் பாத்து சிரிக்குதுகள்.

பாய் : விடு ராணி கொல்லட்டும் நான் சாகிறன்.

வீர : உனக்கு வெளிநாட்டுக் காசைத் திண்டு திண்டு கொழுப்பு.

ராணி : நீங்கள் பேசாமல் இருங்கோ அக்கா. அமைதி

வீர : ராணி ஆத்திரத்தில அடிச்சுப்போட்டன். ஒரு மாதிரி சமாளி.

ராணி : நீங்கள் கோயிலடிப் பக்கம் போங்கோ. நான் சமாதானப்படுத்திறன்.

வீர : சட்டம்பி நாங்கள் எப்பவேனும் சண்டை போட்டத நீ கண்டியோ. இல்லை கேள்விப்பட்டியோ.

சட் : அது தானே, அப்பாவி குடும்பம், மிரிச்ச இடத்து புல்லு சாகாது. இரண்டு பேரும் அப்பிடி. இந்த TV வந்ததால சில குடும்பத்தில் ஒரே சண்டைதான்.

வீர : டேய் சட்டம்பி நான் பிடிவாதக்காரன். ரோசக்காரன். எங்கட குடும்ப கௌரவம் என்ன. ரோசமும் பிடிவாதமும் எங்கட பரம்பரை சொத்து மாதிரி.

சட் : ஓ கொப்பர் குணத்தாரும் அப்பிடிதான்.

வீர : நீ சரியாய் அறிஞ்சு வைச்சிருக்கிறாய். பின்னை அண்டைக்குத்தான் T.V எண்ட சொல்லை விட்டு சண்டை எண்டு வைச்சனான். அண்டைக்கு எடுத்த முடிவு, பிடிவாதம் நான் இனி சண்டை போடன்

போடனெண்டால் போடன். சரி இருண்டு போச்சு பாய்க்கியம் என்ன செய்யிறாளோ வா, வந்து வெத்திலை போட்டுக் கொண்டு போவன்.

சட் : ஓம் ஓம் போவம்.

## காட்சி : 4

பாத்திரங்கள் : வசந்தன், பரமர், செல்லம்மா, ராணி, பாய்க்கியம்

நேரம் : காலை 6 மணி

பரமர் : செல்லம்மா செல்லம்மா உந்த புள்ளிக் கறுவல் கிடாய்க் குட்டியைக் காணயில்லயப்பா.

செல் : என்னப்பா எங்கை போறது பட்டிக்கு பக்கத்தை எங்கேயேனும் நிக்கும். வடிவாய்ப் பாருங்கோ.

பரமர் : எனக்கென்ன கண் குறுடே. வடிவாய்ப் பாத்திட்டுத் தான் கேட்கிறன்.

செல் : ராத்திரி அடைக்கயிக்கை நிண்டது. விடிய எங்கை போறது ம் டேய் வசந்தன்.

பரமர் : டேய் வசந்தன் வாடா இஞ்சை.

வசந்தன் : என்னணை அப்பு

பரமர் : டேய் நேற்று அடைக்கயிக்கை கறுத்தப்புள்ளி கிடாய் நிண்டதே.

வசந் : ஓ நிண்டது நிண்டது. எணை அப்பு இஞ்சாரணை இதால உழக்குப்பட்டு அடி கிடக்கு.

செல் : துலஞ்சுது கொள்ளையில போவார் கொண்டு போய் விட்டாங்கள். கடவுளே இந்த கள்ளரோட ஆடு வளக்கேலாது. நாசமத்து போவார் வயிறு வலிச்சு சாகட்டும் வைரவா நீதான் பிடிச்சுத் தர வேணும். இஞ்சாருங்கோ எதுக்கும் உந்த வைரவரில வடிவாய் இழைக்கட்டிப் போட்டு வாருங்கோ. காட்டிச்சுதே எண்டால் பெரிய பானையிலை பொங்கி வடை மாலையும் சாத்துவன் எண்டு நேர்த்தி வையுங்கோ. சாகட்டும் ஆரெண்டாலும் சாகட்டும். ஒரு பாவமும் பாக்கேலாது.

பரமர் : ஓ அது பிறகு முதல் G.S. க்கும் சொல்லி பொலிசிலும் என்றி போடுவம்.

செல் : போங்கோ போங்கோ பொலிசு எப்பிடியும் பிடிச்சுப் போடும்.

வசந்தன் : ணேய் ஆச்சி, நான் இண்டைக்கு அந்த முதிரங் கொட்டனை வைச்சுக் கொண்டு பட்டி மறைவில தான் கிடப்பன். முந்தி முருகற்றை மோன் களவு ஆடு பிடிச்ச போது அப்பு போட்ட அந்தப் போடு போடுறன். பார் ஓ குளற குளறக் குடுக்கிறன் பார்.

*(காட்சி இடையில் மாற்றம்)*

பாய் : ராணி எடியே நீ வர இல்லையே. என்னடி செய்யிறாய். வாடி வாடியப்பா உது சுனாமி வரத்தான் போகுது. ஒரே மந்தாரமாய் கிடக்குது. ஏதோ உந்தப் பெடியன் வெளிநாட்டால வருமட்டும் உயிரோட இருக்க வேணும். பிறகு செத்தாலும் பறவாயில்லை. அவங்கள் எப்பவும் சொல்லுறது எச்சரிக்கையாய் இருங்கோ எண்டு. தெரிஞ்சு கொண்டு ஏன் வீணாய்ச் சாவான்.

ராணி : அக்கா உவன் பெடியன் கடைக்குப் போனவன் வந்திடுவன். நீங்கள் போங்கோ பள்ளிக்குடத்தடிக்கு. அவன் வந்த உடனை நான் வாறன்.

பாய் : என்ன ராணி இருட்டாய்க் கிடக்கு. நிக்கவும் பயமாய்க் கிடக்கு. போகவும் இருட்டிக் கொண்டு வருகுது. (என்ன செய்ய) நீ பதுங்கு நான் போறன். ராணி லைற்றுக் கிடக்கே.

ராணி : ஓம் அக்கா நான் கொண்டாறன்.

பாய் : நான் மெல்ல மெல்லப் போறன். கெதியாய் வா. என்ன செய்வம் எதுக்கும் இன்னும் கொஞ்சம் போவம். அட மழையும் பெய்யுது. எனிப் போகேலாது. ராணி வரட்டும். மனிசன் ஒரு பக்கம் மழை ஒரு பக்கம். பரமற்ற ஆட்டுக் கொட்டில் ஒதுக்கில நிப்பம் ராணி வரப் போவம். கடல் இஞ்சை வராது.

வசந் : ஓ கள்ளன் வசமாய் மாட்டிப்போட்டார். கிட்ட வரட்டும் வா, வளமாய் வா. களவு எடுப்பியோ? ஆடு வேணுமோ?

பாய் : ஐயோ அடியாத ஐயோ அடியாத கடவுளே காப்பாத்து.

வசந் : இறைச்சி வேணுமோ கள்ளா, கடவுள் காப்பாற்றோ. கடவுளுக்கு இறைச்சி குடுக்கிறனியே.

பாய் : ஐயோ சாகிறன் அடியாத.

வசந் : கள்ளன் இல்லை ஆட்டுக் கள்ளி. அப்பு ணேய் ஓடி வாணை. ஓடினாள் சீலையைப் பிடிச்சன். அப்பதான் தெரியும் அது கள்ளன் இல்லை கள்ளி.

ராணி : தம்பி அடியாதையடா. பாய்க்கியமக்காவடா அடியாதை. பரமண்ணை ஓடி வாருங்கோ.

பரமர் : (ஓடி வருதல்) டேய் வசந்தன் அடியாதை.

வசந் : அப்பு குடுத்தன். குணமாய்க் குடுத்தன். குளறக் குளற இறைச்சி தாறதோ எண்டு கேட்டுக்கேட்டுக் குடுத்தன்.

ராணி : உடைஞ்சு போட்டு மண்டையிலும் அடி. கடவுளே சாகிறாவோ தெரியாது. ஐயோ அவ சுனாமி எண்டு ஓடி வந்தவ. என்னைப் பாத்து பாவம் மனிசி.

செல் : அவன் மூளை குறைஞ்சவன். ஒண்டும் விளங்காது. அடி எண்டால் அடிப்பான் விடு எண்டால் விடுவான்.

பரமர் : பிள்ளை போனில காசு கிடக்கே. ஆட்டோகாரனுக்குப் போன் பண்ணுவம்.

செல் : நம்பர் தெரியுமோ.

பரமர் : இல்லையப்பா உவன் சாத்திரியாற்றை மணியத்துக்கு எடுப்பம். அவன் கெட்டிக்காரன். ஆரை எண்டாலும் கொண்டுவருவன்.

செல் : ஓ அவனுக்குத்தான் அடியுங்கோ.

பரமர் : கலோ, ஓ, உடன, வீட்டடிக்கு

செல் : என்னவாம்.

பரமர் : வருகுது வருகுது
முகத்தைக் கழுவி சீலை கிழிச்சுக் கட்டுங்கோ. இரத்தம் நிக்கட்டும்.

ராணி : உந்த நாய் மனிசன் எங்கை போச்சுதோ, அறிஞ்சால் அது பெருங் கரச்சல்.

(ஆஸ்பத்திரி போதல்)

காட்சி மாற்றம்

வீர : பாய்க்கியம் இல்லை. அது ஒரு லூசு எப்பன் எண்ண முந்தி எங்கேயேனும் ஓடிவிடும்.

சட் : பள்ளிக்குடத்துக்குத்தான் போயிருப்ப.

வீர : பொறு உவள் ராணியைப் பார்ப்பம். ராணி ராணி ம் சரி அவளும் இல்லை சாடிக்கு மூடி.

சட் : இரண்டு பேரும் நல்ல சோடி

வீர : லூசுச் சோடி விசருகள் இனி எங்கை தேட.

(போன் வருதல்)

(கலோ) எட மனிசன் படுகிற பாட்டுக்கை போன் எடுக்குது பரதேசி.

சட் : சரி ஆரெண்டு பாரன். பாய்க்கியம் தானோ?

வீர : நம்பரைப் பார்.

சட் : இது வெளிநாட்டு நம்பர்.

வீர : எட எட பிள்ளை மோன் ராசனா. கலோ தம்பி அப்பாதான் சொல்லு. என்ன அம்மா எங்கை? அம்மாவின்ர நம்பர் அடிக்குது ஆன்சர் பண்ணாவாம். இதென்ன பேந்து. சரி சுனாமி வருதெண்டு பள்ளிக்குடம் பக்கம் போயிட்டா பாத்து கூட்டி வாறன். சீ சீ அதொண்டுமில்லை. சரி வை வைக்கிறன்.

குமார் : என்ன வீரகத்தியர் வேகமா உங்கால?

வீர : ஓமடாப்பா பாய்க்கியமக்காவை கண்டியா?

குமார் : ஒரு நேரம் காணாட்டால் இருக்கமாட்டாய் ஓடித் திரியிறாய். அவ போனால் போகட்டும் புதிசாய் ஒண்டைப் பாப்பம் பாக்கட்டே.

வீர : போடா நாயே உனக்குப் பகிடி அம்பிட்டால் இப்ப மூஞ்சை உடையும்.

குமார் : அண்ண வாசிகசாலையடியிலை பாத்தியே?

வீர : அங்க நிண்டுதான் வாறன். பள்ளிக்குடப் பக்கம் போயிருப்பா. இப்ப பதிஞ்சு போட்டு நிப்பா. இல்லாட்டா பாசல் குடுக்கிறவைக்கு பக்கத்தில நிப்பா பயப்பிடாத.

சட் : மாடு செத்தவன் செத்துப்போச்செண்டு அழ, திண்டவன் கொழுப்பில்லை எண்டழுதானாம்.

வீர : நீ ஒரு சட்டம்பி, இந்த நேரம் என்ன கதைக்கிறாய். செத்தவன் கெட்டவன் எண்ட அபசகுனக் கதை கதையாதை ஓ.

சட் : எட என்னில பாயாத நட.

வீர : பள்ளிக்குடத்துக்கையும் ஒருத்தரும் இல்லை. எங்கை போயிருப்பாகள். விதானை வீட்டை போயிருப்பா களோ வா எதுக்கும் வீட்டை போவம்.
சட்டம்பி! என்னடா செய்வம் பொடியனுக்கு என்ன சொல்ல.

சட் : இப்ப என்ன நடந்துபோச்சு மனசை விடாதையுங்கோ. வருவாதானே சுனாமி அடிக்கயில்லை பேந்தேன் யோசிப்பான்.

வீர : சுனாமி அடிக்கயில்லைத்தான். எனக்கு உள்ளுக்கை சுனாமி சுழண்டு சுழண்டு அடிக்குது. போனும் வேலை செய்யாதாம் என்னறுப்போ லைற்றை எடு. அடிப்பாத்துப் போவம்.

சட் : அண்ணை அங்கால தரவை கழித்தறை. என்னண்டு அடிப் பாக்கிறது. சரி போவம் ஆளில்லாட்டால் அடியெண்டாலும் கிடக்கும்.

வீர : அதுக்குள்ள ஒரு நக்கல்.

சட் : பின்ன என்ன உங்கடை மனசை ஆத்த.

வீர : விசர்க் கதையை விட்டிட்டு நட. உதார் சரவணனே உவனைக் கேட்டுப்பாப்பம்.

சர : என்ன விலாசம் வீரகத்தியா உங்கடை விலாசம் இதோடை ஏறிவிட்டுது. ஓ உண்மையா ஏறிவிட்டுது உச்சியில் ஏறிவிட்டுது.

வீர : டேய் என்ரை மனிசி பாய்க்கியத்தைப் பாத்தனியே எங்கயேனும்.

சர : பாத்தனியோ? உனக்குத் தெரியாமல் ஆட்டுக் களவுக்குப் போனவாவே. இல்லைக் கேட்கிறன் போனவாவே.

வீர : டேய் விசரா வெறிக்கதை கதையாதை. பிடிச்சா நாரி முறிச்சுப்போடுவன்.

சர : வெறியோ? நாங்கள் என்னத்தைச் சொன்னாலும் வெறிகாரன்.

வீர : பொறுக்கி பொத்தடா வாயை.

சர : ஓ நான் வெறிகாரன் தான். வெறிகாரன் எப்ப எதைச் சொன்னாலும் உண்மையைத்தான் சொல்லுவன். அவன்ரை வாயில இருந்து பொய் எண்ட வார்த்தை வராது. உன்ரை பாய்க்கியம் பரமற்ரை ஆட்டுப் பட்டியிக்கை ஆடு பிடிக்கப் போய் அம்பிட்டுப் போனா. அவங்கள் மொத்து மொத்தெண்டு மொத்தி விளாசு விளாசெண்டு விளாசி ஆள் முடியப் போகு தெண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்விட்டாங்க.

வீர : வேசமோனே உனக்கு

சட் : அண்ணை விடுங்கோ அவன் வெறிகாரன்

வீர : சட்டம்பி என்னவிடடா இவனை இல்லாமல் செய்யிறன்

சர : என்னைப் பதம் பாக்கிறதை விட்டிட்டு பாவம் அந்த மனிசியைப் போய்ப் பார். அதுதான் மனிசத்தனம். ஓ நான் வெறிகாரன்.

(வீரகத்தி பரமர் வீடு போதல்)

வீர : பரமா டேய் பரமா வாடா நாயே வெளியில வாடா பெம்பிளைக்கு அடிக்கிறது கெட்டித்தனமோடா வெளிக்கிடடா ரோசமுள்ள ஆம்பிள எண்டால் வாடா டேய் வாடா.

சட் : வா அண்ணை அங்கை ஒருத்தருமில்லை.

வீர : எங்கை வாறது. விலாசம் வீரகத்தி தான் தனிய நிக்கிறன். எத்தினை பேரெண்டாலும் வாருங்கோ.

செல் : ஆர் உங்கை கத்துறது.
எட இவர் வீரகத்தி. விசயம் தெரியாமல் இது வேற கத்துது. அண்ண ஏன் விளங்காமல் கத்துறியள். அவ ஆஸ்பத்திரியில. அதைப் பாருங்கோ. பிறகு வாருங்கோ எல்லாம் சொல்லுறன்.

வீர : போறன். நீ ஒரு பொம்பிளை. உங்களைப் போல பொம்பிளைக்கு அடிக்கிற ஆள் நான் இல்லை. உன்ரை புருசன் வரட்டும். வாறன் பிறகு.

செல் : ஓ, நீ போவிட்டு வா. தாராளமாய் வா.

## *காட்சி : 4*

*இடம் : மருத்துவமனை*

*பாத்திரங்கள் : வீரகத்தி, சட்டம்பியார், பாய்க்கியம், மிஸ்*

வீர : பாய்க்கியம்

சட் : மிஸ் பேசண்டின்ற கஸ்பென்ட் இவன். இப்ப பாக்கலாமோ பேசன்ரை ....

வீர : ஓம் பிள்ளை நான்தான் அவவின்ரை மனிசன் வீரகத்தி. பாக்க

மிஸ் : இல்லை தலையிலை பட்ட அடி சறுக்கினதால லேசான காயம் பறவாயில்லை இரத்தம் நிண்டிட்டு. உடன வந்ததால உயிராபத்தில்லை. உடம்பிலதான் உட்காயங்கள் இருக்கும்.

வீர : கதைக்கிறாவே.

மிஸ் : அனுங்கி அனுங்கிக் கதைக்கிறா. பயப்பிடுகிற அளவுக்கு ஒண்டுமில்லை. ஐயா வருவார். நிக்காதையுங்கோ போங்கோ.

வீர : பிள்ளை ஒருக்கால் பாக்கலாமே.

மிஸ் : ஐயா நீங்கள் என்ன சின்னப்பிள்ளையே. நான் என்ன வேற பாசையிலயே சொல்லுறன். தமிழ்லதான் சொல்லுறன்.

(அடுத்த நாள் காலை நேரம்)

மிஸ் : பெரியவர் ஐயா போய்விட்டார் போய்ப் பாருங்கோ.

வீர : பாய்க்கியம் என்னை மன்னிச்சுக்கொள்.
என்ரை பிடிவாதத்தால, வரட்டுக் கௌரவத்தால, விட்டுக் கொடுக்காத முரட்டுக் குணத்தால, அலசி ஆராஞ்சு பாராத அவசர புத்தியால, ஊரோட ஒத்துப் போகாத மக்காய் போன மனத்தால, உயிரிலும் மேலான உன்னை

பாய் : போதும் என்ன சின்னப் பிள்ளை மாதிரி. நான் நல்லாத் தான் இருக்கிறன். உள் நோத்தான்.

சட் : டொாக்டர் எக்ஸ்ரே எடுத்தவரே.

பாய் : ஓம் ஓம் மிஸ் வாறா வெளியிலை

மிஸ் : நில்லுங்கோ ஐயா எக்ஸ்ரே வந்திட்டுது. நீங்கள் செய்த புண்ணியம் உங்கட குலதெய்வம் காப்பாற்றிப் போட்டுது.

வீர : அந்தப் பிள்ளையார்தான். நான் நேர்த்தி வைச்சனான். பிள்ளையார் விரதம் பிடிப்பன். ஓ

மிஸ் : ஐயா வந்த உடன ரிக்கற் வெட்டுவினம், வீட்டை போகலாம்.

சட் : கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேணும். எனி அங்கை சண்டை போடுறதில்லை.
சட்டம்பி, சரி ஒத்திகை பார்த்தாச்சு ஒற்றுமையும் வந்தாச்சு எனி சண்டை போடுறதில்லை.

சட் : சிரிக்கிறியே விலாசம் வீரகத்தி சிரியாமல் எனி மேடை ஏத்திற வேலையைப் பார்ப்பம்.

# 2017ம் ஆண்டிற்கான 'கலைச்சாகரம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படும் கலைஞர்கள்



01) **திரு.செல்லையா வேலுப்பிள்ளை**
ஆழியவளை
பிறந்த திகதி :- 10.05.1936
ஈடுபாடுள்ள கலைத்துறை :- நாடகம்

ஆழியவளையில் 10.05.1936 இல் பிறந்த இவர் தனது 18 ஆவது வயதிலிருந்து நடிப்புத் துறையில் ஈடுபட்டுவந்துள்ளார். ஆழியவளையைச் சேர்ந்த சின்னையா துரைச்சாமி அவர்களின் வழிநடத்தலில் சமூக நாடகங்களையும், காத்தவராயன் கூத்தினையும் பயின்று பல மேடைகளைச் சிறப்பித்துள்ளார். பெண் வேடம் ஏற்று நடிக்கும் இவருக்கு ரத்தக்கண்ணீர் நாடகம் பெரும் வரவேற்பினைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இதில் காந்தாவாக பெண் பாத்திரம் ஏற்று நடித்துப் பாராட்டுப் பெற்றுள்ளார்.

இந் நாடகம் ஆழியவளைக் கிராமம், பண்டகைப் பிள்ளையார், உடுத்துறை ஐந்தாம்பனைப் பிள்ளையார், திரியாய் அம்மன் கோவில், மருதங்கேணி கடற்கரைப் பிள்ளையார், உடுத்துறைக் கிராமம், பாளையடிப் பிள்ளையார், வெட்டுமுருகன் ஆலயம் எனப் பல இடங்களில் மேடையேற்றப்பட்டது.

அத்துடன் காத்தவராயன் நாடகத்தில் கறுப்பாஜி ஆகவும், பொன்முடி நாடகத்தில் பூங்கோதாவாகவும் நடித்தமையும் இவருக்குப் புகழினைத் தேடிக் கொடுத்தது எனலாம்.

எனவே இவரது கலைச் சேவையினைப் பாராட்டி வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவையினர் தமது உயரிய விருதான ''கலைச்சாகரம்'' விருது வழங்கிக் கௌரவித்து மகிழ்கின்றனர்.

## 02) திரு. பிலிப்பு கபிரியேல்ப்பிள்ளை



கட்டைக்காடு முள்ளியான்
பிறந்த திகதி :- 1942
ஈடுபாடுள்ள கலைத்துறை :- கூத்து (தென்மோடிக்கூத்து), கப்பல் பாட்டுப் படித்தல், பின்னணிப்பாட்டுப் பாடல்

கட்டைக்காட்டில் 1942 இல் பிறந்த இவர் தென்மோடி நாடகங்களில் நடித்தும் கப்பல் பாடல், நாடகங்களிற்கான பின்னணிப் பாடல்களினைப் பாடியும் வருகின்றார். இளையப்பா, இராசாத்தம்பி, சாமிநாதன், ஏ.கே.செபமாலை, பிலிப்பையா, முத்துராசா போன்ற அண்ணாவிமார்களிடம் நாடகத்தினைப் பயின்றுள்ள இவர் கட்டைக்காடு, பூனைத்தொடுவாய் போன்ற இடங்களில் பல மேடைகளில் நடித்துமுள்ளார்.

பாடசாலைக் காலம்முதல் இற்றைவரை கலைத்துறையில் ஈடுபட்டுவரும் இவர் 1974இல் கண்டியரசன் நாட்டுக்கூத்தில் முன்கண்டியரசனாகவும் 1980இல் மரியதாசன் நாட்டுக்கூத்தில் முன்ராசாவாகவும் 1981இல் பொன்னின் செபமாலை நாட்டுக்கூத்தில் ராசாவாகவும் 1983இல் அகிநேசகன்னி நாட்டுக்கூத்தில் பின் ராசாவாகவும் 1985இல் ஞானசௌந்தரியில் சினியோன் ராசாவாகவும் 1986இல் மாரியன்னையின் புதுமையில் பின் நாடகக்காரனுக்கு பிற்பாட்டுப் பாடியும் 2015 இல் மரியதாசன் நாட்டுக்கூத்தில் மாறுவேடத் தோழியாகவும் பேயாகவும் இரட்டை வேடம் ஏற்றும் நடித்ததுடன் 2004 பொன்னின் செபமாலை நாட்டுக்கூத்தினையும் 2016 இல் ஞானசௌந்தரி நாட்டுக் கூத்தினையும் பழக்கி மேடையேற்றியுள்ளார்.

எனவே இவரது கலைச் சேவையினைப் பாராட்டி வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவையினர் தமது உயரிய விருதான ‘‘கலைச்சாகரம்’’ விருது வழங்கிக் கௌரவித்து மகிழ்கின்றனர்.

03) **திரு. அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா**



கட்டைக்காடு முள்ளியான்
பிறந்த திகதி :- 26.05.1947
ஈடுபாடுள்ள கலைத்துறை :- நாடகம் (தென்மோடிக்கூத்து சமூக நாடகம் நடித்தல்), கப்பல் பாட்டுப் படித்தல், பின்னணிப்பாட்டுப் பாடல்

கட்டைக்காட்டில் 26.05.1947 இல் பிறந்த இவர் தென்மோடிக் கூத்து, சமூக நாடகம் என்பவற்றில் நடித்தும் கப்பல் பாட்டு, நாடகத்திற்கான பின்னணிப் பாட்டுக்களினையும் பாடி வருகின்றார். பாடசாலைக்காலம் முதல் சமூக நாடகங்களில் நடித்துவந்த இவர் இளையப்பா, இராசாத்தம்பி, சாமிநாதன், இராசகிளி, ஏ.கே.செபமாலை, அல்போன்ஸ், முத்துராசா, பிலேந்திரன் போன்ற அண்ணாவிமார்களிடம் தென்மோடி நாடகத்தினைப் பயின்று அவற்றினை கட்டைக்காடு பூனைத்தொடுவாய் போன்ற இடங்களில் மேடையேற்றி நடித்தும் உள்ளார்.

இவர் 1974ல் ஆட்டுவாணிகன் நாட்டுக்கூத்தில் சேனாதிபதியாகவும், 1975ல் கெனகப்பு நாட்டுக்கூத்தில் முன்நாடகக்காரனாகவும் 1979ல் விஜயமனோகரன் நாட்டுக்கூத்தில் முன்விஜயனுக்கும், 1981ல் அகிநேச கன்னி நாட்டுக்கூத்தில் மந்திரியாகவும் 1986ல் மரியதாசன் நாட்டுக்கூத்தில் முன்மரியதாசாகவும், 2016ல் ஞானசௌந்தரி நாட்டுக்கூத்தில் தர்மராசாவாகவும் 2017ல் சோசப்பாஸ் நாட்டுக்கூத்தில் குடியானாகவும் நடித்துள்ளார்.

எனவே இவரது கலைச் சேவையினைப் பாராட்டி வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவையினர் தமது உயரிய விருதான "கலைச்சாகரம்" விருது வழங்கிக் கௌரவித்து மகிழ்கின்றனர்.

## 04) திரு. அருணாசலம் விஜயரத்தினம்



ஆழியவளை

பிறந்த திகதி :- 13.06.1948

ஈடுபாடுள்ள கலைத்துறை :- நாடகம் (சமூக நாடகம், சரித்திர நாடகம், புராண நாடகம், காத்தவராயன் கூத்து)

பருத்தித்துறையில் 13.06.1948 இல் பிறந்த இவர் திருமண பந்தத்தின் வாயிலாக ஆழியவளையில் வசித்து வருகின்றார். 42 வருடங்களிற்கு மேலாக சமூக நாடகங்கள், சரித்திர நாடகங்கள், புராண நாடகங்கள் என்பவற்றினை எழுதியும் நடித்தும் இயக்கியும் வரும் இவர் ஒப்பனைக் கலைஞராகவும், கிராமியக் கலைகளான கரகம் கட்டுதல், பழக்குதல், நாடகத்திற்குத் தேவையான முடி ஒப்பனைப் பொருட்கள் தயாரித்தல் நாடகத்திற்கான சீன் கீறித் தயாரித்தல், களிமண், கடதாசிக்கூழில் பொம்மைகள், குதிரை தயாரித்தல் வாள்வீச்சுக் கலை போன்ற திறமைகளையும் கொண்டுள்ளார் என்பதுடன் சிறந்த வர்ணப் பூச்சாளருமாவார்.

இவ்வாறு இவர் எழுதி, இயக்கி, நடித்த நாடகங்களாக 1975 ஆண்டவன் சோதனை, 1977 தொடக்கம் 1978 வரை சூழ்ச்சியின் வீழ்ச்சி, 1982ல் தவசி பெற்ற வரம், 1997 ல் சிங்கபுரிக் காவலன், மனம் மாறியது - சிறுவர் நாடகம், 2015 சூரபத்மன் என்பவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் பிறர் எழுதி இயக்கிய நாடகங்களான நல்லவன் வாழ்வான், பண்டாரவன்னியன், முறைப்பெண், அண்ணனா? தம்பியா?, மாதுளம்பூ, அரிச்சந்திரா போன்ற பலதரப்பட்ட நாடகங் களிலும் நடித்துள்ளார்.

இதில் நல்லவன் வாழ்வான் நாடகத்தில் கிழவன், வைத்தியன், வேடன் என்னும் முன்று வேடங்கள் தாங்கியும், அண்ணனா? தம்பியா? நாடகத்தில் வில்லனாகவும் வைத்தியராகவும் வேடம் ஏற்றும் நடித்துள்ளதுடன், அரிச்சந்திரா நாடகத்தில் அரிச்சந்திரனாக நடிகமணி செல்வரத்தினத்தோடு இணைந்து நடித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் இவரது எழுத்துருவில் உருவான கொடி பறக்குது நாடகத்திற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்துள்ளமை பாராட்டத்தக்கது.

எனவே இவரது கலைச் சேவையினைப் பாராட்டி வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவையினர் தமது உயரிய விருதான ''கலைச்சாகரம்'' விருது வழங்கிக் கௌரவித்து மகிழ்கின்றனர்.

05) **திரு. பவுளின்அப்பு எஸ்தாக்கி**

மணற்காடு

பிறந்த திகதி :- 18.10.1951

ஈடுபாடுள்ள கலைத்துறை :- நாடகம் (தென்மோடிக்கூத்து) நாடகம் நடித்தல், அண்ணாவியம் செய்தல்.



முள்ளியான் கட்டைக்காட்டில் 18.10.1951 இல் பிறந்து மணற்காட்டில் வசித்துவரும் இவர் 1969 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை தென்மோடி நாட்டுக்கூத்தின் பிரதான நடிகனாகவும் அண்ணாவியாராகவும் விளங்குகின்றார்.

1970 ஆம் ஆண்டில் ஏ.கே.செபமாலை அண்ணாவியாரின் அண்ணாவியத்தில் 'கற்பரூபவதி' என்னும் நாடகத்தில் நாடகக்காரனாக நடித்துள்ளார். இந் நாடகம் வெற்றிலைக்கேணி தூய அந்தோனியார் ஆலயத்தில் மேடையேற்றப்பட்டது. இந்நாடகத்தில் இவரது சிறந்த நடிப்பிற்காக அண்ணாவி யவர்களால் 'கலைமணி' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் திருஞானதீபன், திருச்செபமாலையின் மகத்துவம், அன்னைமாரி, சகோதரபாசம், சமாரியப்பெண், கெட்ட ஊழியன், ஊசோன் பாலன் போன்ற நாடகங்களில் நடித்துள்ளதுடன் ஒளி பிறந்தது, சமாரியப்பெண், கெட்ட ஊழியன் போன்ற நாடகங்களினைப் பயிற்றியும் உள்ளார்.

எனவே இவரது கலைச் சேவையினைப் பாராட்டி வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவையினர் தமது உயரிய விருதான ''கலைச்சாகரம்'' விருது வழங்கிக் கௌரவித்து மகிழ்கின்றனர்.



............. ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே பிரதேச மட்டத்தில் கலைப் படைப்புக்களை உருவாக்குவதற்கு ஆர்வம் உள்ளவர்களைத் தூண்டும் நடவடிக்கையும் அமைகின்றது.


Tamilpoonka, Nelliady.

9 789553 681010